கல்கி

சிறுகதைச் சிறப்பிதழ்

40 காசு

KALKI 31.1.1971








she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit/CM/ 43


பாதங்களுக்கு அதிகக் கவர்ச்சி...
இரட்டை நிற
வேக நடை
ஸாண்டக்*
பபியா செமிலான்*
சைஸ் 2-6
விலை 10.25
பல நிற
இணைப்புகளில்
கிடைக்கின்றன
* பதிவுபெற்ற வியாபாரச்
சின்னங்கள்
Bata

கல்கி

பொருளடக்கம்


சிறுகதைச் சிறப்பிதழ்

சாதாரண, தை 18 :: ஜனவரி 31, 1971

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சந்தா விவரம் :


	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



சென்னை, எம்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி கே. வெங்கடராமன் (சென்னை, யூனியன் கார்பைட் இந்தியா லிட்.) அவர்களுக்கும், கோபிசெட்டி பாளையம் ஸ்ரீ எஸ். ஜி. ராமகப்பு சாஸ்திரி அவர்கள் குமாரி சௌ. எஸ். ஆர். பார்வதிக்கும் சமீபத்தில் கோபிசெட்டிபாளையத்தில் நடைபெற்ற திருமணத்துக்கும், சென்னை, ஹோட்டல் அசோகாவில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்துக்கும், ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!


விலைவாசி உயர்வு
உலகம் முழுதுமே விலைவாசி உயர்ந்துதான் வருகிறது. அதைப்பற்றிக் கவலை வேண்டாம். வோட்டை மட்டும் எனக்கே போடு!
மக்கள்



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



நீதிமன்றத்தின் மூன்றாவது குட்டு

பிரதமர், அவரது சகாக்கள் ஆகியோரது போக்கு எவ்வளவு சட்ட விரோதமானது என்பது மூன்றாம் முறை நிருபணமாகிவிட்டது. முதலில் பாங்குகளைக் கண்மூடித்தனமாக அரசுடைமையாக்கியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று நாட்டின் தலைமை நீதி பீடமாகிய ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது. பின்னர் ராஜமானியத்தை நிறுத்தி ராஷ்டிரபதியைக் கொண்டு பிறப்பித்த உத்தரவு சட்ட விரோதமானது என்று ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. இப்போது, ஸ்ரீமதி இந்திராவின் கட்சி 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்ற பெயருக்கும், இரட்டைக் காளைச் சின்னத்துக்கும் பாத்தியதை பாராட்டுவதையும் ஸுப்ரீம் கோர்ட் அமுல் படுத்தாமல் நிறுத்தி வைத்துவிட்டது.

தேர்தல் கமிஷன் இவ்விரு உரிமைகளையும் இந்திராவின் கட்சிக்கு வழங்கியிருந்தது. ஆனால் ஸுப்ரீம் கோர்ட் அரசியல் சாஸனம் தனக்கு நீதித் துறையில் வழங்கியுள்ள அதிகாரத்தை மீண்டும் நிலை நாட்டி விட்டது. தேர்தல் கமிஷனின் முடிவை அமுல் படுத்தாமல் நிறுத்தி வைத்துவிட்டது. நடக்கவிருக்கும் தேர்தலில் பழைய காங்கிரஸ், புதுக் காங்கிரஸ் இரண்டுக்குமே இரு நுகத்தடிக் காளைச் சின்னத்தை வழங்குவதற்கில்லை என்பது ஸுப்ரீம் கோர்ட்டின் முடிவு. தற்குறியாகத் தோன்றியுள்ள புதுக் காங்கிரஸுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் என்று நாமகரணம் சூட்டுவதை அது தடுத்திருக்கிறது.

தேர்தல் கமிஷன் அநீதமான முறையில் இப் பெயரை இந்திராவின் கட்சிக்கு அளித்திருந்தது. ஸ்ரீமதி இந்திரா காந்தியின் கட்சியில் இந்திராவே வைத்துள்ள விசுவாசத்தை விட அதிக விசுவாசம் கொண்ட வானொலியும் அவரது கட்சியை மட்டுமே 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்று குறிப்பிடத்தொடங்கியிருந்தது. ஆனால் தலைமை நீதி பீடத்தின் சுதந்திரமாகச் செயலாற்றும் உயர் பாங்கினால் இந்த அநீதங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

ஸுப்ரீம் கோர்ட் மட்டும் இவ்விதம் செயலாற்றாவிடில், நம் தேசத்தில் வரவிருக்கும் தேர்தலில் நேர்மையே அற்ற அம்சங்கள் உட்புகுந்திருக்கும். இந்திராவின் கட்சிக்கே காளைச் சின்னம் என்ற முடிவின்படி, எழுத்தறிவற்ற ஏராளமான மக்களின் வாக்கை அந்தக் கட்சியே பெற இடம் ஏற்பட்டது. ஏனெனில் கணக்கற்ற மக்கள் பழைய காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து வோட் செய்வதாக எண்ணிக் கொண்டு வெகு நாள் பழக்கத்தின் காரணமாக காளைச் சின்னத்தில் முத்திரையிடக் கூடும். இந்த விபரீதத்தைத் தடுத்து விட்டது ஸுப்ரீம் கோர்ட்.

இந்த பாரத தேசத்தில் சட்டத்தின் முடிவான காப்பாளராக ஸுப்ரீம் கோர்ட்டையே அரசியல் சாஸனம் நிறுவியிருப்பது எவ்வளவு பயன் நிறைந்த ஏற்பாடு என்பது இவற்றிலிருந்து நிதரிசனமாகிறது.

பிரதமர் தம் திட்டங்களுக்கு மக்களின் ஒப்புதலைக் கோரித் தேர்தல் நடத்துவதாகச் சொல்கிறார். அவர் கோரும் ஒப்புதலை அளிப்பது என்றால், நீதி, சுதந்திரம், ஸுப்ரீம் கோர்ட், அரசியல் சாஸனம் யாவற்றையும் குசாப்புக் கடைக்கு அனுப்பி விடுவது என்றே பொருள் ஆகும். இவ்விதம் நேருவதற்கு ஒருகாலும் அநுமதிக்கலாகாது. தேர்தலின்போது ஆள்கிற கட்சிக்கு எவ்வளவு பண பலம் இருப்பினும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் வாய்ப்பு இருப்பினும், நம்நாடு மேற்கூறிய விபரீதம் நிகழ அநுமதியாது என்றே நம்புகிறோம்.

'ஜீவாதார சுதந்திர உரிமைகள் என்று சாஸனத்தில் கூறப்படும் ஒருசில ஷரத்துக்களை மட்டும்தானே பிரதமர் நீக்க விரும்புகிறார்? மற்றபடி சாஸனம் அப்படியே இருக்குமல்லவா?' என்று அறியா மக்கள் எண்ணக் கூடும். படிப்பறிவு பெற்றவர்களிடை கூட இவ்விதமாக

எண்ணும் மக்கள் உள்ளனர். ஆனால் பெரிய மனித சரீரத்தில் உள்ள சிறிய அங்கமான இதயம் போல், இந்த ஒருசில ஷரத்துக்கள்தாம் சாஸனத்துக்கே இதயமாகும். இதயத்தை எடுத்தெறிந்து விட்டு ஒரு மனிதனை உயிருடன் வைத்திருக்க இயலுமா? உயிர் வாழ வேண்டுமாயின் இதயம் துடிக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வாறே சுதந்திர ஜனநாயக வாழ்வுக்கு இந்த ஜீவாதார உரிமைகளும், நீதி மன்றங்களின் சுதந்திரமும் அத்தியாவசியமாகும்.

சுதந்திரத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட அறிஞர்கள் ஒன்றுகூடி முன்யோசனையுடன் உருவாக்கியதே நமது அரசியல் சாஸனம். அவர்கள் ஜனநாயகத்தில் உண்டாகக் கூடிய ஆபத்துக்களையும், பொது மக்களின் வாக்கைப் பெற்று நிருவாகப் பொறுப்புப் பெறுவோரின் அதிகார சக்தி எப்படியெல்லாம் அபாயகரமாகச் செல்லக்கூடும் என்பதையும் நன்கு கவனத்தில் கொண்டிருந்தனர். ஆள்கிற கட்சி தனது பூரண ஆதிக்க சக்தி காரணமாக முற்றிலும் நெறி கெட்டுப் போகக் கூடும் என்பதையும், எழுத்தறிவற்ற வாக்காளர் எப்படியெல்லாம் ஏமாறக்கூடும் என்பதையும் சாஸன கர்த்தாக்கள் அறிந்தே, சர்க்கார் தலையிடாதபடி அடிப்படைச் சுதந்திரங்களை வகுத்தளித்தனர். அவற்றை நீக்க விரும்பும் பிரதமரின் கட்சிக்குப் போடுகிற வோட்டு, சட்டத்தின் ஆட்சிக்கு எதிராகப் போடும் வோட்டேயாகும்.

(அடிப்படை : ராஜாஜி ''ஸ்வராஜ்யா''வில் எழுதியது.)

என்ன சேதி?

ஒரு நல்ல பணி

முன்னேற்றமடையாத கிராமப்புறங்களில் உள்ள ஏழைப் பெண்களையும் குழந்தைகளையும் பயனுள்ள பிரஜைகளாக்கிப் புனர் வாழ்வு அளிப்பது, கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதி ஏற்பட்டதன் நோக்கம். இதன்படி, கஸ்தூரிபா கிராமம் ஈரோடிலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. கஸ்தூரிபா கிராமத்தின் நற்பணிகளுக்கு உதவும் பொருட்டு திரு மனோஹர் கோஷ்டியினர் ''சூரபதுமன்'' நாடகத்தை பிப்ரவரி மாதம் எட்டாந் தேதி நடத்துகின்றனர். சென்னை மியூஸிக் அகாடெமி அரங்கில் நடக்கும் இந்த நாடகத்துக்கு நூறு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை அவரவரது பொருளாதார வசதிக்கு ஏற்ப டிக்கெட் வாங்கிக் கொண்டு போகலாம். நல்ல நாடகத்தைப் பார்த்து மகிழ்வதுடன் நல்ல காரியத்துக்கு உதவிய திருப்தியையும் பெறலாம்.

பிரதமரின் பச்சோந்தி வேஷம்

விசாகப்பட்டினத்தில் புது எஃகு ஆலைக்குத் தொடக்க [விழா நடத்திய ஸ்ரீமதி இந்திரா காந்தி, சுதந்திரக் கட்சியின் மீதும் திரு என். ஜி. ரங்கா மீதும் ஒரு சாடு சாடினார். ''இவர்கள்தாம் இந்த ஐநூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள எஃகு ஆலை வேண்டாம் என்றனர்'' என்று கூறினார்.

விசாகப்பட்டினத்தை விட்டு புவனேசுவரத்துக்குப் போனார். அங்கு மக்கள் தங்களுக்கு மற்றொரு எஃகு ஆலை வேண்டும் என்று கேட்டனர். அதற்கு, ''சில எஃகு ஆலைகள் நிறுவிவிட்டால் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்து விடப் போகிறது? நமது பிரச்னை தீர்ந்து விடாது. சிறு சிறு தொழிற்சாலைகளை ஏராளமாகத் தோற்றுவிக்க வேண்டும். இதுதான் நமது பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கும்'' என்று பதில் சொல்லியிருக்கிறார்.

விசாகப்பட்டினத்தில் சுதந்திரக் கட்சியின் கருத்தை விஷமத்தனமாக திரித்துப் பேசிவிட்டு, புவனேசுவரத்தில் சுதந்திரக் கட்சியின் கருத்தையே எடுத்துச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார். இடத்துக்கு இடம் பச்சோந்தி மாதிரி தமது வண்ணத்தை — கருத்துக்களை மாற்றிக் கொண்டு போவது பிரதமருக்கு அழகல்ல.

பி. டி. ராஜன் எச்சரிக்கை

''இன்று ஜனநாயகம் பேராபத்தில் சிக்கியுள்ளது. நாட்டில் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் மதிப்பே இல்லை. நேருவின் வாரிசு, ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர் போல் நாடாளும் உரிமை பெற்றிருப்பதாக எண்ணி எதேச்சாதிகாரம் செய்து வருகிறார். இதனைக் கண்டித்து ராஜாஜி போராடி வருகிறார்!'' என்று தமிழ வேள் திரு பி. டி. ராஜன் அவர்கள் தமது நீதிக் கட்சியின் துலாக்கோலைப்போல் நடுநிலையில் நின்று பேசி எச்சரிக்கை செய்திருக்கிறார்.

திரு பி. டி. ராஜன் அவர்களுக்கு தி.மு.க.வினரிடம் சற்றுப் பற்றும் பாசமும் இருக்கிறது என்ற பொது அபிப்பிராயம் உண்டு. எனவே அவரது அறைகூவல் விசேஷ கவனத்துக்கு உரியது.

ராஜாஜியின் கருத்துக்கள்

பிரதமரின் சாஸன விரோதமான யதேச்சாதிகாரத் திட்டங்களை எதிர்த்து ஒன்று சேர்ந்துள்ள ஜனநாயகக் கட்சிகள் தமது தனித் தனிக் கொள்கை யறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. தத்தம் கட்சிக்காரர்கள் தமது தனி உருவைப் பேணிக் காத்துக் கொள்வதற்காகவே இவ்விதம் கூட்டணிக் கட்சி ஒவ்வொன்றும் தனித்தனியே கொள்கைப் பிரகடனம் செய்கின்றன. இந்தக் கொள்கை யறிக்கைகளில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு அதிக முக்கியத்வம் அளித்துவிட வேண்டாம் என மக்களை எச்சரிக்க விரும்புகிறேன். கம்யூனிஸப் போர்வையின் கீழ் ஆட்சி ஏற்பட்டுவிடாதவாறு தேசத்தைக் காப்பாற்றுவதொன்றே இன்று மகத்தான பொது நோக்கமாகும். மற்ற விஷயங்கள் நீக்குப் போக்குள்ளவை;

சந்தர்ப்பங்களைப் பொறுத்து அவை நெகிழ்ந்து கொடுக்கக் கூடியவை. இதைக் கருத்தில் கொண்டு, யதேச்சாதிகாரத்தைத் தடுப்பதற்கே ஜனநாயகக் கூட்டணி என்ற முக்கிய அம்சத்தைக் கவனித்து அதற்கு வாக்களிக்க வேண்டும்.

★

வாக்காளர்களுக்கு வழங்கும் அடையாளச் சீட்டுக்களில் வேட்பாளரின் பெயரையோ, கட்சியின் பெயரையோ, சின்னத்தையோ பிரசுரிக்கக் கூடாது என்று தேர்தல் கமிஷன் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் எடுத்துக் கூறியுள்ளது. வாக்குச் சாவடி அதிகாரிகள் வாக்காளரின் பெயரைப் பட்டியலில் எளிதில் கண்டுகொள்வதற்கு வசதியாக இந்த அடையாளச் சீட்டுக்களை வேட்பாளர்களின் ஏஜண்டுகள் வழங்கி வருகின்றனர். இந்தச் சீட்டு வெள்ளைத் தாளில் இருக்கவேண்டும் என்றும், வாக்காளரின் பெயர், பட்டியலில் அவரது எண்ணிக்கை, அவரது குறிப்பிட்ட சாவடி இவை மட்டுமே இதில் இடம் பெற வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கூறுகிறது.

இந்த அடையாளச் சீட்டுக்களை வேட்பாளர்கள் வழங்காமல், அரசாங்கமே வழங்க வேண்டும் என்று நான் நீண்ட காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். வாக்காளர்களுக்குத் தகவல் தருவதும், வேட்பாளருக்காகப் பிரசாரம் செய்வதும் வெவ்வேறு விஷயங்கள். இவற்றைக் கலக்கலாகாது. வாக்காளருக்குப் பட்டியல் எண்ணிக்கை தெரிவிப்பதும், அவரது வாக்குச் சாவடியை அறிவிப்பதும் சர்க்காருக்கு உரிய கடமை. தேர்தல் கமிஷனின் புது விதிகள் நல்லவைதாம். ஆயினும், வேட்பாளர் — கட்சி ஆகிய பிரஸ்தாபமே இல்லாமல் அடையாளச் சீட்டுத் தரும் பொறுப்பை அரசாங்கத்திடம் தராமல், வேட்பாளரிடம் ஏன் தரவேண்டும்? பிரசாரத்தைத் தவிர்த்து தகவல் மட்டுமே தரவேண்டும் என்கிற விதியை ஏதாவது ஒரு வழியில் ஏய்க்கவே முயலப்படும். கமிஷனுக்குச் சீர்திருத்தம் குறித்து நல்ல யோசனை உள்ளது. ஆனால் கமிஷனின் நோக்கம் நிறைவேற இன்னும் சக்தி வாய்ந்த முறையில் கமிஷன் செயல்பட வசதிதரவேண்டும்.

★

தூத்துக்குடியைச் சேர்ந்த ஒருவர் எழுதியுள்ள கடிதம் அடியில் பிரசுரிக்கப்படுகிறது. அவர் கூறுவது முற்றிலும் சரியே.

> ''காளைச் சின்னத்தைக் காங்கிரஸின் இரு பிரிவுகளுமே உபயோகிக்கலாகாது என நியாயமாக முடிவாகியுள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, நமது தேசியக் கொடியைப் போலவே பெரும்பாலும் தோன்றுகிற காங்கிரஸ் கட்சிக் கொடியை அதன் இரு பிரிவுகளும் உபயோகிக்கலாகாது என ராஷ்டிரபதி தடை செய்யலாம். இதனால் இரு கட்சிகளிடையிலும் உள்ள மனக் கசப்பையும் ஓரளவு குறைக்கலாம்.''

திருத்தம்

17–1–1971 கல்கி இதழின் 6-ம் பக்கத்தில் 'ஆஸ்திக அன்பர் உதவுக! இசையன்பர் ஊக்குக!' என்று தலைப்பிட்டு வெளியாகியுள்ள திருப்பணி வேண்டுகோளில் ஏற்பட்டுள்ள ஒரு தவற்றினை எடுத்துக் காட்டி இத் திருப்பணிப் பொருளாளர் ஸ்ரீ பி. இ. ஆள்வார் எழுதியுள்ள கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம். தவற்றுக்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர்

கல்கி ஆசிரியருக்கு,


17–1–1971 கல்கி இதழில் வாலாஜாப்பேட்டை திருப்பணி விஷயமாக நிதி உதவி கோரி வெளியாகியுள்ள வேண்டுகோளில் அடிப்படையாக ஒரு பெரும் தவறு நேர்ந்துவிட்டது. திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களின் சார்பிலும், திருப்பணி நிதியைப் பெறுகிறவன் என்ற முறையிலும் தங்கள் கவனத்துக்கு இதைக் கொண்டு வருகிறேன். ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களுக்கும், வாலாஜாபேட்டையில் ஸ்ரீ தியாகப் பிரம்மம் தங்கியிருந்து பக்தி பரப்பிய இல்லத்துக்கும், அந்த இடத்தில் தற்போது நடந்து வரும் பஜனை மடத்துக்கும் ஏதொரு சம்பந்தமும் கிடையாது. நிதி உதவி கோரியது வாலாஜாபேட்டையில் ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களின் முன்னோர்கள் நிர்மாணித்த மிகப் பழைமையான ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் ஆலயத்தின் புனருத்தாரணத்துக்காகவும் அந்த ஆலயத்தின் பிரகாரத்துக்குள் மிகவும் கிலமாகியிருக்கும் பஜனை மண்டபத்தின் இடத்தில் புதிதாக ஒரு மண்டபம் கட்டுவதற்காகவும் மட்டுமே. இந்த நோக்கத்துக்காகவே தமிழக அறநிலைய பாதுகாப்பு சபையிலிருந்து எற்கனவே ரூ. 10,000 மான்யம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காகவே பொதுமக்களிடமிருந்தும் பொருளுதவி கோரப்படுகிறது. மேற்படி ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலுக்குள் புதிதாக நிர்மாணிக்கப்படும் மண்டபத்துக்கு ஸ்ரீ தியாகராஜ பஜனை மண்டபம் என்று பெயர் இடவும் அங்கு ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனைகளும் இசை விழாக்களும் நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாலாஜாபேட்டையில் ஸ்ரீ தியாகப் பிரம்மம் தங்கிய வீடு இப்போதும் அவரது சீடராகிய வேங்கடரமண பாகவதரின் வாரிசுகளின் உடைமையாக உள்ளது. அங்கு ஸ்ரீ தியாகையருக்கு ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் எமது திருப்பணிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.


சென்னை–8

பி. இ. ஆள்வார்

ஒரே இனம்: ஒரே மக்கள்



"ஒரே கொடியின் கீழுள்ள ஒரே நாட்டு மக்களிடையே நிறைய ஒற்றுமை இருக்கிறது. நாட்டின் மீது ஒன்றுக' மெய்ப்பற்றுக் கொண்டு, இந்தியா ஒரே நாடு என்று நம்புகிறவர்களிடம் சிறுபான்மையோர் அல்லது பெரும்பான்மையோர் என்னும் பிரச்சினையே எழ முடியாது. எல்லோரும் சமமான சலுகைக்கும் சமமாக நடத்தப்படுவதற்கும் உரிமை உடையவர்கள். நமது கருத்திற்கிசைந்த நாடு, அதன் ஒவ்வொரு அங்கமான பிரதேசங்களுக்கிடையே முற்றிலும் ஒற்றுமையுள்ள மதச்சார்பற்றதா யிருக்க வேண்டும் ;! குடியரசு நாடாகவும் இருக்க வேண்டும்."— மகாத்மா காந்தி



IOL

இண்டியன் ஆக்ஸிஜென் லிமிடெட்

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

61



மனிதர்களாகிய நாம், உயிர் கொண்ட பிராணிகளனைத்தையும் நம்முடைய உறவினர்களாகவும், நம்முடன் ஒரு குடும்பமாகவும் பாவிக்க வேண்டும். இப்படிச் சகல பிராணிகளுடன் சகோதரத்துவம் கொண்டாடுவது நம் உரிமையுமாகும்; கடமையுமாகும்.

பிராணிகளைப் பற்றிய இந்த என் கொள்கை டார்வின் சொன்னபடி குரங்கு மட்டிலுமல்ல — குதிரை, ஆடு, சிங்கம், சிறுத்தை, பாம்பு, தேள் இத்தகைய எல்லா ஜந்துக்களும் அடங்கக் கொள்ளும். அந்த ஜந்துக்களுக்கு இந்தச் சகோதர உணர்ச்சி இருக்க முடியாது. ஆனால் உணர்வு பெற்ற மனிதர்களாகிய நமக்கு இந்தச் சகல உயிர் சகோதர உணர்ச்சி கடமையாகும். இது என்னுடைய கொள்கை. என்னுடைய வாழ்க்கைக்கு இது அடிப்படையான தர்மம். எல்லாருமே இந்தத் தர்மத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. மனிதனுக்கு ஆண்டவன் ஞானம் தந்திருக்கிறான். மற்றப் பிராணிகளுக்கு அது இல்லை. ஞான ஸ்வரூபியான கடவுளின் சிருஷ்டியில் மனிதன்தான் அந்த ஞானத்தில் ஒரு பங்கை உடைமையாகப் பெற்றிருக்கிறான். இப்படி ஞானம் பெற்ற மனிதன் சகல ஜந்துக்களிடமும் சகோதர மனப்பான்மை கொள்ள வேண்டும். சிலருக்கு இந்த ஞானம் இல்லாமலிருக்கலாம்: அல்லது இருந்து மழுங்கிப் போயிருக்கலாம். அவர்கள் கிடக்கட்டும். தன்னுடைய மேன்மை அறிந்த ஒவ்வொரு மனிதனும் அந்த மேன்மையின் கடமையாகிய சர்வஜந்து சகோதரப்பான்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

ஞானம் என்ற தெய்விகப் பான்மையை தான் அடைந்திருப்பதை ஒருவன் அறியாமல் இருக்கலாம். ஆட்டு மந்தையில் ஆடுகளுடன் ஆடாக வளர்க்கப்பட்ட சிங்கக் குட்டி சில நாட்கள் வரையில் தன்னையும் ஆடாகவே பாவித்து நடந்து கொள்ளும். ஆனால் நாள் செல்லச் செல்லத் தன் உண்மை சொரூபத்தை அது கண்டுகொண்டு விடும். தான் சிம்மம், ஆடு அல்ல என்று அறிந்து கொண்டுவிடும். மனிதனும் தன் தெய்விகப் பான்மையை முதலில் அறியாவிடினும் பிறகு உண்மையைக் காண்பான். தெய்விக மனப்பான்மையை அடைவான்.

எல்லாருமே இவ்வாறு ஞானம் பெறாவிடினும், ஒருவன் அறிவை அடைந்தால் அது போதுமல்லவா? பிற மக்களுக்கு அது உரிமையாகும். இந்தச் சக்தி மனித ஜன்மத்துக்கு உண்டு என்பதை நிரூபிக்க உலகத்தில் பெரியோர்கள் பலர் ஞானிகளாக விளங்கித் தங்களுடைய தெய்விகப் பான்மையை நிரூபித்திருக்கிறார்கள். நாம் ஏன் சந்தேகப்பட வேண்டும்? அனைவருக்கும் இந்தச் சக்தி உண்டு. உள்ளத்தில் விருப்பமும் மன உறுதியுமிருந்தால் முடியும். **(யங் இந்தியா, 8-7-1926)**

என்னைக் கேட்டால் ஒரு பாம்பைக் கொன்று அதன் உயிரை மாய்த்து என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பமாட்டேன். அதைக் கொல்வதைவிட அது என்னைக் கடிக்கப் பிரியப்பட்டால் கடிக்கவிட வேண்டியதுதான். இதுவே தருமம் என்பதை நான் அறிவேன். ஆயினும், ஆண்டவன் இம்மாதிரி என்னைச் சோதித்தானானால் நான் அந்தச் சோதனையில் தோல்வியடையலாம். என் உயிரைக் கொடுக்க எனக்குத் தைரியம் வராமற் போகலாம். நானும் தருமம் காணாத சாதாரண ஜந்துவைப் போல் நடந்து கொள்ளலாம். பாம்பைக் கொன்று என் உடலின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இப்படி நான் சோதனையில் தோற்றேனானாலும் என்னுடைய கொள்கை மாறுபடாது. என்னுடைய கொள்கையில் இன்னும் நான் ஆசைப்படும் உறுதி எனக்கு ஏற்படவில்லை. விஷப் பாம்புகளுடன் தைரியமாகவும் அன்புடனும் வாழ இன்னும் நான் கற்கவில்லை. பாம்பைக் கண்டால் பயம் போகவில்லை. அவ்வளவே. அதற்காக இன்னும் முயன்று கொண்டே இருப்பேன்.

நம்முடைய உள்ளங்களில் வேலை செய்யும் கெட்ட எண்ணங்களின் கணக்குக்கு வரம்பு இல்லை. அவற்றைவிட இந்த விஷப் பாம்புகள் கொடியவை அல்ல. நம்முடைய உள்ளங்களில் மறைந்து கிடக்கும் விஷத்தை எடுத்துக் காட்டவே ஆண்டவன் இந்தப் பாம்புகளை நாம் காணும்படி தோற்றுவித்திருப்பதாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய தீய கருத்துகளைப் போலவே இந்தப் பாம்புகளும் புலிகளும்! தீய வடிவம் கொண்ட நம்முடைய எண்ணங்களும் பாம்புகளும் ஒரு குடும்பமாகும். நீங்களும் எங்களைப் போலவே விஷ ஜந்துக்கள் என்று இந்தப் பாம்பும் புலியும் நமக்குச் சொல்கின்றன. அந்த எச்சரிக்கையை உணர்ந்து நாம் நம்முடைய தீய எண்ணங்களை நீக்கிக் கொள்ள வேண்டும்.

விஷப் பாம்புகளையும் மிருகங்களையும் கொல்லுவதற்கு முன் மக்கள் சுகமாக வாழ்வதற்காக என்னுடைய உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் விஷக் கருத்துக்களைப் போக்க வேண்டும். என் ஆயுளை நீடித்துக் கொள்வதற்காக இந்த மிருகங்களையும் பாம்புகளையும் விஷ ஜந்துக்கள் என்று கருதி அவற்றைக் கொல்ல விரும்புகிற நான் எப்படி என்னுடைய உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிக் கொள்ள முடியும்? என் உயிரையே பெரிய பொருளாக மதித்து அதற்காகப் பிற ஜீவன்களை மாய்க்க விரும்பாமல் என் உயிரைத் தத்தம் செய்து விட்டால், அதனால் பிறகு நல்ல ஜன்மத்தையே பெறுவேன். இவ்வாறு உறுதியான ஞானம் அடைந்தேனானால் நான் எப்படி என் ஆருயிரைப் போலவே ஓர் உயிரைப் படைத்த பாம்பைக் கொல்வேன்?

(யங் இந்தியா, 14-4-1927)


சுழலும் பந்து சூட்டும் புகழ்!



பேட்டி : பாணன்

வெளிநாடு செல்லும் கிரிக்கெட் கோஷ்டியின் உபதலைவராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். 'இப் பெருமை முதன் முறையாக உங்களுக்குக் கிட்டியுள்ளது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு, "என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று அடக்கத்துடன் சிரித்தவாறு கூறுகிறார், 25 வயது இளைஞர் வேங்கடராகவன்.

முன்னாள் பரோடா திவான் திரு ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் குடும்பத்தில் பிறந்த வேங்கடராகவனின் உறவினர் அனைவருக்குமே கிரிக்கெட்டில் ஈடுபாடு அதிகம். பத்து வயதிலேயே 'லீக்' கிரிக்கெட் பந்தயங்களில் கலந்து கொண்டு ஆடத் தொடங்கிய இவ்விளைஞர் 'பாட்ஸ்மன்' ஆகத்தான் கிரிக்கெட் வாழ்க்கையைத் துவக்கினார். நாளடைவில் பந்து வீசத் தொடங்கிப் புகழ்பெற்றார். அனைத்துப் பள்ளிகளுக்கான கிரிக்கெட் பந்தயத்தில் நாற்பத்தொரு ஓட்டங்கள் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை வீழ்த்திய வேங்கடராகவனை வருங்காலத்தில் அமோகமாக விளையக்கூடிய பயிர் என்று முளையிலேயே தெரிந்து கொள்ள முடிந்தது.



"ஒரு முறை நீங்கள் இந்திய கோஷ்டியுடன் இங்கிலாந்தில் விளையாடி விட்டு வந்திருக்கிறீர்கள். அந்த அநுபவம் இப்போது மேற்கு இந்தியத் தீவுகளில் விளையாடுகையில் எந்த அளவுக்குத் துணை நிற்கும்?" என்று கேட்கிறேன்.

"அந்த அனுபவம் மேற்கு இந்தியத் தீவுகளில் விளையாடும் போது அவ்வளவாகப் பயன்படாது. மேற்கு இந்தியத் தீவு 'பிட்ச்' (Pitch) களும், சீதோஷ்ண நிலையும் இங்கிலாந்தில் உள்ளவற்றுக்கு மாறானவை. மேற்கு இந்தியத் தீவுகளின் 'விக்கெட்'கள் ஏறக்குறைய இந்திய 'விக்கெட்டு'கள் போன்றவை. அங்குள்ள சூழ்நிலைக்கு நாம் விரைவில் பழக்கப்பட்டுவிட வேண்டியது முக்கியம்."

"மேற்கு இந்தியத் தீவு 'பிட்ச்'கள் வேகமாகப் பந்து வீசுபவர்களுக்கே மிகவும் உகந்தவை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சுழல் பந்து வீசும் (Spin Bowling) உங்களுக்கும், பிரசன்னாவுக்கும், பி. எஸ். பேடிக்கும் அவை அவ்வளவாகப் பிடிக்குமா?"

"மூன்றாவது நாள் ஆட்டத்திலிருந்து அந்த விக்கெட்டுகளும் சுழற்பந்து வீசுபவர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று நம்புகிறேன். 'தலையா? பூவா?' சோதனையில் நமது கோஷ்டி வெற்றி பெற்றால் நிலைமையை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் நம்முடைய 'இன்னிங்'ஸில் அதிக ஓட்டங்களை எடுக்க வேண்டியது மிக அவசியமானது."

"முதல்தரமான சுழற் பந்து வீச்சினை மேற்கு இந்திய 'பாட்ஸ்மென்' அவ்வளவாகத் தாக்குப் பிடிப்பதில்லை; வேகமாகப் பந்து வீசுபவர்களைவிடச் சுழற்பந்து வீசுபவர்களிடம் அவர்களுக்குச் சற்றுப் பயம் என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறதே — அது உண்மையா?"

"அப்படிச் சொல்வதற்கில்லை. சுபாஷ் குப்தே விளையாடிய பொழுதுகூட, அவர்கள் பல இன்னிங்ஸில் 500 ரன்களுக்கு மேல் எடுத்திருக்கிறார்களே? அதுவும் பாரதத்திலேயே?" என்று வேங்கடராகவன் கூறும்போது அவரது பரந்த உள்ளத்தினையும் முன்னெச்சரிக்கையான மனப் போக்கையும் காண்கிறோம்.

"நீங்கள் இதுவரை விளையாடிய 'டெஸ்ட்' பந்தயங்களில் நினைவுறத் தக்க சாதனை எது?"

இயல்பான தன்னடக்கம் காரணமாக எழுந்த தயக்கத்துடன், "புதுதில்லியில் நியூஜிலாந்துக்கு எதிராக நிகழ்ந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் எழுபத்திரண்டு ரன்கள் கொடுத்து எட்டு விக்கெட்டு எடுத்ததும், இரண்டாவது இன்னிங்ஸில் எண்பது ரன்களுக்கு நாலு விக்கெட்டுக்கள் எடுத்ததும்" என்கிறார்.

டேபிள் டென்னிஸ், ஹாக்கி, ஷட்டில், பாட்மிண்டன் ஆகியவற்றிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு.

கிரிக்கெட் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளும் போது 'நெவில் ஷூட்'டின் நூல்களை இவர் படிப்பது வழக்கம். தமிழில் இவருக்குப் பிடித்தமான ஆசிரியர்கள் நாடோடி, தேவன், கல்கி.

"மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்லும் நமது கிரிக்கெட் கோஷ்டியின் தலைவர் அஜீத் வாடேகர், நீங்கள் இருவருமே முதன் முறையாக அங்கு செல்லுபவர்களாயிற்றே? இந்த அனுபவமின்மை ஒரு குறையா?" என்ற கேள்விக்கு முத்து முத்தாக அவரே கைப்பட எழுதித் தந்த பதில்:

'கல்கி' நேயர்களின் வாழ்த்துக்கள்
எனக்கு உறுதுணையாக இருக்கும்
என்று நம்புகிறேன்.

எஸ். வேங்கடராகவன்
19.1.71

மோகினித் தீவு

மூன்றாம் அத்தியாயம்

அமரர் கல்கி

அந்தச் சுந்தர யௌவன புருஷன் சொல்லத் தொடங்கினான்:

"முன்னொரு சமயம் உம்மைப் போலவே சில மனிதர்கள் இங்கே திசை தவறி வந்துவிட்ட கப்பலில் வந்திருந்தார்கள். அவர்களிடம் என்னுடைய கதையைத் தொடங்கியபோது 'எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னால்' என்று ஆரம்பித்தேன். அவர்கள் எதனாலோ மிரண்டு போய் ஓட்டம் எடுத்தார்கள். அப்படி நீர் ஓடிவிட மாட்டீர் என்று நம்புகிறேன். அந்த மனிதர்களைப் போலன்றி நீர் ரசிகத் தன்மை யுள்ளவர் என்று நன்றாய்த் தெரிகிறது. என்னுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே உம்முடைய கண்கள் என் வாழ்க்கைத் துணைவியின் முகத்தை அடிக்கடி நோக்குவதிலிருந்து உம்முடைய ரஸிகத் தன்மையை அறிந்து கொண்டேன்..."

இதைக் கேட்டதும் நான் வெட்கித் தலை குனிந்தேன். அந்த மனிதனிடம் ஏதோ ஓர் அதிசய சக்தி இருக்க வேண்டும். என் அந்தரங்க எண்ணத்தை அவன் தெரிந்து கொண்டு விட்டான். அவன் நான் ஓடிப் போக மாட்டேன் என்று நம்புவதாகச் சொன்னபோது என் மனத்துக்குள் 'நானாவது? ஓடுவதாவது? புது மலரை விட்டுப் பொன்வண்டு ஓடுவதுண்டா? ரதியை நிகர்த்த இந்த அழகியின் முகம் என்னை ஓடிப் போவதற்கு விடுமா?' என்று நான் எண்ணியது உண்மைதான். அந்தச் சமயத்தில் என்னையறியாமல் என் கண்கள் அந்தப் பெண்ணின் முகத்தை நோக்கி யிருக்க வேண்டும். அதைக் கவனித்து விட்டான் அந்த இளைஞன். இனி அத்தகைய தவற்றைச் செய்யக் கூடாது என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

அந்த யுவன் தொடர்ந்து கூறினான்: "நீர் வெட்கப்பட வேண்டாம்; பயப்படவும் வேண்டாம். உம் பேரில் தவறு ஒன்றுமில்லை. இவளை இப்படிப்பட்ட அழகியாகப் படைத்து விட்ட பிரம்ம தேவன் பேரில்தான் தவறு. இவள் காரணமாக நான் எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தால்... சரி, சரி! அதை யெல்லாம் பற்றிச் சொன்னால் இவளுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்துவிடும். கதைக்குத் திரும்பி வருகிறேன். எழுநூறு வருஷங்களுக்கு முன்னால் தஞ்சாவூரில் உத்தம சோழர் என்னும் மன்னர் அரசு புரிந்து வந்தார். அப்போது சோழ ராஜ்யம் அவ்வளவு விசாலமான ராஜ்யமாக இல்லை. ராஜராஜ சோழன் காலத்திலும் ராஜேந்திர சோழன் காலத்திலும் இலங்கை முதல் விந்திய மலை வரையில் பரவியிருந்த சோழ ராஜ்யம் அப்போது குறுகிச் சிறுத்துத் தஞ்சாவூரைச் சுற்றிச் சில காத தூரத்துக்குள் அடங்கிப் போயிருந்தது. ஆனாலும் உத்தம சோழர் தம்முடைய குலத்தின் பழைய பெருமையை மறக்கவே யில்லை. அந்தப் பெருமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய காரியம் எதையும் செய்ய விரும்பவில்லை.

உத்தம சோழருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பெயர் சுகுமாரன்; இன்னொருவன் பெயர் ஆதித்தன். மூத்தவனாகிய சுகுமாரன் பட்டத்து இளவரசனாக விளங்கினான்.

அதே சமயத்தில் மதுரையில் பராக்கிரம பாண்டியர் என்னும் அரசர் ஆட்சி புரிந்து வந்தார். ஆனால் அவர் புராதனமான பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர் அல்ல; தென் பாண்டிய நாட்டைச் சேர்ந்த பாளையக்காரர். தம்முடைய போர்த் திறமையினால் மதுரையைக் கைப்பற்றிப் பராக்கிரம பாண்டியர் என்ற பட்டமும் சூட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு ஆண் சந்ததி கிடையாது. ஒரே ஒரு அருமைப் புதல்வி இருந்தாள். அவள் பெயர் புவன மோகினி. அந்த ராஜகுமாரியின் அழகு, குணம், அறிவுத் திறன் முதலியவற்றைக் குறித்து நான் இப்போது அதிகமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. அப்படிச் சொன்னாலும் இதோ இவள் குறுக்கிட்டுத் தடுத்துவிடுவாள்."

இவ்விதம் கூறிவிட்டு அந்த யுவன் தன் காதலியின் அழகு ஒழுகும் முகத்தைக் கடைக் கண்ணால் பார்த்தான். அவனுடைய செவ்விதழ்கள் குமுத மலரின் இதழ்கள் விரிவது போல் சிறிது

விரிந்து உள்ளேயிருந்த முல்லைப் பல் வரிசை தெரியும்படி செய்தன.

பின்னர் இளைஞன் கதையைத் தொடர்ந்து சொன்னான்:

''பராக்கிரம பாண்டியர் குமரிமுனையிலிருந்து திரிசிராப்பள்ளி வரையில் வியாபித்திருந்த பெரிய ராஜ்யத்தை ஆண்டார். ஆயினும் அவருடைய மனத்தில் நிம்மதி இல்லை. பழைமையான ராஜ குலத்துடன் கலியாண சம்பந்தம் செய்துகொள்ளவேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாகியிருந்தது.

ஒரு சமயம் பராக்கிரம பாண்டியர் தஞ்சாவூருக்கு வந்திருந்தார். உத்தம சோழரின் அரண்மனையில் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். அவருக்குச் சகல விதமான ராஜோபசாரங்களும் நடந்தன. உத்தம சோழரின் மூத்த புதல்வன் சுகுமாரனை அவர் பார்க்க நேர்ந்தது. அவனிடம் எத்தகைய குணாதிசயங்களை அவர் கண்டாரோ எனக்குத் தெரியாது...''

இந்தச் சமயத்தில் அந்த யுவதி குறுக்கிட்டு ''உங்களுக்குத் தெரியாவிட்டால் எனக்குத் தெரியும். நான் சொல்லுகிறேன்!'' என்றாள்.

''கண்மணி! கொஞ்சம் பொறுத்துக் கொள். கதையில் நீ சொல்ல வேண்டிய இடம் வரும்போது சொல்லலாம்'' என்று கூறிவிட்டு, மீண்டும் என்னைப் பார்த்துச் சொன்னான்:

''சோழ ராஜ குமாரனிடம் பராக்கிரம பாண்டியர் என்னத்தைக் கண்டாரோ, தெரியாது. அவனுக்குத் தம் அருமைப் புதல்வி புவன மோகினியைக் கல்யாணம்



செய்து கொடுத்துவிட வேண்டும் என்ற ஆசை அவர் மனத்தில் உதயமாகி விட்டது. பழைமையான பெரிய குலத்தில் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற அவருடைய மனோரதம் அவனால் நிறைவேறுவதாக இருந்தது. ஆகவே உத்தம சோழரின் உத்தியான வனத்தில் ஒரு நாள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தபோது பராக்கிரம பாண்டியர் தம்முடைய கருத்தை வெளியிட்டார்.

அந்த நேரத்தில் உத்தம சோழரின் நாவில் சனீஸ்வரன் குடி புகுந்திருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட நளமகாராஜாவைப் படாத பாடு படுத்தி வைத்த சனீசுவரன் உத்தம சோழரைச் சும்மா விட்டுவிடுவானா? அவர் ஏதோ வேடிக்கைப் பேச்சு என்று நினைத்துச் சொல்லத் தகாத ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டார். 'கரிகால சோழனும் ராஜ ராஜ சோழனும் பிறந்து புகழ் வீசிய வம்சத்தில் என் புதல்வன் சுகுமாரன் பிறந்தவன். நீரோ தாயும் தகப்பனும் யார் என்று அறியாதவர். ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தினால் மதுரை ராஜ்யத்தைக் கைப்பற்றி ஆள்கிறீர். அப்படி இருக்க உம்முடைய பெண்ணை என்னுடைய குமாரனுக்கு எப்படி விவாகம் செய்து கொள்ள முடியும்? உம்முடைய குமாரி இந்த அரண்மனைக்கு வர வேண்டும் என்று விரும்பினால் குற்றேவல் செய்யும் பணிப் பெண்ணாகத்தான் வர முடியும். வேறு மார்க்கம் ஒன்றுமில்லை. உம்முடைய புதல்வியைப் பணிப் பெண்ணாக அனுப்ப உமக்குச் சம்மதமா?'' என்றார்.

உத்தம சோழர் சாதாரணமாகப் பிறர் மனம் புண்படும்படி பேசக் கூடியவர் அல்ல! அவருக்குத் தம் குலத்தைப் பற்றிய வீண் கர்வமும் கிடையாது. போதாத காலம். அப்படி விளையாட்டாகச் சொல்லி விட்டார். பராக்கிரம பாண்டியர் அதைக் கேட்டுச் சிரித்து விட்டிருந்தால் எல்லாம் சரியாகப் போயிருந்திருக்கும். ஆனால் பராக்கிரம பாண்டியர் எத்தனையோ அரிய ஆற்றல் படைத்தவராயினும் அவருக்குச் சிரிக்க மட்டும் தெரியாது. உத்தம சோழரின் வார்த்தைகளைக் கேட்டதும் அவருக்கு வந்து விட்டது ரௌத்ரகாரமான கோபம். 'அப்படியா சொன்னீர்! இனி இந்த அரண்மனையில் ஒரு விநாடியும் தாமதியேன். ஒரு சொட்டுத் தண்ணீரும்அருந்தேன்!' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார். உத்தமசோழர் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. போனவர் சில நாளைக் கெல்லாம் பெரும் படையுடன் திரும்பி வந்தார். உத்தம சோழர் இதை எதிர்பார்க்கவேயில்லை. சோழ ராஜ்யத்தில் அப்போது பெரிய சைன்யமும் இல்லை. ஆகையால் பராக்கிரம பாண்டியரின் நோக்கம் எளிதில் நிறைவேறியது. தஞ்சாவூரைக் கைப்பற்றி உத்தம சோழரையும் சிறைப்பிடித்தார். இளவரசர்களைத் தேடித் தேடிப் பார்த்தும் அவர்கள் அகப்படவில்லை. தகப்பனார் சொற்படி அவர்கள் முன்னாலேயே தஞ்சாவூரை விட்டு வெளிக் கிளம்பிக் கொல்லி மலைக் காட்டுக்குத் தப்பித்துக் கொண்டு போய் விட்டார்கள். இதற்காகப் பிற்பாடு அவர்கள் எவ்வளவோ வருத்தப்பட்டார்கள். பின்னால் வருத்தப்பட்டு என்ன பயன்? பராக்கிரம பாண்டியர் தம்முடைய கோபத்தையெல்லாம் உத்தம சோழர் மீது



பிரயோகித்தார். அவர் செய்த காரியத்தைச் சொல்லவும் என் நாக்குக் கூசுகிறது...''

''அப்படியானால் நீங்கள் சற்றுச் சும்மாயிருங்கள். மேலே நடந்ததை நான் சொல்லுகிறேன்!'' என்று ஆரம்பித்தாள் அந்த யுவதி. பிறகு என்னைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினாள். அவளுடைய செந்தாமரை முகத்தையும் கருவண்டை நிகர்த்த கண்களையும் பார்த்தபோது ஏற்பட்ட மயக்கத்தினால் சில சமயம் அவள் சொல்லிய வார்த்தைகள் என் காதில் ஏறவில்லை. எனினும், ஒருவாறு கதைத் தொடர்ச்சியை விடாமல் கவனித்து வந்தேன். அந்த மங்கை கூறினாள்:

''பராக்கிரம பாண்டியருக்கு ஏற்கனவே உத்தமசோழர் மீது கோபம் அதிகமாயிருந்தது. 'உங்களுடைய குமாரியை என் வீட்டுக்குப் பணிப் பெண்ணாக அனுப்புங்கள்' என்று சொன்னால் யாருக்குத்தான் கோபமாயிராது? சோழ இளவரசர்கள் இருவரும் தப்பித்துச் சென்றுவிட்டது பராக்கிரம பாண்டியரின் கோபத்தைக் கொழுந்து விட்டு எரியும்படி செய்தது. பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்னும் ஆத்திரம் அவர் மனத்தில் பொங்கி எழுந்தது. தம்மை அவமதித்த சோழ மன்னரை அவர் அவமானப்படுத்த விரும்பினார். அவரைச் சிறைப்படுத்தி மதுரைக்கு அழைத்துக் கொண்டு போனார். மதுரை சேர்ந்ததும் உத்தம சோழரைத் தம்முடைய ரதத்தின் அச்சில் கயிற்றினால் பிணைத்துக் கட்டும்படி செய்தார். தாமும் ரதத்தில் உட்கார்ந்து கொண்டு ரதத்தை ஓட்டச் சொன்னார். இந்தப் பயங்கரமான ஊர்வலம் மதுரை மாநகரின் வீதிகளில் சென்றபோது இரு பக்கமும் நகர மாந்தர் நின்று வேடிக்கை பார்த்தார்கள். சிலர் தங்கள் அரசருடைய வீரத்தை வியந்து பாராட்டி ஜெயகோஷம் செய்தார்கள். சிலர் உத்தம சோழனுடைய கர்வ பங்கத்தை எண்ணிக் குதூகலப்பட்டார்கள். ஒரு சிலருக்கு அந்தக் காட்சி மிக்க வருத்தத்தை அளித்தது. அப்படி வருத்தப்பட்டவர்களில் ஒருத்தி பாண்டிய மன்னருடைய குமாரி புவனமோகினி. தன்னுடைய தந்தை வெற்றி மாலை சூடித் தஞ்சையிலிருந்து திரும்பி வந்த பிறகு மதுரை நகரின் வீதிகளில் வலம் வருவதைப் பார்க்க அவள் விரும்பியது இயற்கைதானே?

பாண்டிய மன்னனின் அரண்மனை மேன் மாடத்தில் நின்று புவனமோகினி ஊர்வலக் காட்சியைப் பார்த்தாள். தன் தந்தை ஏறியிருந்த ரதத்தின் அச்சில் யாரோ ஒரு வயதான பெரிய மனிதரைச் சேர்த்துக் கட்டியிருப்பதும் அவருடைய தேகத்தில் ஒரு பாதி தெருவில் கிடந்து தேய்ந்துகொண்டே வருவதும் அவள் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு அவளுக்குச் சகிக்கவில்லை. 'இப்படியும் ஒரு கொடுமை உண்டா?' என்று பயங்கரமும் துயரமும் அடைந்தாள். உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாள். இதைப் பார்த்திருந்த சேடிகள் உடனே பாண்டியருக்குச் செய்தி அனுப்பினார்கள்.


பாண்டியர் ஊர்வலத்தை நிறுத்தி விட்டு அரண்மனைக்குத் திரும்பினார். புவனமோகினிக்கு மூர்ச்சை தெளிந்ததும் அவள் தந்தையிடம் தன் மனக் கருத்தை வெளியிட்டாள். ''ஒரு பெரிய வம்சத்தில் பிறந்த அரசர் போரிலே தோல்வியடைந்தால், அவரை இப்படி ரதத்திலே சேர்த்துக் கட்டித் தெருவிலே இழுத்துக் கொண்டு போவது என்ன அநியாயம்? இது அநாகரிகம் அல்லவா? இப்படி நீங்கள் செய்யலாமா?'' என்று அவள் கேட்டதற்குப் பாண்டியர், ''அவன் எத்தனை பெரிய வம்சத்தில் பிறந்தவனாயிருந்தால் என்ன? என் அருமைக் குமாரியை அவனுடைய அரண்மனையில் குற்றேவல் செய்ய அனுப்பும்படி சொன்னான். அப்படிப்பட்டவனுடைய அகம்பாவத்தை வேறு எந்த விதத்தில் நான் அடக்குவது? உத்தம சோழனுக்கு நீ பரிந்து பேசாதே! வேறு ஏதாவது சொல்லு!'' என்றார். புவனமோகினி தந்தைக்கு நல்ல வார்த்தை சொல்லி அவருடைய கோபத்தைத் தணித்தாள். அதன் பேரில் உத்தம சோழரைத் தனிச் சிறையில் அடைக்கும்படியும் அவருக்கு மற்றபடி வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்து கொடுக்கும்படியும் பராக்கிரம பாண்டியர் கட்டளையிட்டார்...''

இவ்விடத்தில் அம் மங்கையின் காதலன் குறுக்கிட்டு, ''ஆஹாஹா! பாண்டிய நாட்டின் கருணையே கருணை!'' என்றான். பிறகு அவனே கதையைத் தொடர்ந்தான்:

''உத்தம சோழரின் புதல்வர்கள் இருவரும் பாண்டிய வீரர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு கொல்லிமலை போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுடன் இன்னும் சில சோழ நாட்டு வீரர்களும்

வந்து சேர்ந்து கொண்டார்கள். கொல்லிமலைப் பிரதேசம் இப்போது எப்படி இருக்கிறதோ என்னமோ, தெரியாது. அந்த நாளில் கொல்லிமலையும் அதன் அடிவாரமும் மிகச் செழிப்பான வனங்களால் சூழப்பட்டிருந்தன. அந்த வனப் பிரதேசத்தின் அழகைச் சொல்லி முடியாது. இந்த மோகினித் தீவு அழகான தீவு என்பது உண்மைதான். ஆனால் கொல்லிமலையின் வனப்புக்கு இது அருகிலேகூட வர முடியாது. வருஷம் முந்நூற்றறுபத்தைந்து தினங்களும் கனிகள் தரக்கூடிய மாமரங்களும், நாரத்தை மரங்களும் அங்கு ஏராளமாயிருந்தன. அங்கிருந்த பலா மரங்கள் அவ்வளவு ஏராளமான பெரிய பலாப் பழங்களைக் கிளைகளில் சுமந்து கொண்டு எப்படித்தான் விழாமல் நிற்கின்றன என்னும் வியப்பைப் பார்ப்பவர்களின் மனத்தில் உண்டாக்கும்.

உணவுக் கவலையே இன்றி ஒளிந்து வாழ்வதற்குக் கொல்லி மலையைப் போன்ற இடம் வேறு இல்லை என்றே சொல்லலாம். முற்காலத்தில் கரிகாலச் சோழன் ஒளிந்து வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது கொல்லி மலைக்குத்தான் போயிருந்ததாகச் சொல்வதுண்டு. இந்த மலையில் அப்போது சில சித்தர்கள் தவம் செய்து கொண்டிருந்தார்கள். கரிகாலன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அந்தச் சித்தர்களை வேண்டிக் கொண்டாராம். அவர்களும் ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டார்களாம். கரிகாலனைத் தேடிக் கொண்டு அவனுடைய விரோதிகளின் ஒற்றர்கள் கொல்லிமலைக்கு வர ஆரம்பித்தார்கள். சித்தர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ஓர் அழகான பெண்ணின் வடிவமாக ஓர் இயந்திரப் பதுமையைச் செய்தார்கள். அந்தப் பதுமைக்குள்ளே ஒரு கூரிய வாளை ஒளித்து வைத்தார்கள். பதுமையைப் பார்ப்பவர்கள் அது உண்மையான பெண் என்றே நினைக்கும்படியிருந்தது. நினைப்பது மட்டுமல்ல; அந்தப் பதுமையின் அழகினால் கவரப்பட்டு யாரும் அதன் அருகில் செல்ல விரும்புவார்கள். கரிகாலனைத் தேடிக் கொண்டு வந்த ஒற்றர்கள் அந்தப் பதுமையைப் பார்த்ததும் அதன் அழகில் மயங்கி அருகில் வந்து உயிருள்ள பெண்ணாகவே கருதி அதைத் தீண்டுவார்கள். அவ்வளவுதான்; அந்தப் பதுமையின் எந்த அவயவத்தில் மனிதனுடைய கைபட்ட போதிலும், உடனே அந்தப் பதுமையில் மறைந்துள்ள இயந்திரம் இயங்கி, அதன் வயிற்றுக்குள்ளேயிருந்து மிக வேகத்துடன் கூரிய வாள் வெளி வந்து தன்னைத் தீண்டியவனைக் குத்திக் கொன்று விடுமாம்! இதனால் அந்தப் பதுமைக்குக் 'கொல்லியம் பாவை' என்று பெயர் வந்ததாம். அந்தக் கொல்லியம்பாவை அங்கே இருந்த காரணத்தினாலேயே அந்த மலைக்குக் கொல்லி மலை என்று பெயர் வந்ததாகவும் சொல்வதுண்டு. ஆனால் அதெல்லாம் பழங்காலத்துக் கதை. சோழநாட்டு இளவரசர்கள் இருவரும் அவர்களுடைய தோழர்களும் கொல்லி மலைக்குப் போனபோது அங்கே 'கொல்லியம் பாவை' இருக்கவில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் வாளும் வேலும் இருந்தன. சுகுமாரனும் ஆதித்தனும் பராக்கிரம பாண்டியன் மீது பழி வாங்கத் துடிதுடித்தார்கள். அவர்களைத் தொடர்ந்து வந்த சோழ நாட்டு வீரர்கள் இளவரசர்களைக் காட்டிலும் அதிக ஆத்திரம் கொண்டிருந்தார்கள். ஆனால் ஐம்பதினாயிரம் போர்வீரர்களும் யானைப் படை, குதிரைப் படைகளும் உடைய பாண்டிய சாம்ராஜ்யத்தை எதிர்த்து ஓர் இருபது வீரர்கள் என்ன செய்ய முடியும்? ஆகையால் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றிப் பற்பல யோசனைகள் செய்தார்கள். இரகசியமாகப் படை திரட்டிச் சேர்ப்பதற்குக் கொல்லி மலைக் காடு மிகவும் வசதியான இடம். அவர்களிலே சிலர் சந்நியாசிகளைப் போல் வேஷம் தரித்துச் சோழ நாடெங்கும் சுற்றிச் சோழகுலத்திடம் உண்மையான விசுவாசம் கொண்ட வீரர்களைத் திரட்ட வேண்டும். அப்படித் திரட்டியவர்களையெல்லாம் குறிப்பிட்ட அடையாளங்களுடன் கொல்லிமலைப் பிரதேசத்துக்கு அனுப்ப வேண்டும். இன்னும் ஆயுதங்கள்,



உணவுப் பொருள்கள் முதலியவைவயும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இவ்விதம் போதுமான படை சேர்ந்த வுடனே தஞ்சாவூர் மீது படையெடுத்துச் செல்ல வேண்டும். அங்கிருந்து மதுரைக்குப் போக வேண்டியதுதான். பராக்கிரம பாண்டியனைப் பூண்டோடு அழித்துவிட வேண்டியதுதான். இப்படியெல்லாம் அவர்கள் திட்டம் போட்டார்கள்.

ஆனால் எல்லாவற்றுக்கும் முதலிலே செய்ய வேண்டியது ஒன்று இருந்தது. அவர்களில் யாராவது ஒருவர் மாறு வேடம் பூண்டு மதுரைக்குப் போக வேண்டும். பாண்டியனுடைய சிறையிலிருந்து உத்தம சோழரை எப்படியாவது தந்திரத்தினால் விடுதலை செய்து அழைத்து வர வேண்டும். உத்தம சோழர் பத்திரமாய்க் கொல்லி மலைக்கு வந்து சேர்ந்தபிறகுதான் மற்றக் காரியம் எதுவும் செய்ய முடியும். அப்படியின்றி, உத்தம சோழர் பாண்டியனுடைய சிறையில் இருக்கும்போது சோழ இளவரசர்கள் படை திரட்டுவதாகத் தெரிந்தால்கூட அந்த மூர்க்கங் கொண்ட பாண்டியன் அவரைக் கொன்றுவிடக் கூடுமல்லவா ?

மதுரைக்கு மாறு வேடம் பூண்டு சென்று அந்த மகா சாகஸமான செயலை யார் புரிவது என்பது பற்றி அவர்களுக்குள் விவாதம் எழுந்தது. ஒவ்வொரு வீரனும் தான் போவதாக முன் வந்தான். ஆதித்தன் தன் தந்தையை விடுவித்துக் கொண்டு வரும் பொறுப்பு தன்னுடையது என்று சாதித்தான். பட்டத்து இளவரசனாகிய சுகுமாரன் மட்டும் போகக் கூடாது என்று மற்றவர்கள் அனைவரும் ஒருமுகமாகச் சொன்னார்கள். ஆனால் சுகுமாரனுக்கோ வேறு யாரிடத்திலும் அந்தக் கடினமான வேலையை ஒப்படைக்க விருப்பமில்லை. நீண்ட வாதத்துக்குப் பிறகு கடைசியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். கொல்லிமலைப் பிரதேசத்தில் மர நெருக்கம் இல்லாத ஓர் இடத்தைக் கண்டுபிடித்து அங்கே ஒவ்வொருவரும் அவரவருடைய வேலை பலம் கொண்ட மட்டும் வீசி எறிய வேண்டியது. யாருடைய வேல் அதிகமான தூரத்தில் போய் விழுகிறதோ, அவன் மதுரைக்குப் போக வேண்டியது. ஒரு வருஷ காலத்துக்குள் அவன் உத்தம சோழரை விடுவித்துக் கொண்டு வந்து சேராவிட்டால் அடுத்தபடியாக நெடுந்தூரம் வேல் எறிந்த வீரன் மதுரைக்குப் போக வேண்டியது. இந்த யோசனையைச் சுகுமாரன் சொன்னதும் வேறு வழியின்றி எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள். ஒவ்வொருவனும் தன் உடம்பிலுள்ள சக்தி முழுவதையும் பிரயோகித்து வெகுதூரத்தில் போய் விழும்படியாகத்தான் வேலை வீசி எறிந்தான். ஆனால் சுகுமாரனுடைய வேல்தான் மற்ற எல்லோருடைய வேல்களைக் காட்டிலும் அதிக தூரத்தில் போய் விழுந்தது. அதனால் கடவுளுடைய விருப்பம் அப்படியிருக்கிறது என்று ஒப்புக் கொண்டு மற்றவர்கள் சுகுமாரனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள். சுகுமாரன் மிக உற்சாகத்துடனே மதுரைக்குப் புறப்பட்டான்.

மதுரைமாநகரின் செல்வச் சிறப்புக்களைப் பற்றியும் மீனாட்சி அம்மன் கோயிலின் மகிமையைப் பற்றியும் சுகுமாரன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். முற்காலத்தில் சங்கப் புலவர்கள் வாழ்ந்து, தமிழ் வளர்த்த நகரம் மதுரை என்பதும் அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. அப்படிப்பட்ட மதுரை நகரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவன் மனத்தில் வெகு நாட்களாகக் குடிகொண்டிருந்தது. அந்த ஆசை இப்பொழுது நிறைவேறப் போகிறதென்றால், அவன் உற்சாகம் கொள்வதற்குக் கேட்பானேன் ? தன்னுடைய சாமர்த்தியத்தினால் தந்தையை விடுவித்துக் கொண்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையும் அவனுக்குப் பூரணமாக இருந்தது. எனினும் பாண்டிய நாட்டுத் தலைநகரில் தன்னுடைய வாழ்க்கையையே அடியோடு மாற்றிவிடப் போகிற அநுபவம் கிட்டப்போகிறது என்பதாகச் சுகுமாரன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மதுரை நகரில் ஒரு 'கொல்லியம் பாவை' இருக்கிறது என்றும், அந்த உயிர்ப் பாவையின் முகத்தில் உள்ள இரண்டு கண்களாகிற வானாயுதங்களும் அருகில் நெருங்கியவர்களின் நெஞ்சைப் பிளந்துவிடக் கூடியவை என்றும், அவன் கனவிலோ கற்பனையிலோகூட எண்ணவில்லை....!''

(தொடரும்)

அத்தியாயம் ஒன்பது

கரை உடைந்தது

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பழுவேட்டரையரின் மனத்தில் குடி கொண்டிருந்த வேதனையைப் படகிலே இருந்த மற்றவர்கள் உணரக் கூட வில்லை. புயற் காற்றில் படகு அகப் பட்டுக் கொண்டதனை காரணமாகவே அவர் அவ்வளவு சங்கடப்படுவதாக நினைத்தார்கள். பெரிய பழுவேட்டரையர் மனோதைரியத்தில் நிகரற்றவர் எனப் பெயர் வாங்கியிருந்தவர். அவரே இவ்வளவு கலங்கிப் போனதைப் பார்த்து, மற்றவர்கள் மனத்திலும் பீதி குடிகொண்டது. எந்த நேரம் படகு கவிழுமோ என்று எண்ணி, அனைவரும் தப்பிப் பிழைப்பதற்கு வேண்டிய உபாயங்களைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, வெகு நேரம் படகு தவித்துத் தத்தளித்த பிறகு கரை ஏறவேண்டிய துறைக்கு அரைக் காத தூரம் கிழக்கே சென்று கரையை அணுகியது. "இனிக் கவலை இல்லை" என்று எல்லாரும் பெருமூச்சு விட்டார்கள். அச் சமயத்தில் நதிக்கரையில் புயற் காற்றினால் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த மரங்களில் ஒன்று தடார் என்று முறிந்து விழுந்தது. முறிந்த மரத்தைக் காற்று தூக்கிக் கொண்டு





வந்து படகின் அருகில் தண்ணீரில் போட்டது. படகைத் திருப்பி அப்பால் செலுத்துவதற்கு ஓடக்காரர்கள் பெருமுயற்சி செய்தார்கள். பலிக்கவில்லை. மரம் அதி வேகமாக வந்து படகிலே மோதியது. படகு தடால் என்று கவிழ்ந்தது. மறுகணம் படகில் இருந்தவர்கள் அனைவரும் தண்ணீரில் விழுந்து மிதந்தார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் படகு கவிழ்ந்தால் தப்பிப் பிழைப்பது பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்களாதலால் அவ்வாறு உண்மையில் நிகழ்ந்து விட்டதும், அந்த அபாயத்திலிருந்து சமாளிப்பதற்கு ஓரளவு ஆயத்தமாயிருந்தார்கள். கரையை நெருங்கிப் படகு வந்து விட்டிருந்தபடியால் சிலர் நீந்திச் சென்று கரையை அடைந்தார்கள். சிலர் மரங்களின் மீது தொத்திக் கொண்டு நின்றார்கள். சிலர் கையில் அகப்பட்டதைப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் பழுவேட்டரையர் வேறு சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தபடியால் படகுக்கு நேர்ந்த விபத்தை எதிர்பார்க்கவேயில்லை. படகு கவிழ்ந்ததும் தண்ணீரில் முழுகி விட்டார். அவரைப் பிரவாகத்தின் வேகம் வெகு தூரம் அடித்துக் கொண்டு போய்விட்டது. சிலமுறை தண்ணீர் குடித்து, மூக்கிலும் காதிலும் தண்ணீர் ஏறி, திணறித் தடுமாறி, கடைசியில் ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவர் பிரவாகத்துக்கு மேலே வந்தபோது படகையும் காணவில்லை; படகில் இருந்தவர்கள் யாரையும் காணவில்லை. அது மட்டுமல்லாமல் வெள்ளம் தம்மை அந்த மாநதியின் மத்தியப் பிரதேசத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதைப் பழுவேட்டரையர் அறிந்தார்.

உடனே அந்தக் கிழவரின் நெஞ்சில் பழைய வீரத்வம் தளிர்த்து எழுந்தது. எத்தனையோ போர்களில் மிக ஆபத்தான நிலைமைகளில் துணிவுடன் போராடி வெற்றி பெற்ற அந்த மாபெரும் வீரர் இந்தக் கொள்ளிடத்து வெள்ளத்துடனும் போராடி வெற்றி கொள்ளத் தீர்மானித்தார். சுற்று முற்றும் பார்த்தார்; சமீபத்தில் மிதந்து வந்த ஒரு மரக் கட்டையை எட்டிப் பிடித்துக் கொண்டார். கரையைக் குறிவைத்து நீந்தத் தொடங்கினார். வெள்ளத்தின் வேகத்துடனும் புயலின் வேகத்துடனும் ஏக காலத்தில் போராடிக் கொண்டே நீந்தினார். களைத்தபோது சிறிது நேரம் வெறுமனே மிதந்தார். பலமுறை நதிக் கரையில் ஏற முயன்றபோது மழையினால் சேறாகியிருந்த கரை அவரை மறுபடியும் நதியில் தள்ளி விட்டது. உடனே விட்டு விட்ட கட்டையைத் தாவிப் பிடித்துக் கொண்டார்.

இவ்விதம் இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகும்வரையில் போராடிய பிறகு நதிப் படுகையில் நாணற் காடு மண்டி வளர்ந்திருந்த ஓரிடத்தில் அவருடைய கால்கள் தரையைத் தொட்டன. பின்னர் வளைந்து கொடுத்த நாணற் புதர்களின் உதவியைக் கொண்டு அக்கிழவர் தட்டுத் தடுமாறி நடந்து, கடைசியாகக் கரை ஏறினார்.

அவரைச் சுற்றிலும் கனாந்தகாரம் சூழ்ந்திருந்தது. பக்கத்தில் ஊர் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. திருவையாற்றுக்கு எதிரில் கரை ஏறவேண்டிய ஓடத் துறைக்குச் சுமார் ஒன்றரைக் காத தூரம் கிழக்கே வந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆம், ஆம்! குடந்தை நகரத்துக்கு அருகிலேதான் தாம் கரை ஏறி இருக்க வேண்டும். இன்றிரவு எப்படியாவது குடந்தை நகருக்குப் போய்விட முடியுமா?...

புயல் அப்போதுதான் பூரண உக்கிரத்தை அந்தப் பிரதேசத்தில் அடைந்திருந்தது. நூறாயிரம் பேய்கள் சேர்ந்து சத்தமிடுவது போன்ற பேரோசை காதைச் செவிடுபடச் செய்தது. மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்தன. வானத்தில் அண்ட கடாகங்கள் வெடித்து விடுவது போன்ற இடி முழக்கங்கள் அடிக்கடி கேட்டன. பெருமழை சோவென்று கொட்டியது.

''எங்கேயோ பாழடைந்த மண்டபம் அல்லது பழைய கோயில் இல்லாமலா போகும்? அதில் தங்கி இரவைக் கழிக்க வேண்டியதுதான். பொழுது விடிந்த பிறகுதான் மேலே நடையைத் தொடங்க வேண்டும்'' என்று முடிவு கட்டிக் கொண்டு, தள்ளாடி நடுங்கிய கால்களை ஊன்றி வைத்த வண்ணம் நதிக் கரையோடு நடந்து சென்றார்.

நதியில் கரையின் விளிம்பைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. மழை பெய்தபடியால் கரை மேலேயும் ஓரளவு தண்ணீராயிருந்தது. இருட்டைப் பற்றியோ சொல்ல வேண்டியதேயில்லை. ஆகவே, அந்த வீரக் கிழவர் நடந்து சென்றபோது, தம் எதிரிலே நதிக் கரையின் குறுக்கே கொஞ்சம் தண்ணீர் அதிகமாக ஓடியதைப் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. திடீரென்று முழங்கால் அளவு ஜலம் வந்து விட்டதும் சற்றுத் தயங்கி யோசித்தார். தொடை



யளவு ஜலம் வந்ததும் திடுக்கிட்டார். அதற்கு மேலே யோசிப்பதற்கு அவகாசமே இருக்கவில்லை. மறு கணம் அவர் தலை குப்புறத் தண்ணீரில் விழுந்தார். கொள்ளிடத்தின் கரை உடைத்துக் கொண்டு அந்த இடத்தில் தெற்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த வெள்ளம் அவரை உருட்டிப் புரட்டி அடித்துக் கொண்டு போயிற்று. கரைக்கு அப்பால் பள்ளமான பிரதேசமானபடியால், அவரை ஆழமாக, இன்னும் ஆழமாக, அதளபாதாளத்துக்கே அடித்துக் கொண்டு போவது போலிருந்தது. படகு கவிழ்ந்து நதியில் போய்க் கொண்டிருந்த வெள்ளத்தில் மூழ்கியபோது அவர் சற்று எளிதாகவே சமாளித்துக் கொண்டார். இப்போது அவ்விதம் முடியவில்லை. உருண்டு புரண்டு, உருண்டு புரண்டு கீழே கீழே போய்க் கொண்டிருந்தார். கண் தெரியவில்லை; காது கேட்கவில்லை; நிமிர்ந்து நின்று மேலே வரவும் முடியவில்லை. மூச்சுத் திணறியது. யாரோ ஒரு பயங்கர ராட்சதன் அவரைத் தண்ணீரில் அமுக்கி அமுக்கித் தலை குப்புறப் புரட்டிப் புரட்டி, அதே சமயத்தில் பாதாளத்தை நோக்கி இழுத்துக்கொண்டு போனான். ஆகா! அந்த ராட்சதன் வேறு யாரும் இல்லை! கொள்ளிடத்தின் கரையை உடைத்துக் கொண்டு உடைப்பின் வழியாக அதி வேகமாகப் பாய்ந்த வெள்ளமாகிய ராட்சதன்தான்! அவனுடைய கோரமான பிடியிலிருந்து, பயங்கரமான உருட்டலிலிருந்து தப்பிப் பிழைக்க முடியுமா? கால் தரையில் பாவவில்லையே? கைக்குப் பிடி எதுவும் அகப்படவில்லையே? மூச்சுத் திணறுகிறதே? கழுத்தைப் பிடித்துத் திருகுவதுபோலிருக்கிறதே? காது செவிடுபடுகிறதே!... துர்க்கா பரமேசுவரி! தேவி! நான் இந்த விபத்திலிருந்து பிழைப்பேனு!... அடி பாவி! நந்தினி! உன்னால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்! ஐயோ! பாவம்! உன்னை அந்த தூர்த்தர்கள் மத்தியில் விட்டு விட்டு வந்தேனே! சிச்சீ! உன் அழகைக் கண்டு மயங்கி, உன் நிலையைக் கண்டு இரங்கி, உன்னை மணந்து கொண்டதில் நான் என்ன சுகத்தைக் கண்டேன்? மன அமைதியை இழந்ததைத் தவிர வேறு என்ன பலனை அனுபவித்தேன்? கடைசியில், இப்படிக் கொள்ளிடத்து உடைப்பில் அகப்பட்டுத் திணறித் திண்டாடிச் சாகப் போகிறேனே! அறுபத்து நாலு

போர்க் காயங்களைச் சுமந்த என் உடம்பைப் புதைத்து வீரக் கல் நாட்டிப் பள்ளிப் படை கட்டப் போவதில்லை. என் உடலை யாரும் கண்டெடுக்கப் போவது கூட இல்லை. எங்கேயாவது படு பள்ளத்தில் சேற்றில் புதைந்து விடப் போகிறேன்! என் கதி என்ன ஆயிற்று என்றுகூட யாருக்கும் தெரியாமலே போய்விடப் போகிறது! அல்லது எங்கேயாவது கரையிலே கொண்டு போய் என் உடம்பை இவ்வெள்ளம் ஒதுக்கித் தள்ளிவிடும்! நாய் நரிகள் பிடுங்கித் தின்று பசியாறப் போகின்றன!....

சில நிமிட நேரத்துக்குள் இவை போன்ற எத்தனையோ எண்ணங்கள் பழுவேட்டரையர் மனத்தில் தோன்றி மறைந்தன. பின்னர் அடியோடு அவர் நினைவை இழந்தார்...

தடார் என்று தலையில் ஏதோ முட்டியதும் மீண்டும் சிறிது நினைவு வந்தது. கைகள் எதையோ — கருங்கல்லையோ, கெட்டியான தரையையோ — பிடித்துக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு சக்தி, அவரை மேலே கொண்டு வந்து உந்தித் தள்ளியது. அவரும் மிச்சமிருந்த சிறிது சக்தியைப் பிரயோகித்து, கரங்களை ஊன்றி மேலே எழும்பிப் பாய்ந்தார். மறு நிமிடம் கெட்டியான கருங்கல் தரையில் அவர் கிடந்தார். கஷ்டப் பட்டுக் கண்களைத் திறக்கப் பிரயத்தனப் பட்டார். இறுக அமுங்கிக் கிடந்த கண் இமைகள் சிறிது திறந்ததும், எதிரே தோன்றிய ஜோதி அவருடைய கண்களைக் கூசச்செய்தது. அந்த ஜோதியில் துர்க்கா பரமேசுவரியின் திருமுக மண்டலம் தரிசனம் தந்தது! தேவி! உன் கருணையே கருணை! என்னுடைய அமைதியற்ற மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகில் உன்னுடைய சந்நிதானத்துக்கே அழைத்துக் கொண்டாய் போலும்!....

இல்லை, இல்லை! இது விண்ணுலகம் இல்லை. மண்ணுலகத்தில் உள்ள அம்மன் கோவில். எதிரே தரிசனம் அளிப்பது அம்மனுடைய விக்கிரகம். தாம் விழுந்து கிடப்பது கர்ப்பக் கிருஹத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபம். அம்மனுக்கு அருகில் முணுக் முணுக்கென்று சிறிய தீபம் எரிந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிச்சம்தான் சற்று முன் தம் கண்களை அவ்வளவு கூசும்படிசெய்தது! வெளியில் இன்னும் 'சோ' என்று மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. புயலும் அடித்துக்கொண் டிருக்கிறது. அவ்வளவு புயலும் மழையும் தேவி கோவிலின் கர்ப்பக்கிருஹத்தில் ஒளிர்ந்த தீபத்தை அசைக்க முடியவில்லை! இது ஒரு நல்ல சகுனமோ? துர்க்கா பரமேசுவரி தம்மிடம் வைத்துள்ள கருணைக்கு அறிகுறியோ? எத்தனை பெரிய விபத்துக்கள் வந்தாலும் தமது ஜீவன் மங்கி விடாது என்று எடுத்துக் காட்டுவது போல அல்லவா இருக்கிறது? ஜகன்மாதாவின் கருணையே கருணை! தமது பக்தியெல்லாம் தாம் செய்த பூசனையெல்லாம் வீண் போகவில்லை....

கிழவர் தட்டுத் தடுமாறி எழுந்து நிற்க முயன்றார். அவர் உடம்பு நடுங்கியது. வெகு நேரம் வெள்ளத்திலேயே கிடந்தபடியால் உடம்பு சில்லிட்டு நடுங்குவது இயல்புதான் அன்றோ? அம்மன் சந்நிதியில் திரை விடுவதற்காகத் தொங்கிய துணியை எடுத்து உடம்பை நன்றாகத் துடைத்துக் கொண்டார். தமது ஈரத் துணியைக் களைந்து எறிந்துவிட்டுத் திரைத் துணியை அரையில் உடுத்திக் கொண்டார்.

அம்மன் சந்நிதியில் உடைத்த தேங்காய் மூடிகள், பழங்கள், நிவேதனத்துக்கான பொங்கல் பிரசாதங்கள்—எல்லாம் வைத்திருப்பதைக் கண்டார். தேவிக்குப் பூஜை செய்வதற்காக வந்த பூசாரியும் பிரார்த்தனைக்காரர்களும் எல்லாவற்றையும் அப்படி அப்படியே போட்டு விட்டு ஓடிப் போயிருக்க வேண்டும். ஏன் அவர்கள் அப்படி ஓடினார்கள்? புயலுக்கும் மழைக்கும் பயந்து ஓடினார்களா? அல்லது கொள்ளிடத்துக் கரையில் உடைப்பு ஏற்பட்டு விட்டதைப் பார்த்து விட்டு ஓடினார்களா? எதுவாயிருந்தாலும் சரி. தாம் செய்த புண்ணியந்தான்! துர்க்கா பரமேசுவரி தம்மை உடைப்பு வெள்ளத்திலிருந்து காப்பாற்றியது மட்டுமல்ல; தம்முடைய பசி தீருவதற்குப் பிரசாதமும் வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள்...

இன்றிரவை இந்தக் கோயிலிலேயே கழிக்கவேண்டியதுதான். இதைக் காட்டிலும் வேறு தக்க இடம் கிடைக்கப் போவதில்லை. உடைப்பு வெள்ளம் இந்தச் சிறிய கோவிலை ஒட்டித்தான் பாய்ந்து செல்ல வேண்டும். அதனால் கோவிலுக்கே ஆபத்து வரலாம். கோவிலைச் சுற்றிலும் வெள்ளம் சுழிபறித்துக் கொண்டிருக்கும். அஸ்திவாரத்தையே தகர்த்தாலும் தகர்த்துவிடும். ஆயினும் இன்று இரவுக்குள்ளே அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. அவ்விதம் நேர்வதாயிருந்தாலும் சரிதான். இன்றிரவு அந்தக் கோயிலை விட்டுப் போவதற்கில்லை. உடம்பில் தெம்பு இல்லை; உள்ளத்திலும் சக்தி இல்லை.....

பயபக்தியுடன் பழுவேட்டரையர் தேவியின் சந்நிதானத்தை நெருங்கினார்.

அங்கிருந்த பிரசாதங்களை எடுத்து வேண்டிய அளவு அருந்தினர். மிச்சத்தைப் பத்திரமாக வைத்து மூடினர். தேவியின் முன்னிலையில் நமஸ்காரம் செய்யும் பாவனையில் படுத்தார். கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. சிறிது நேரத்துக்குள் பழுவேட்டரையர் பெருந் துயிலில் ஆழ்ந்து விட்டார்.

அத்தியாயம் பத்து

கண் திறந்தது!

முதலில் நதி வெள்ளத்திலும், பின்னர் உடைப்பு வெள்ளத்திலும் அகப்பட்டுத் திண்டாடியபடியால் பெரிதும் களைப்படைந்திருந்த பழுவேட்டரையர் வெகு நேரம் நினைவற்று, உணர்ச்சியற்று, கட்டையைப் போல் கிடந்து தூங்கினர். வேண்டிய அளவு தூங்கிய பிறகு, இலேசாக நினைவுகளும் கனவுகளும் தோன்றின. ஒரு சமயம் துர்க்கா பரமேசுவரி கோயில் விக்கிரகத்திலிருந்து புறப்பட்டு நாலு அடி எடுத்து வைத்து நடந்து அவர் அருகில் வந்தாள். அனல் வீசிய கண்களினால் அவரை உற்று நோக்கிய வண்ணம் திருவாய் மலர்ந்தாள்:— ''அடே, பழுவேட்டரையா! நீயும் உன் குலத்தாரும் தலை முறை தலை முறையாக எனக்கு வேண்டியவர்கள். ஆகையால் உனக்கு எச்சரிக்கிறேன். உன்னுடைய அரண்மனையில் நீ கொண்டு வைத்திருக்கிறாயே, அந்த நந்தினி என்பவள் மனிதப் பெண் உருக் கொண்ட ராட்சஸி. உன்னுடைய குலத்தையும் சோழர் குலத்தையும் வேரோடு அழித்துப் போடுவதற்காக வந்தவள். அதற்குச் சரியான சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளை உன் அரண்மனையிலிருந்தும் உன் உள்ளத்திலிருந்தும் அப்புறப்படுத்தி விட்டு மறு காரியம் பார்! இல்லாவிட்டால், உனக்கும் உன் குலத்துக்கும் என்றும் அழியாத அபகீர்த்தி ஏற்படும்.....!''

இவ்விதம் எச்சரித்து விட்டுத் தேவி திரும்பிச் சென்று விக்கிரகத்துக்குள் புகுந்து கலந்து விட்டாள்!....

பழுவேட்டரையர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் உடம்பு கிடுகிடென்று நடுங்கிக் கொண்டிருந்தது. தாம் கண்டது கனவுதான் என்று நம்புவது அவருக்குச் சற்று சிரமமாகவே இருந்தது. ஆயினும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

பொழுது நன்றாக விடிந்திருந்தது. புயலின் உக்கிரம் தணிந்திருந்தது. மழை நின்று போயிருந்தது. 'சோ' வென்ற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. கோயில் வெளி மண்டபத்தின் விளிம்பின் அருகில் வந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தார். அவர் கண்ட காட்சி உற்சாகமளிப்பதாக இல்லை.

கொள்ளிடத்தின் உடைப்பு இதற்குள் மிகப் பெரிதாகப் போயிருந்தது. நதி வெள்ளத்தில் ஏறக்குறையப் பாதி அந்த உடைப்பின் வழியாகக் குபுகுபு வென்று பாய்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. கிழக்குத் திசையிலும் தெற்குத் திசையிலும் ஒரே வெள்ளக் காடாக இருந்தது. மேற்கே மட்டும் கோயிலை அடுத்துச் சிறிது தூரம் வரையில் வெள்ளம் சுழி போட்டுக் கொண்டு துள்ளிக் குதித்துக் கொண்டு போயிற்று. அப்பால் குட்டை மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்த காட்டுப் பிரதேசம் வெகு தூரத்துக்குக் காணப்பட்டது. அது திருப்புறம்பயம் கிராமத்தை அடுத்த காடாயிருக்க வேண்டுமென்றும், அந்தக் காட்டின் நடுவில் எங்கேயோதான் கங்க மன்னன் பிருதிவீபதிக்கு வீரக் கல் நாட்டிய பழைய பள்ளிப்படைக் கோயில் இருக்க வேண்டும் என்றும் ஊகம் செய்தார்.

அந்தப் பள்ளிப்படை உள்ள இடத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் யுத்தம் அவர் நினைவுக்கு வந்தது. அந்தப் போரில் சோழர் குலத்துக்கு உதவியாகத் தமது முன்னோர்கள் செய்த வீர சாகஸச் செயல்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டார். அப்படிப்பட்ட தமது பழம் பெரும் குலத்துக்கு இந்த நந்தினியினால் உண்மையிலேயே அவக்கேடு நேர்ந்து விடுமோ? துர்க்கா பரமேசுவரி தமது கனவிலே தோன்றிக் கூறியதில் ஏதேனும் உண்மை இருந்தாலும் இருக்குமோ....?

எப்படி இருந்தாலும் இனி சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நந்தினியின் அந்தரங்கம் என்ன என்பதையும் கண்டு பிடித்தேயாக வேண்டும். முதலில், இங்கிருந்து தப்பிச் சென்ற பிறகல்லவா மற்றக் காரியங்கள்? திருப்புறம்பயம் கிராமத்தை அடைந்தால் அங்கே ஏதேனும் உதவி பெறலாம். கவிழ்ந்த படகிலிருந்து தம்மைப் போல் வேறு யாரேனும் தப்பிப் பிழைத்திருந்தால்,

அவர்களும் அங்கே வந்திருக்கக்கூடும். ஆனால் வெள்ளத்தைக் கடந்து திருப்புறம்பயம் கிராமத்துக்குப் போவது எப்படி ?

இந்தக் கோயிலைச் சுற்றி உடைப்பு வெள்ளம் இப்படிச் சுழிபோட்டுக் கொண்டு ஓடுகிறதே? இதில் ஒரு மத யானை இறங்கினால்கூட அடித்துத் தள்ளிக் கொண்டு போய் விடுமே ? இதை எப்படித் தாண்டிச் செல்வது ?

உடைப்பு வெள்ளம் கோயிலைச் சுற்றிக் கீழே கீழே தோண்டிக் குழி பறித்துக் கொண்டிருப்பது திண்ணம். கோயில் எப்போது விழுமோ, தெரியாது! துர்க்கா பரமேசுவரியின் சக்தியினால் விழாமலிருந்தால்தான் உண்டு. ஆயினும், அங்கிருந்து வெளியேறுவது எப்படி? உடைப்பு வெள்ளம் வடிந்த பிறகு போவது என்றால், எத்தனை நாள் ஆகுமோ தெரியாது.

நல்லவேளை, வேறொரு வழி இருக்கிறது. கோயிலுக்கு எதிரே பிரம்மாண்டமாக வளர்ந்திருந்த வேப்பமரம் ஒன்று இருந்தது. புயற்காற்றிலே விழாமல் அது எப்படியோ தப்பிப் பிழைத்தது. ஆனால் கோயிலைச் சுற்றித் துள்ளிச் சென்று கொண்டிருந்த உடைப்பு வெள்ளம், அந்த வேப்ப மரத்தைச் சுற்றிலும் சுழியிட்டுக் குழி பறித்துக் கொண்டிருந்ததால், கோயில் விழுவதற்கு முன்னால், அந்த மரம் விழுவது நிச்சயம். மரம் விழுந்தால் அநேகமாக மேற்குத் திசையிலுள்ள காட்டுப் பிரதேசத்துக்கு ஒரு பாலத்தைப் போல் அது விழக்கூடும். இல்லாவிட்டாலும், வெள்ளம் மரத்தை அடித்துக் கொண்டு போய் எங்கேயாவது கரையோரத்தில் சேர்க்கும். மரம் விழுந்தவுடனே அதன் மேல் தொத்தி ஏறிக் கொண்டால், ஒருவாறு அங்கிருந்து தப்பிப் பிழைக்கலாம்.

அது வரையில் அக்கோயிலிலேயே இருக்க வேண்டியதுதான். தேவியின் கருணையினால் இன்னும் ஒரு நாள் பசியாறுவதற்கும் பிரசாதம் மிச்சமிருக்கிறது. மரம் விழும் வரையில், அல்லது வெள்ளம் வடியும் வரையில் அங்கேயே பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதுதான். அதைத் தவிர வேறு என்ன செய்வது ?

அவசரப்படுவதில் பயன் ஒன்றுமில்லை. நம்மால் இவ்வுலகில் இன்னும் ஏதோ பெரிய காரியங்கள் ஆகவேண்டியிருப்பதனாலேதான், தேவி ஜகன்மாதா வெள்ளத்தில் சாகாமல் காப்பாற்றியிருக்கிறாள். ஆதலின் மேலே நடக்க வேண்டியதற்கும் துர்க்கா பரமேசுவரியே வழி காட்டுவாள் அல்லவா ?

அன்று பகல் சென்றது. இன்னும் ஓர் இரவும் பகலும் கழிந்தன. புயல் தான் சென்றவிடமெல்லாம் அதாஹதம் செய்து கொண்டே மேற்குத் திசையை நோக்கிச் சென்று விட்டது.

தூவானமும் விட்டுவிட்டது. ஆனால் துர்க்கா தேவியின் கோயிலில் அகப்பட்டுக் கொண்ட பழுவேட்டரையருக்கு மட்டும் விடுதலை கிட்டவில்லை. கொள்ளிடத்து வெள்ளம் குறைந்தது போலக் காணப்பட்டது. ஆனால் உடைப்பு வர வரப் பெரிதாகிக் கொண்டு வந்தது. கோயிலைச் சுற்றிச் சென்ற வெள்ளம் குறையவில்லை. ஆழம் என்னமோ அதிகமாகிக் கொண்டே இருக்க வேண்டும். அதை அளந்து பார்ப்பது எப்படி ? அல்லது அந்த உடைப்பு வெள்ளத்தில் இறங்கி நீந்திச் செல்லுவது பற்றித்தான் நினைத்துப் பார்க்கவும் முடியுமா ?

கடைசியாக, அன்று சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பழுவேட்டரையர் எதிர்பார்த்தபடி, கோயிலுக்கு எதிரே இருந்த பெரும் வேப்ப மரமும் விழுந்தது. விழுந்த மரம் நல்ல வேளையாக உடைப்பு வெள்ளத்தின் மேற்குக் கரையைத் தொட்டுக் கொண்டு கிடந்தது. அதன் வழியாக அப்பால் செல்வதற்குப் பழுவேட்டரையர் ஆயத்தமானார். இரவிலே புறப்பட்டு அந்தக் காட்டுப் பிரதேசத்தில் எப்படி வழி கண்டு பிடித்துப் போவது என்பது பற்றிச் சிறிது தயங்கினார். சில கண நேரத்துக்கு மேல் அந்தத் தயக்கம் நீடித்திருக்கவில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான் என்று முடிவு செய்து, தம்மை அந்தப் பேராபத்திலிருந்து காத்தருளிய துர்க்கா பரமேசுவரிக்கு நன்றி தெரிவிப்பதற்காகச் சந்நிதியை நெருங்கினார். சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்தார்.

அச்சமயத்தில் அவர் உடம்பு சிலிர்க்கும்படியான குரல் ஒன்று கேட்டது. முதலில் துர்க்கையம்மன்தான் பேசுகிறாளோ என்று தோன்றியது. பிறகு, இல்லை; குரல் வெளியில் சிறிது தூரத்துக்கு அப்பாலிருந்து வருகிறது என்று தெளிவடைந்தார்.

''மந்திரவாதி! மந்திரவாதி!'' என்று கூப்பிட்டது அந்தக் குரல்.

பிறகு மறுபடியும், ''ரவிதாஸா! ரவிதாஸா !'' என்று மீண்டும் கூவியது. முன் எப்பொழுதோ கேட்ட குரல் போலத் தோன்றியது.

பழுவேட்டரையர் எழுந்து முன் மண்டபத்துக்கு வந்தார். தூண்

மறைவில் நின்று குரல் வந்த இடத்தை நோக்கினார். உடைப்பு வெள்ளத்துக்கு அப்பால், விழுந்த வேப்பமரத்தின் நுனிப் பகுதிக்கு அருகில், ஓர் உருவம் நின்று கொண்டிருக்கக் கண்டார். ''மந்திரவாதி! மந்திரவாதி!'' என்னும் கூக்குரல், அவருக்குத் தம் சகோதரன் முன்னொரு சமயம் கூறியவற்றை ஞாபகப்படுத்தியது. துர்க்காதேவியின் கருணையினால் தாம் அதுவரை அறிந்திராத மர்மத்தை அறிந்து கொள்ளப் போகிறோமோ என்ற எண்ணம் உதித்தது. ஆதலின் அசையாமல் நின்றார்.

அக்கரையில் நின்ற உருவம் விழுந்த வேப்ப மரத்தின் வழியாக உடைப்பு வெள்ளத்தைக் கடந்து வரத் தொடங்கியதைப் பார்த்தார்.

தம் வாழ்வில் அது வரை செய்திராத ஓர் அதிசயமான காரியத்தைப் பழுவேட்டரையர் அப்போது செய்தார். கோயில் முன் மண்டபத்தில் சட்டென்று படுத்துக் கொண்டார். தூங்குவதுபோல் பாசாங்கு செய்தார்.

ரவிதாஸன் என்னும் மந்திரவாதியைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆசை அவரை அவ்வளவாகப் பற்றிக் கொண்டது. அவன் நந்தினியைப் பார்ப்பதற்காகச் சில சமயம் அவர் அரண்மனைக்கு வந்த மந்திரவாதியாகவே இருக்கவேண்டும். அவனுக்கும் நந்தினிக்கும் உள்ள தொடர்பு உண்மையில் எத்தகையது? அவனை இந்த இடத்தில் இந்த வேளையில் தேடி அலைகிறவன் யார்? எதற்காகத் தேடுகிறான்? இதையெல்லாம் தெரிந்து கொண்டால், ஒரு வேளை நந்தினி தம்மை உண்மையிலேயே வஞ்சித்து வருகிறாளா என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம் அல்லவா? ரவிதாஸன் மட்டும் தம்மிடம் சிக்கிக் கொண்டால், அவனிடத்திலிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் விடுவதில்லை என்று மனத்தில் உறுதி கொண்டார்.

தூங்குவது போல் பாசாங்கு செய்தவரின் அருகில் அந்த மனிதன் வந்தான். மீண்டும், ''ரவிதாஸா! ரவிதாஸா!'' என்று கூப்பிட்டான்.


ஆகா! இந்தக் குரல் கடம்பூர் மாளிகையில் முன்னொரு தடவை வேலனாட்டம் ஆடிக் குறி சொன்னானே, அந்தத் தேவராளன் குரல் போல் அல்லவா இருக்கிறது? இவனுடைய கழுத்தைப் பிடித்து இறுக்கி உண்மையைச் சொல்லும்படி செய்யலாமா? வேண்டாம்! இன்னும் சற்றுப் பொறுப்போம். இவன் மூலமாக மந்திரவாதி ரவிதாஸனைப் பிடிப்பதல்லவா முக்கியமான காரியம்?

''மந்திரவாதி! சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளேயே தூங்கி விட்டாயா? அல்லது செத்துத் தொலைந்து போய் விட்டாயா?'' என்று சொல்லிக் கொண்டே வந்த மனிதன் பழுவேட்டரையரின் உடம்பைத் தொட்டு அவருடைய முகம் தெரியும்படி புரட்டினான். அப்படிப் புரட்டியும் பழுவேட்டரையர் ஆடாமல் அசையாமல் கிடந்தார்.

பின் மாலையும் முன்னிரவும் கலந்து மங்கிய அந்த நேரத்தில், மங்கலான வெளிச்சத்தில், தேவராளன் (ஆமாம்; அவனேதான்!) பழுவேட்டரையரின் முகத்தைப் பார்த்தான். தன் கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு இன்னொரு தடவை உற்றுப் பார்த்

ஆழ்கடல் இல்லம்

பூமியில் ஜனநெரிசல் அதிகமாகி விட்டால் எதிர் காலத்தில் மனிதன் கடலுக்கடியில் வாழலாம். இதற்கான ஆராய்ச்சிகள் இன்றைக்கே நடந்து வருகின்றன. நீரில் மீன் எப்படி சுவாசிக்கிறது? நீரில் கலந்துள்ள காற்றைத் தனியே பிரித்தெடுக்கும் சக்தி மீனில் உள்ள 'கில்' எனப்படும் ஓர் அவயவத்துக்கு உண்டு. இந்த உறுப்பு போன்றே செயற்கை முறையில் தயாரித்து அதை ஆழ்கடல் இல்லத்தின் சுவர்களில் பொருத்தி விட்டால்?



முயல்களை வைத்துப் பரிசோதனைகள் நிகழ்த்தினதில் இவ்வாறு நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் காற்றைச் சுவாசித்து வாழ்வது சாத்தியமே என விஞ்ஞானிகள் கண்டிருக்கின்றனர்.

ஆதாரம்: ஸ்பான்

தான். பீதியும், பயங்கரமும், ஆச்சரியமும், அவநம்பிக்கையும் கலந்து தொனித்த ஈனக் குரலில், "ஊ! ஊ!" "ஓ! ஓ!" "ஆ! ஆ!" என்று ஊளையிட்ட வண்ணம் அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தான்!

பழுவேட்டரையர் கண்ணைத் திறந்து நிமிர்ந்து உட்கார்ந்து பார்ப்பதற்குள்ளே அவன் கோயிலுக்கு முன்னாலிருந்த பலிபீடத் திறந்த மண்டபத்தை இரண்டு எட்டில் தாண்டிச் சென்று, வேப்பமரப் பாலத்தின் மீது வேகமாக நடக்கத் தொடங்கி விட்டான்.

திரும்பிப் பார்ப்பதற்குக்கூட ஒரு கணமும் நில்லாமல் அதிவிரைவாக அம்மரத்தின் மீது ஓட்டமும் தாவலுமாகச் சென்று அக்கரையை அடைந்தான். மறுகணம் புதர்களும் மரங்களும் அடர்ந்த காட்டில் மறைந்து விட்டான்.

பழுவேட்டரையர் அவன் மிரண்டு தாவி ஓடுவதைக் கண் கொட்டா வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். காட்டில் அவன் மறைந்ததும், சமயம் நேர்ந்த போது அவனைப் பிடிக்காமல் தாம் விட்டுவிட்டது தவறோ என்ற ஐயம் அவரைப் பற்றிக் கொண்டது. உடனே, அவரும் குதித்து எழுந்து ஓடினார். தேவராளனைப் போல் அவ்வளவு வேகமாக மரப் பாலத்தின்பேரில் அவரால் தாவிச் செல்ல முடியவில்லை. மெள்ள மெள்ளத் தட்டுத் தடுமாறிக் கிளைகளை ஆங்காங்கு பிடித்துக் கொண்டு தான் போகவேண்டியிருந்தது.

அக்கரை அடைந்ததும் காட்டுப் பிரதேசத்துக்குள்ளே ஒற்றையடிப் பாதை ஒன்று போவது தெரிந்தது. அதை உற்றுப் பார்த்தார். சேற்றில் புதிதாகக் காலடிகள் பதிந்திருந்தது தெரிந்தது. அந்த வழியிலேதான் தேவராளன் போயிருக்க வேண்டுமென்று திர்மானித்து மேலே விரைவாக நடந்தார்.

அது முன்னிலாக் காலமானாலும் வானத்தில் இன்னும் மேகங்கள் சூழ்ந்திருந்த படியால் நல்ல இருட்டாகவே இருந்தது. காட்டுப் பிரதேசத்தில் என்னவெல்லாமோ சத்தங்கள் கேட்டன. புயலிலும் மழையிலும் அடிபட்டுக் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்த காட்டில் வாழும் ஜீவராசிகள் கணக்கற்றவை மழை நின்றதினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்துக் குரல் கொடுத்துக் கொண்டு அங்குமிங்கும் சஞ்சரித்தன.

ஒற்றையடிப் பாதை சிறிது தூரம் போய் நின்று விட்டது. ஆனால் பழுவேட்டரையர் அத்துடன் நின்றுவிட விரும்பவில்லை. அன்றிரவு முழுவதும் அந்தக் காட்டில் அலைந்து திரியும்படி நேர்ந்தாலும் அந்தத் தேவராளனையும் அவன் தேடிப் போகும் மந்திரவாதி ரவிதாஸனையும் பிடித்தே தீருவது என்று தீர்மானித்துக் கொண்டு, காட்டுப் புதர்களில் வழி கண்ட இடத்தில் நுழைந்து சென்றார்.

ஒரு ஜாமநேரம் காட்டுக்குள் அலைந்த பிறகு சற்றுத் தூரத்தில் வெளிச்சம் ஒன்று தெரிவதைப் பார்த்தார். அந்த வெளிச்சம், நின்ற இடத்தில் நில்லாமல் போய்க் கொண்டிருந்தபடியால், அது வழி கண்டு பிடிப்பதற்காக யாரோ கையில் எடுத்துச் செல்லும் கூளுந்தின் வெளிச்சமாகவே இருக்க வேண்டும்.

அந்த வெளிச்சத்தைக் குறி வைத்துக் கொண்டு வெகு விரைவாக நடந்தார். வெளிச்சத்தை நெருங்கிச் சென்று கொண்டிருந்தார்.

கடைசியாக, அந்தச் சுளுந்து வெளிச்சம் காட்டின் நடுவே ஒரு பாழடைந்த மண்டபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுபோல் காட்டி விட்டு உடனே மறைந்தது. அந்த மண்டபம் திருப்புறம்பயத்திலுள்ள பிருதிவீபதியின் பள்ளிப்படைக் கோயில்தான் என்பதைப் பழுவேட்டரையர் பார்த்த உடனே தெரிந்து கொண்டார். பள்ளிப்படையை நெருங்கி ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக நின்று காது கொடுத்துக் கேட்டார்.

ஆமாம்; அவர் எதிர்பார்த்தது வீண்போக வில்லை. இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தது கேட்டது. உரத்த குரலில் பேசியபடியால் பேசியது தெளிவாகக் கேட்டது.

"மந்திரவாதி! உன்னை எத்தனை நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? நீ ஒரு வேளை வர முடியாமற் போய் விட்டதோ, அல்லது உன்னையுந்தான் யமன் கொண்டுபோய் விட்டானோ என்று பயந்துபோனேன்!" என்றான் தேவராளன்.

மந்திரவாதி ரவிதாஸன் கடகட வென்று சிரித்தான்.

"யமன் என்னிடம் ஏன் வருகிறான்? சுந்தர சோழனையும் அவனுடைய இரண்டு பிள்ளைகளையுந்தான் யமன் நெருங்கிக் கொண்டிருக்கிறான். நாளைய தினம் அவர்களுடைய வாழ்நாள் முடிந்துவிடும்!" என்றான் மந்திரவாதி.

அச்சமயம் வானத்தையும் பூமியையும் பிரகாசப்படுத்திக் கொண்டு மின்னல் ஒன்று மின்னியது. (தொடரும்)



77. படை புறப்பட்டது


“யாராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, ஏன் யாராலும் நினைக்கக் கூட முடியாத ஒரு காரியத்தை ஹனுமான் செய்து முடித்தான். இவனுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்து திருப்தி அடைய முடியும்?'' என்று ராமசந்திரன் ஹனுமானைக் கட்டி அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான். பிறகு மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி யோசித்தான்.

''சுக்ரீவ! ஹனுமான் அற்புதமான காரியம் செய்தான். ராக்ஷசர்களால் காக்கப்பட்ட லங்கா நகரத்தில் புகுந்து சீதையைக் கண்டு அவளுக்குத் தைரியம் சொல்லி அவளுடைய உயிரைக் காப்பாற்றினான். அவளைப் பற்றி க்ஷேம சமாசாரம் கொண்டு வந்து என்னையும் காப்பாற்றினான். ஆனால், இப்போது சமுத்திரத்தை எப்படித் தாண்டப் போகிறோம்? உன்னுடைய சேனை எவ்வாறு அக்கரை போய்ச் சேருவது? ராவணனுடைய நகரத்தையும் ராக்ஷச சேனையையும் தாக்க வேண்டுமானால் முதலில் நாம் இந்தக் கடலைத் தாண்ட வேண்டுமல்லவா? இதற்கு வழி தோன்றவில்லை. ஹனுமான் செய்த பெருங் காரியமும், அதனால் உண்டான மகிழ்ச்சியும் இந்தக் கவலையில் கரைந்து போவதாக இருக்கிறது'' என்று சொல்லி தியானத்தில் மூழ்கினான்.

ராமனுடைய கவலையைக் கண்டு வானர ராஜன், ''இது என்ன, ராமனே! நீரும் இப்படி மனத் தாழ்ச்சி அடையலாமா? உமக்கு என்ன பயம்? இதோ என் வீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் உமக்காக உயிரைக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். சந்தோஷமாகவே உயிரைக் கொடுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். கவலைப்படலாகாது. கவலை அதைரியத்தை உண்டாக்கும். மனத்தைக் கவலையில் செலுத்தாதீர். உம்மையும் தம்பியையும் லங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது எங்கள் காரியம். அதைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம். நீர் பகைவனைக் கொன்று சீதையை மீட்டுக் கொண்டு வராமற் போவதில்லை. இதை உறுதியாக நம்புவீர். லங்கையை எப்போது ஹனுமான் கண்டானோ அப்போது அந்தக் கோட்டை அழிந்தது என்று வைத்துக் கொள்வீர். சோகத்தில் பயனில்லை. சோகம் சூரனுக்குப் பெரும் பகை. அது தைரியத்தை அழிக்கும். அதை உடனே விலக்குவீர். எல்லாம் தெரிந்த உமக்கு நான் ஏன் சொல்ல வேண்டும்? உமக்குத் துணை நாங்கள் இருக்க நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? நானும் என்னுடைய வானரர்களும் உமக்குத் துணையாக இருக்க, வில் பிடித்து நீர் நின்றால் உம்மைத் தடுப்பவர் யார்? நீர் இனிச் சோகத்தை நீக்கி க்ஷத்திரியனுக்குரிய ரோஷத்தை மேற்கொள்வீர். கடலை எவ்வாறு தாண்டுவது என்பதை உம்முடைய நுண்ணறிவைப் பயன்படுத்தி ஆராய்வீர். என்னுடைய வானர வீரர்களுடைய சக்தியை அறிந்து கொண்டு அவர்களைப் பயன்படுத்திக் கொள்வீர்! நமக்கு வெற்றி நிச்சயம். என் உள்ளத்தில் எழும் உணர்ச்சியே அதற்குச் சாட்சியாகும் ஒரு நிமித்தம்'' என்றான்.

இவ்வாறு தேற்றி வானர ராஜன் ராமனை உற்சாகப்படுத்தினான். ராமனும் ஹனுமானும் பிறகு லங்கையைப் பற்றிப் பேசினர். நகரம், கோட்டை, அரண் முதலியவைகளின் பலத்தைச் சக்கரவர்த்தித் திருமகன் கேட்டு அறிந்து கொண்டான்.

லங்கையின் ஐசுவரியம், சுபிட்சம், ராக்ஷசர்களின் சந்தோஷம், ராவணனிடம் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, அன்பு இவற்றையெல்லாம் ஹனுமான் ஒன்றும் மறக்காமல் சொன்னான். ராவணனுடைய சேனா பலம், கோட்டையின் பலம், அதன் அரண்களின் அமைப்பு, மிகக் கவனமாகக் காவல் காக்கும் சேனா பலம், கல்லெறி யந்திரங்கள், மதில்சுவர்கள்,



வாயில்கள், அகழிகள், அகழிகளின் மேல் வேண்டிய போது இறக்குவதும் மேலே தூக்கிவிடுவதுமான மரப் பாலங்கள் — இவையெல்லாம் எவ்வளவு ஜாக்கிரதையாகவும் பலமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஹனுமான் ராமனுக்கு எடுத்துச் சொன்னான். கடற்கரையைப் பற்றியும் சொன்னான். கப்பல்கள் அங்கே அண்ட முடியாது. ''திரிகூட மலையும் லங்கா நகரமும் கோட்டையும் எந்தச் சத்துருவும் பக்கத்தில் நெருங்க முடியாத முறையில் ராவணனால் காக்கப்பட்டு வருகின்றன. ராவணனுடைய பலமும், செல்வமும், சேனா பலமும் சொல்லுக்கு அடங்காதவை. ஆயினும் நம்முடைய வானர சேனைக்கு இவைகளை யெல்லாம் அழிக்கும் சக்தி உண்டு என்று உறுதியாக இருப்பீராக. அங்கதன், த்விவிதன், மயிந்தன், ஜாம்பவான், பனஸன், நளன், நீலன் இந்த நிகரற்ற வீரர்கள் இருக்கிறார்கள். பெரும் படையும் இருக்கிறது. தரையைத் தீண்டாமல் மேலே கிளம்பிச் சென்று லங்கையை அழிப்போம். அதன் மலைபரணையும் காட்டரணையும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. உடைத்து நாசம் செய்வோம். நல்ல முகூர்த்தம் பார்த்துப் புறப்பட உத்தரவு கொடுங்கள்'' என்று ஹனுமான் சொன்னான்.

*　　*　　*

உத்தர பல்குனி நட்சத்திரத்தன்று வெற்றி தரும் முகூர்த்தமான மத்தியான காலத்தில் வானரப் படை தெற்



குக் கடலை நோக்கிப் புறப்பட்டது. புறப்படும்போது நல்ல சகுனங்கள் கண்டார்கள். ராமனும் சுக்ரீவனும் லக்ஷ்மணனும் பேசிக் கொண்டு சென்றார்கள்.

"நாம் புறப்பட்டோம் என்பதைச் சீதை அறிந்தால் தைரியமடைந்து உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்" என்றான் ராமன்.

மார்க்கமறிந்த படை வீரர்கள் சிலர் முன்னால் சென்று, போகும் வழியில் பகைவர்கள் மறைந்திருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டு சென்றார்கள். பெருஞ் சேனைக்கு உணவும் தாகத்துக்குத் தண்ணீரும் கிடைக்கும் பிரதேசமாகப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். வானரப் படை வெகு வேகமாக மலைகளையும் காடுகளையும் தாண்டிச் சென்றது. ராமனையும் லக்ஷ்மணனையும் வானரர்கள் தூக்கிச் சென்றார்கள்.

சேனையில் உற்சாகம் பெருகி வளர்ந்தது. குதித்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும் வானரர்கள் சென்றார்கள். ராவணனை 'நான் கொல்வேன்' 'நான் கொல்வேன்' என்று போட்டிப் போட்டுப் பேசிக் கொண்டு சென்றதை ராமன் கேட்டு உற்சாகம் அடைந்தான். நீலனும் குமுதனும் சேனைக்கு முன்புறமாக மார்க்கத்தைச் சோதித்துக் கொண்டு சென்றார்கள். பின்னாலும் சிறந்த வீரர்கள் சேனையைக் காத்து வந்தார்கள். ராஜா சுக்ரீவனும் ராம லக்ஷ்மணர்களும் சேனையின் மத்தியப் பாகத்தில் சென்றார்கள்.

வழியில் வந்த நகரங்களுக்காவது கிராமங்களுக்காவது எவ்வித சேதமும் செய்யாமல் செல்ல வேண்டுமென்பது ராமனுடைய கண்டிப்பான உத்தரவு.

படையின் கோஷம் சமுத்திரத்தின் சப்தம் போல் எட்டுத் திசைகளிலும் நிறைந்தது. தூசி ஆகாயம் அளாவிக் கிளம்பிற்று.

மகேந்திர மலையண்டை வந்ததும் ராமன் மலைமேல் ஏறிக் கடலைப் பார்த்தான்.

"இனி இந்தச் சமுத்திரத்தை எப்படி நம்முடைய சேனை கடப்பது என்பதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். அது வரையில் இவ்விடம் வனத்தில் சேனை தங்கலாம்" என்றான் ராமன். அவ்வாறே சுக்ரீவன் படை வீரர்களுக்கு ஆணையிட்டான்.

சமுத்திரக்கரை வனத்தில் வானர சேனை தங்கிற்று. பகைவர்களுடைய சூழ்ச்சியால் யாதொரு தீங்கும் ஏற்படாமல் வீரர்கள் நான்கு பக்கமும் ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார்கள். எல்லாருக்கும் சௌகரியமாகத் தங்குமிடம் அமைந்ததா என்று சுக்ரீவனும் ராமலக்ஷ்மணர்களும் பார்த்துத் திருப்தி அடைந்தபின் ராமன் லக்ஷ்மணனுடன் தனியாக உட்கார்ந்து பேசினான்.

"பிரியமான ஒரு பொருளை இழந்து விட்டால் நாளடைவில் அதன் நினைவும் அதை விட்டுப் பிரிந்த துயரமும் குறைந்து போகும் என்று சொல்லுகிறார்களே? ஆனால், லக்ஷ்மணா! சீதையின் பிரிவைப் பற்றி நான் இதைக் காணவில்லை" என்றான்.

"ராவணன் சீதையைப் பிடித்துத் தூக்கிப் போகும்போது, 'ஹா நாதா! ஹா ராமா! ஹா லக்ஷ்மணா!' என்று சீதை கத்தினாளே! நாம் உதவாமல் போனோமே! அப்போது அவள் பட்ட துயரத்தை எண்ண எண்ண என் துக்கம் கடல் போல் பெருகுகிறதே. நான் என்ன செய்வேன்? விஷத்தைக் குடித்து விட்டு ஒவ்வொரு அவயமுவம் எரிகிறது போல் என் அவயவங்கள் எரிகின்றன. தேகம் முழுவதும் தீக் கொளுத்தினாற் போல் எரிகிறதே! கொடிய ராக்ஷஸிகளிடையே அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறாளே! ஜனகன் மகள், தசரத சக்கரவர்த்தி வீட்டில் புகுந்த மருமகள் தரையில் அரக்கிகளால் சூழப்பட்டுச் சிறையில் கிடக்கிறாளே!" என்று ராமன் துக்கப்பட்டுப் பிரலாபித்தான்.

"ராமா! துக்கப்படாதீர்! ராவணனை வதம் செய்து சீதையை வெற்றியுடன் அயோத்திக்கு அழைத்துச் செல்லும் நாள் கிட்டி வந்தது! தேவ கன்னியைப் போல் அயோத்தியில் பிரவேசிப்பாள்! துக்கத்தை ஒழித்துத் தைரியத்தை மேற்கொள்வீர்!" என்றான் தம்பி.

(தொடரும்)



விளையாட்டு அல்லாத ஒரு விளையாட்டுப் புத்தகம்!


1968ல் மெக்ஸிகோவில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டின் ஆதாரபூர்வமான முழு விவரம் இப்போது வெளியாகி யுள்ளது.

ஐந்து தொகுதிகளில் 2200 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் 3000 சாதாரண போட்டோக்கள்; வண்ணப் படங்கள் ஒராயிரம்.

விலை ரூபாய் 3000தான்! விளையாட்டல்ல!

—டி. என். வி.

ரே சலவையில் 3 வழிகளில் செயல் புரிந்து...



டட் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

– மற்ற எந்த பவுடரையும்விட.

இதோ, எப்படி என்று பாருங்கள்:

டெட் டிலுள்ள தனிப்பட்ட சக்திவாய்ந்த பொருள் அதி விரைவாகத் துணியில் ஊடுருவிச் சென்று, மறைந்துள்ள அழுக்கைக்கூட கோடியில் விரட்டி அடிக்கிறது. துணிகள் வெண்மையாகின்றன.

டெட் அழுக்கை வெளிக்கொணர்ந்த பிறகு, அது மீண்டும் படியாமல் தடுக்கிறது, துணிகள் அதிக சுத்தமாகின்றன: சுத்தமாகவே நீடித்து இருக்கின்றன.

டெட் துணிகளை அதிவெண்மையாக்குகிறது. துணிகள் முன்னைவிட அதிவெண்மையுடன் பளிச்சிடுகின்றன. (நீலம் அல்லது வெண்மைச் சாதனம் சேர்க்கவேண்டிய அவசியமில்லை.)

இன்றே டெட் வாங்குங்கள்! ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், பம்பாய்.

SHILPI HPMA 38A/70 TAM

அஜிதா பழைய அஜிதாவாக இல்லே. பம்பாய் மலபார் ஹில்லில் வசிப்பவள் நாகநாதன் காலனிக்குப் பொருத்த மானவளாக இல்லே. பஞ்சாபிப் பெண் களைப் போல் தலையலங்காரம் செய்து கொண்டு, மான்களைப் போல் மருண்ட பார்வையை வரவழைத்துக் கொண்டு, அசோகா ஹோட்டலுக்கு வருகிற அழகிகளைப் போல 'லோ ஹிப், டீப்-கட், ஸ்லீவ்-லெஸ்' அடைமொழிகளில் ஆடைகளணிந்து கொண்டு, செல்வச் செழிப்பும் கன்னக் கதுப்புமாய், எடுப் பும் துடிப்புமாய், பகட்டாய், பாலீஷாய்க் காணப்பட்டாள். சிவப்பி னிடையே தெரியும் முத்துப் போல் புன் னகைகூடப் பக்குவமாய், சிங்காரச் செட்டாய் இருந்தது.

வண்டியில் வந்து இறங்கிய பாஸ் கரன் அப்படியே ஒரு கணம் திகைத்து மலைத்துப் போய் நின்று விட்டான்.

அவர்களுடைய சந்திப்புக்கூட அமெ ரிக்கப் பாணியிலேதான் இருந்தது.

''ஹாய், பாஸ்கர் !''

''அஜிதா! இஸ் இட் யூ?...யூ லுக் மார்வெலஸ் !''

''கமான், பட்டி, யூ டு லுக் ஸோ ஹாண்ட்ஸம் !''

''ஏன், உனக்குத் தெரியாதா? நீ வந்து அவரைப் பார்க்கிறதில்லேயா?''

''இல்லே; இப்ப ஏதாவது திடீர் மாறுதல் உண்டோன்னுதான் கேக்க றேன் !''

அஜிதா முகத்தைச் சுளித்துக் கொண்டு ''அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஆளு படுத்துண்டுதான் இருக்கார் !'' என்றாள்.

''நீ வந்திருக்கிறது தெரியுமா ?''

''தெரியும்னு நினைக்கிறேன். கண் ணைத் திறந்து பார்த்தார்; பேசல்லே. இட்ஸ் எ பிட்டி, அவர் இன்னும் இப் படி இருக்கிறது!''

அவள் சொன்னது பாஸ்கரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அஜிதா உருவத் தோற்றத்தில் மட்டுமின்றி உள்ளப் பாங்கிலும் எப்படி மாறிப் போயிருந்தாள்! அவளிடம் மாறாமல் இருந்தது அந்த அலட்சியப் போக்கு ஒன்றுதான். அது அவன் விஷயத்தில் தெரியவில்லேயே தவிர, இன்னும் மெருகு ஏறியிருந்ததாக நிச்சயமாய்த் தெரிந்தது. யாரோ மூன்றும் மனித ரைப் பற்றிப் பேசுவது போலவா ஒருத்தி உதட்டிலேகூட ஒட்டாமல் பெற்ற தகப்பனைப் பற்றிப் பேசு

காணிக்கை . ஆர்வி .

இரு கைகளையும் நீட்டி, இரு தோள் களையும் பற்றி இரு குரல்களில் பேசி அவள் தன் உற்சாகத்தைக் காட்டிக் கொண்டாள்.

''யாரோ ஒரு அம்பாசிடருடைய டாட்டராக்கும்னு அசந்து போயிட் டேன் !''

''நான்கூடத்தான், ரிச்சர்ட்பர்ட்ட னுக்குப் போட்டியா யாரோ ஒரு ஃபிலிம் ஹீரோ மாதிரின்னு !''

இருவரும் இதைவிடப் பெரிய நகைச் சுவை எதுவுமே இல்லே என்பது போல அப்படிச் சிரித்தார்கள் ; மகிழ்ந்து போனார்கள். சகஜ நிலைக்குத் திரும்பவே அவர்களுக்கு வெகு நேரமாயிற்று.

''நீ மட்டும்தான் வந்திருக்கியா, அஜிதா ?''

''நான் மட்டும்தான் !''

''மாமா எப்படியிருக்கார்? எங்கே இருக்கார் அவர் ?''

வாள்? இத்தனைக்கும் அம்மாவைவி அப்பாவிடம் அவளுக்குத் தனிப் பரிவு உண்டு என்று பேர். மிதமிஞ்சிய செல்வத்திலும் வசதியிலும் திளைப்ப வர்களுடைய மனப் போக்கு எவ்வளவு தூரம் மாறக்கூடும் என்பதற்கு அஜிதா வைப் பார்த்தாலே போதும் என்று அவன் நினைத்துக் கொண்டான். இந்த நினைப்பு என்னவோ அவனுக்குக் கொஞ்ச நேரம்தான் இருந்தது. சற் றைக்கெல்லாம் அது பட்டாம்பூச்சி யைப் போல் பறந்து விட்டது.

வந்ததற்கு மாமாவைப் போய் முதலில் பார்க்க வேண்டும் என்று அவன் நினைத்தான். அஜிதாவும் கூடவே மாடிக்கு வந்தாள். ராஜா மாதிரி யிருந்த மாமாவின் உடல் இளைத்து வெளுத்திருந்தது. அவர் கண்கள் அவ னைப் பார்த்தன.

'' அஜிதா வந்திருக்காளே, அவ ளோட பேச வேண்டாமா ?''

என்று வருத்தத்தோடு அவன் கேட்டான்.

அவர் உதடுகள் மெல்ல அசைந்தன. விவரமில்லாத முனகல்.

''ம்..... வந்திருக்கா ...... நீதான் பேசேன்!'' அவர் குரல் வெளியில் கேட்கவில்லை. உத்தேசமாக இப்படித்தான் அவர் முனகியிருப்பார்.

பாஸ்கரனும் அஜிதாவும் சிறிது நேரம் நின்றுவிட்டு வெளி ஹாலில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.





''கூல் டிரிங் கேட்டீங்களே; நீங்கள் மாஜிக் நிபுணராச்சேன்னு இப்படிக் கொண்டு வந்தேன்!''

''நீ டெலிபோன் பண்ணினதுமே எனக்குப் பயமாகப் போச்சு, மாமாவுக்கு என்னமோ ஏதோன்னு! முந்தி அவ்வளவு மோசமாப் போனப்பக்கூட நீ வராமல் இருந்துட்டியே, ஏன்?''

''ப்ஸ! என்னமோ வரல்லே. அதான் இப்ப வந்திருக்கேனே!''

''நான் அமெரிக்காவிலேருந்து பம்பாய்க்கு வந்ததுமே உன்னைப் பார்க்க டிரை பண்ணினேன். முடியவேயில்லே!''

''அச்சா!'' என்றாள் அவள். அதற்காகத் துளிக்கூட வருத்தப்படவில்லை. அதற்கு மேல் அவளுடைய கணவனைப் பற்றியோ, மாமனாரைப் பற்றியோ பேசவும் விடவில்லை அவள். அவன் தான் அமெரிக்காவுக்குப் போனது, வந்தது நடுவில் நாகலக்ஷ்மி மாமியைப் பற்றித் தெரிந்து கொண்டது எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சம் சொன்னான். இப்போது சொந்தமாகத் தொழில் ஆரம்பித்திருப்பதையும் இன்னும் அதை விரிவுபடுத்த வேண்டியிருப்பது பற்றியும் சொன்னான். ஆனால் தனக்குக் கல்யாணமானது பற்றி மூச்சுக்கூட விடவில்லை. 'அவள் கேட்கட்டும்; சொல்லிக் கொள்ளலாம்' என்றிருந்தான். கடைசி வரையில் அஜிதா அதை விசாரிக்கவேயில்லை. இது அவனுக்கு என்னவோ ரோசமாக இருந்தது. ஒரு சமயம் அவளுக்கு விஷயமே தெரியாதோ என்றும் அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அப்படியிருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இங்கே இருக்கிற அஜிதா வேறு; பம்பாயில் இருக்கிற அஜிதா வேறு என்றுதான் அவனுக்குப் பட்டது.

''சரி, எனக்கு நேரமாச்சு; புறப்படறேன். அப்புறமாப் பார்க்கலாம். இருப்பியோ, இல்லையோ?''

''ஷ்யூர், ஷ்யூர்!... இருப்பேன்!''

அவள் திடீரென்று என்ன காரணமாக வந்திருக்கிறாள், இன்னும் எத்தனை நாள் இருப்பாள் என்பதையெல்லாம் கேட்காமல் போனோமே என்று அவன் தொழிலகத்துக்குப் போகும் போது நினைத்துக் கொண்டான். இருந்தாலும் இந்த அஜிதாவிடம் அவனுக்கு நம்பிக்கை இல்லை. முந்தியைக் காட்டிலும் எத்தனைக்கெத்தனை கவர்ச்சியாக இருந்தாளோ அதைக் காட்டிலும் ஆழம் காண முடியாதவளாகவும் தோன்றினாள். பேச்சு, சிரிப்பு எல்லாம் போலியாகவும் செயற்கையாகவும் தென்பட்டன. சோபனா, யாமினி இவர்களோடு நெருங்கிப் பழகியிருப்பவனுக்கு அஜிதாவை எடைபோடுவது ஒரு பெரிய காரியமல்லவென்றே பட்டது. யாமினி இப்படியல்ல. அவளுடைய உள்ளத்திலிருப்பது எல்லாம் கண்ணிலேயே தெரியுமே! அவள் எங்கே, இந்த அஜிதா எங்கே?

தொழிலகத்துக்குப் போனதுமே அவனுடைய வலக்கரம் போல் இருந்த ராஜேஷ் வீட்டிலிருந்து இரண்டு தடவை 'போன்' வந்ததாகச் சொன்னான்.

''யாரு, எங்க வீட்டிலிருந்தா, ரெண்டு தடவையா?''

''ஆமாம்; உங்க மிஸஸ்தான் பேசினாங்க. ரெண்டாவது வாட்டி டாக்டர் வீட்டிலேயிருந்து பேசினாங்கன்னு நினைக்கிறேன்.''

டாக்டர் வீடு என்றதும் பாஸ்கரனுக்குப் பதற்றமாகப் போய்விட்டது. அவன் வீட்டை விட்டுப் புறப்பட்ட போது வாந்தியும் குமட்டலுமாக யாமினி தவித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன ராஜ், நினைக்கிறேன்னு சொல்றே. சரியா, விளக்கமாக் கேட்டுக்கப்படாதா?'' என்று அலுத்துக் கொண்டே வீட்டுக்கு டயல் செய்தான்.

லயன் கிடைத்ததும், ''என்ன யாமினி, போன் செய்தாயாமே!'' என்று பரபரப்பாகக் கேட்டான்.

''யாரு, பாஸ்கரனு பேசறது? நான்தாண்டாப்பா, உங்கம்மா பேசறேன். யாமினி படுத்துண்டிருக்கா. என்ன கேக்கணும் அவகிட்டே?''

''ஒண்ணுமில்லேம்மா. அவளுக்கு என்ன உடம்புக்கு? ரெண்டு தடவை போன் செய்தாளாமே!''

''செய்திருப்பாள். அதான் நான் சொன்னேனே. எம் பேச்சிலே நம்பிக்கைப்படாதுன்னு அம்புலு டாக்டர் கிட்டே வா, போவோம்னு அழைச்

சிண்டு போனேன்.... அவ படற இம்சை எனக்கே பொறுக்கப்படல்லே.''

''உம்.... அப்புறம்?''

''அப்புறம் என்ன சப்பரம்! நான் தான் சொன்னேனே... அவ உள்ளே அழைச்சிண்டு போய்ப் பார்த்துட்டு ரெண்டு மாசம்னு சொல்லிப்புட்டா. அம்புஜு டாக்டர்னு எப்படியிருப்பாளோன்னு நினைச்சிண்டு இருந்தேன். சின்ன வயசாத்தான் இருக்கா. சிரிச்ச முகமா பொறுமையாச் சொல்றா.....''

''அம்புஜு டாக்டர் இல்லேம்மா... அம்புரோஸ்...மிஸஸ் அம்புரோஸ்!''

''எந்தப் பேரா இருந்தா எனக்கென்ன? நல்ல சேதியாச் சொன்னாளே, அதானே எனக்கு வேண்டியது! அப்புறம் என்னமோ மாத்திரையைக் கொடுத்தா. என்னமோ டானிக்குன்னு எழுதிக் கொடுத்தா. வந்து மாத்திரையைச் சாப்பிட்டுட்டுப் படுத்துண்டிருக்கா. வேணும்னு கூப்பிடட்டுமா?''

''ஊகும்; வேண்டாம். தொந்தரவு பண்ணுவானேன்? நன்னா ரெஸ்ட் எடுத்துக்கட்டும்.''

''நீ இப்படிச் சொல்றே. இதுக்குள்ளே அவளே எழுந்து வந்துட்டா!''

''என்ன யாமினி, டாக்டரைப் பார்த்துட்டு வந்தாச்சா? திருப்தி தானே?''

''உங்களுக்கு? உங்களுக்கும் திருப்தி தானே.....? யாரையோ பார்க்கப் போனேளே — அதைக் கேக்கறேன்!''

''ஓ! என்னமோ மாதிரி கேக்கறியே, என்ன?''

''ஒரு மாதிரியுமில்லே. ரொம்ப நேரமா பாக்டரிக்கு வரக் காணோமேன்னு கேக்கறேன்.....''

''இது என்ன ஒரு பெரிய நேரமா? ஒசந்தா ஒரு மணி நேரம் இருந்திருப்பேன். நாலு வருஷத்துக்கு மேலே ஆகறது பார்த்து!''

''அப்பச் சரி. ஒரு மணி அவகாசம் போறுதுதான். நாலு வருஷத்துக்கு மேலேன்னு சொன்னா குறைஞ்சது நாலு மணி நேரமாவது வேண்டாமா? இருந்தாலும் ரொம்பச் சுருக்காத்தான் பார்த்துட்டு வந்திருக்கேள். திருப்தி இருக்காதுதான். என்னமோ போகட்டும்.... அம்மா சொன்னாளோ இல்லையோ, எல்லாம்? அதைச் சொல்லணும்னுதான் கூப்பிட்டேன். இன்னொண்ணையும் கையோடே ஞாபகப்படுத்திப்பிடறேன். உங்களுக்கு இன்னும் சாப்பாடு ஆகல்லே. ஆறி அவலாப் போனப்புறம் வந்து சாப்பிட வேண்டாம்!''

யாமினி ரிஸீவரை 'டக்'கென்று வைக்கும் சத்தம் கேட்டது. அவன் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

அத்தியாயம் 34

பெண்களிலே குறிப்பாகச் சில பேருக்குக் கோபமோ, பொருமையோ வந்துவிட்டால் எத்தனை அழகாக இருக்கிறது! யாமினியின் கோபமும் சரி, பொருமையும் சரி, அந்த வகையைச் சேர்ந்ததுதான்! அவளை அப்போது பார்த்தால் புதிதாகப் பூத்த ரோஜாப் புஷ்பம் நினைவுதான் வரும்.

இத்தனைக்கும் அவள் தன்னுடைய பொருமையை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. காரியங்கள் நடந்த வேகத்திலிருந்தே அவன் அதைத் தெரிந்து கொண்டு விட்டான்.

எப்போதும் வருகிற நேரத்துக்கு வீடு திரும்பி வந்தால்கூட அவள் என்னவோ போல அவனை உன்னிப்பாய்ப் பார்ப்பாள். அந்த முகத்திலிருந்து எதையோ தெரிந்து கொண்டுவிட முயல்வது போல் இருக்கும் அவள் பார்வை.

''நேரே எங்கேருந்து, பாக்டரியிலேருந்துதானே?''

''ஆமாமாம்; பாக்டரியிலேயிருந்துதான்!''

''எங்கேயும் இன்னிக்குப் போகல்லியா?''

''ஏன் போகல்லே, பியர்ஸன் தண்டபாணியும் வைத்தியநாதனும் வந்து அழைச்சிண்டு போனாங்க. திரும்பி வர போது நாலைந்து பேர்களைப் பார்த்துட்டு வந்தோம். அதுக்கே நேரம் சரியாப் போச்சு!''

''வேறே ஒரு இடத்துக்கும் போகல்லியாக்கும்!''

''ஊகும்; இல்லே.''

''ஃபோனும் வரல்லியாக்கும்!''

''எங்கேருந்து?''

''அதான் நீங்க பாக்டரியிலேயே இல்லியே, வந்திருந்தாக்கூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது!''

அவள் இப்படியெல்லாம் ஏன் கேட்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் தெரியாதது போலவே காட்டிக் கொண்டான். அதாவது தெரியாதது போல நடந்து கொண்டதாக நினைத்தான். ஆனால் இந்த மாதிரி விஷயங்களில் தன் கணவன் எப்படி நடந்து கொள்வான் என்று எந்தப்

பெண்ணுக்குத்தான் தெரியாது? நாம் பத்தியப் பள்ளியில் அரிச்சுவடிக்கு அடுத்த பாடமாச்சே, இதெல்லாம்!

இன்னொரு பக்கத்தில் அஜிதாவும் கிட்டத்தட்ட இதே போலத்தான் நடந்து கொண்டாள். அவனுக்குக் கல்யாணமாகி விட்டதையோ அவனுக்காக வீட்டில் ஒரு மனைவி காத்திருப்பாள் என்பதையோ தெரிந்து கொண்டதாகவே அவள் காட்டிக் கொள்ள வில்லை. ஒரே ஒரு நாள் அத்தையைப் பற்றி மட்டும் ஒரே வார்த்தை போனால் போகிறது என்பது போல விசாரித்தாள். அதற்கு மேல் மறந்தும் அவள் அவனுடைய வீட்டுப் பேச்சை எடுக்க வில்லை. 'ஓ — இவள் என்ன, அத்தனை கெட்டிக்காரியா?' என்று பாஸ்கரன் ரோசப்பட்டுக் கொண்டான்.

''என்ன அஜிதா, எனக்குக் கல்யாணமானது பற்றி உனக்குத் தெரியவே தெரியாதா?'' என்று சற்றுக் காரமாகவே கேட்டான் அவன், மூன்று நாள் கழித்து.

'' ஓ, எனக்குத் தெரியுமே !''

''தெரியுமா ? ஆனால் நீ தெரிஞ்சதாகவே காட்டிக்கக் காணுமே? சாதாரணமா என்ன, ஏதுன்னு கேக்காமல் இருக்கிறதுதான் பெரிய பணக்காரத் தனம் போலிருக்கு!''

''எதுக்குக் கோவிச்சுக்கறே?''

''கோபமில்லே அஜிதா, யோசிக்கிறேன். உறவு, ஒட்டுறவு, அக்கறை, பாசம் இதெல்லாம் வச்சுண்டா உங்களுக்குக் கட்டி வராது. அதெல்லாம் வந்து நடுத்தர வர்க்கத்தினருடைய ஸெண்டிமெண்டல் நான்ஸென்ஸ் ! அநாவசியமா அவங்க சேர்த்து வச்சிண்டிருக்கிற அழுக்குக் குப்பைகள் ! இல்லையா ?''

கேலிப் பசப்பலாகச் சிரித்தாள் அஜிதா. ''அமெரிக்காவுக்குப் போய் அத்தனை நாள் இருந்துட்டு வந்திருக்கே. அப்படியும் இந்த ஏழை பணக்காரன் நினைப்பெல்லாம் ரொம்ப அதிகமா வளர்த்திண்டிருக்கியே ! பணம் இருக்கிறது ஒரு கெடுதலா ? பணம் சம்பாதிச்சுச் சேர்த்து வச்சுக்காமே எல்லாருமே ஏழையாய் இருந்துட்டா அதனாலே பெரிய நன்மையா? அந்தப் பணம் இல்லாமெத்தானே உன்னாலே நினைச்ச தொழிலைச் சொந்தமா செய்ய முடியாதபடி இருக்கு? நினைச்சா இப்ப நான் உனக்கு எந்த உதவியும் செய்யலாமே!''

''செய்யலாம்; அப்படி இங்கே கூட சிலபேர்கிட்டே பணம் இருக்கு. ரொம்ப இருக்கு. ஆனால் நீங்க எல்லாருமே ஒரு தனி ஜாதி! இந்தப் பணத்தினாலே என்னெல்லாம் செய்ய முடியும்னு உங்களுக்குத்தான் அதிகமாத் தெரியும். அந்த அதிகப்படி ஞானம்தான் கெடுதல் ! ஏன்னு அது மனுஷனுக்கு அதிகமா இருக்க வேண்டிய அடிப்படையான குணத்தையெல்லாம் அடியோட மாத்திப்புடறது. அப்பா ஒரு லட்சியமில்லே; ஆம்படையான் ஒரு லட்சியமில்லே. யாருமே தனக்கு நிகரில்லேன்னு பண்ணிப்பிடறது !''

பாஸ்கரன் இதை ஒரு விவாதத்துக்காகத்தான் சொன்னான். ஆனால் அஜிதாவின் முகம் சட்டென்று சுருங்கி விட்டது. ஏதாவது மனம் புண்படும்படி பேசிவிட்டோமோ என்று பாஸ்கரனும் நிதானப்படுத்திக் கொண்டான்.

''நான் ஏதானும் தப்பாப் பேசிட்டேனா அஜிதா? நான் உன்னை மனசில் வைச்சுண்டு எதுவும் சொல்லல்லே. பொதுவா இங்கேயிருக்கிற சில பேருடைய போக்கைப் பார்த்துட்டுச் சொன்னேன் !''

''அது எனக்கும் பொருந்தறதுன்னு சொன்னியாக்கும் !''

''நோ, நோ — நீயா எதையாவது கற்பனை செய்துக்காதே. நான் உன்னைச் சொல்லல்லே; உன்னை நினைச்சுக்கவும் இல்லே. அப்படியிருந்தா உங்கிட்டேயே வந்து சொல்வேனா ?''

''அப்பாவைப் பார்க்கறதுக்குச் சமயத்துக்கு வரல்லேங்கிறதை நினைச்சுண்டு இப்படியெல்லாம் சொல்றயோன்னு பார்த்தேன். இல்லேன்னா சரி. அப்புறம் அதைப் பத்திப் பேசுவானேன்? அப்புறம்... நீ இப்ப எங்கே போகப் போறே ? நேரே பாக்டரிக்கா இல்லே, வீட்டுக்கா ?'' என்று குரலை மாற்றிக் கொண்டு கேட்டாள் அஜிதா.

அவனைக் கிளம்பச் சொல்லிப் பிடித்துத் தள்ளாத குறைதான்.

''வீட்டுக்குத்தான் போறேன் !''

''அப்பச் சரி; பார்க்கலாம் அப்புறம்!'' என்று எழுந்தாள் அஜிதா.

பாஸ்கரன் வண்டிக் கதவைத் திறக்கிற சமயத்தில், ''உன் 'ஒய்ஃ'பை ரொம்ப விசாரித்ததாகச் சொல்லு!'' என்றாள் அவள்.

''அவசியம் சொல்றேன்'' என்று அவனும் தலையை ஆட்டினான்.

அவன் புறப்படுகிற வரையில் அவள் அங்கேயே நின்று தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணாடியில் கண்டான் பாஸ்கரன். நிச்சயம் தன்னை அறியாமலே அவள் மனத்தைப் புண்படுத்தியிருப்பதாக அவனுக்குப்பட்டது.

அவன் வண்டி காம்பவுண்டைவிட்டு வெளியில் சென்ற கையோடு படகு


போன்ற ஒரு பெரிய வண்டி உள்ளே செல்வதைக் கவனித்தான். பம்பாயில் பதிவாகியிருந்த வண்டி. வண்டியை ஓட்டி வந்தவன் சீமான் வீட்டுப் பிள்ளையைப் போல் தென்பட்டான். பாஸ்கரன் கால் தானாகவே இயங்கியது; வண்டியும் தயங்கியது.

இப்படி ஓர் ஆணழகன் வருவதை எதிர்பார்த்துத்தான் அஜிதா தன்னைப் போகச் சொல்வதற்குப் பார்த்தாளோ என்று அவனுக்கு ஆத்திரமாய் வந்தது. வந்தவன் அவளுடைய கணவன் முரளி என்பது அவனுக்குத் தெரியாது.

(தொடரும்)

தொல்லை தராத தொலைபேசி

சாலைகளிலும் வீதிகளிலும்தான் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதில்லை. மக்கள் தொகை பெருகி, வாழ்க்கை நிலை உயர்கையில் தொலைபேசி போன்ற தகவல் போக்குவரத்துத் துறைகளிலும் அடிக்கடி நெரிசல் ஏற்படுகிறது. மணியும் அடிக்காமல் 'என்கேஜ்ட்' தொனியும் கேட்காமல் தொல்லைப்படுத்தும். இந்த அநுபவம் நமக்கே ஏற்படுகிறதென்றால் இரண்டு பேருக்கு ஒன்று வீதம் அமெரிக்காவில் பத்துக் கோடி தொலைபேசிகளுக்கு மேல் இருக்கின்றனவே, அங்கு நெரிசல் எவ்வளவு இருக்க வேண்டும்? இந்த நெரிசலை அவர்கள் . திறம்படச் சமாளித்து வரும்போதே எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்து விட்டனர். நாள்தோறும் மேலும் மேலும் தொலைபேசிகள் நிறுவப்பட்டு வருகின்றன. இன்று சராசரியில் ஒருவர் ஆண்டுக்கு 677 தடவை தொலைபேசியைப் பயன்படுத்துகிறார். இது மேலும் அதிகரிக்கவே போகிறது. போதாக் குறைக்கு ''கம்ப்யூட்டர்' என்னும் பொறிகளும் தொலைபேசி வழியாகத் தகவல்கள் அனுப்புகின்றன. தொலைபேசி வழியாக 'டெலிபிரின்ட்டர்' செய்திகள் அனுப்பப்படுவதும் சாதாரணம்.



எனவே, புழக்கத்திலுள்ள பழைய முறையில் கம்பங்கள் நட்டுக் கம்பிகள் இணைத்துத் தொலைபேசித் தொடர்புகள் வழங்குவதென்பது தேவைக்குப் போதுமானதல்ல.


ஆகவே, விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் தொலைபேசித் தொடர்புக்குப் புதிய ''வெகுவேக நெடுஞ்சாலைகள்'' உருவாக்கி வருகின்றனர்.

ஆய்வுக் கூடங்களிலிருந்து வெளிவரும் புதுமைப் படைப்புக்களில் ஒன்று: 'கோ—ஆக்ஸியல் கேபிள்', ஒரே சமயத்தில் 90,000 தொலைபேசிப் பேச்சுக்கள் நடைபெற வகை செய்வது. மற்றொன்று: மனிதனின் மணிக்கட்டுக் குறுக்களவேயுள்ள எஃகுக் குழாய். உள்ளே செம்புத் தகடு பொதியப்பட்டுள்ள இந்தக் குழாய் வழியாக ஒரே சமயத்தில் 2,50,000 தொலைபேசிப் பேச்சுக்கள் நடைபெற முடியும். அதாவது, இருபத்து நான்கு தொகுதிகள்கொண்ட கலைக் களஞ்சியத்தில் உள்ள சொற்கள் அனைத்தையும் ஒவ்வொரு எழுத்தாக இந்தக் குழாய் வழியாகக் கண் இமைப்பதற்குள் அனுப்ப முடியும். புதிய கேபிள், குழாய் இரண்டுமே பெல் டெலிஃபோன் ஆய்வுக் கூடத்தில் உருவாக்கப் பெற்றவை.

புதிய கேபிளுக்குள் 22 ''கோ—ஆக்ஸியல்'' புரிகள் உண்டு. ஒவ்வொரு புரியும் ஏறக்குறைய 'பென்சில்' திண்ணமுள்ளது. ஒவ்வொன்றும் 9000 ஒரு வழிக் குரல் தொடர்பு ஆற்றலுள்ளது. ஒரு ஜோடிப் புரிகள் கூடுதலாக வைத்திருக்கிறார்கள்; புரிகள் ஏதாவது பழுதுபட்டால் கூடுதல் புரிகள் தாமாக இயங்கித் தகவல் தொடர்பு தடைபடாமல் காக்கும்.

மற்றொரு புதுமைப் படைப்பான குழாய் வழியே டெலிபோன், டெலிவிஷன், டெலிவிஷன் டெலிபோன், கம்ப்யூட்டர் ஆகியன தரும் விவரங்களை ஒரு மின்னணுக்கருவி மில்லி மீட்டர் அலைகள் என்னும் மின்காந்த அலைகளாக மாற்றி அனுப்புகிறது. போய்ச் சேர வேண்டிய இடங்களில் மற்றொரு மின்காந்தக் கருவி இவ்வலைகளை மீண்டும் உரிய ஒலி, ஒளி வடிவத்துக்கு மாற்றுகிறது. கேபிள், குழாய் ஆகிய இரண்டையுமே பூமிக்குள் நாலடி ஆழத்தில் புதைத்துப் பயன்படுத்துவார்கள்.

குழாய் முறை 1974ல் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் சோதனை முறையில் புழக்கத்துக்கு வரும். பின்னர் சில ஆண்டுகளில் முறையான டெலிபோன், டெலிவிஷன் தொடர்புகளுக்குப் பயன்படுத்தப்படும். அப்போது தகவல் போக்குவரத்து நெரிசல் பழங்கதையாகிவிடும்!




உங்கள் சரியான
சுவைக்கு இணைந்த
நேர்த்தியான தேயிலை!
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
Brooke Bond
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட்
மிக நேர்த்தியான டீ
BB 6071

எளிமை போதும் இங்கிலீஷ் எழுத!



தெளிவுடன், திட்டமாகச் சொல்ல நினைத்ததைத் திறமையாக ஒருவர் வாசகனுக்குச் சொல்லிவிட்டால், அதுவே சுத்தமான இங்கிலீஷ் எழுதியது ஆகும். எழுத்திலே காணும் வருணனையிலும் நிகழ்ச்சிகளிலும் எண்ணங்களிலும் வாசகர்கள் லயித்துவிட முடிந்தால் எழுத்தாளரின் நடை என்ற ஒன்றைப் பற்றிய நினைவே எழாது. எழுத்தாளர் என்ன சொல்கிறார் என்பதிலேயே ஒன்றிப்போய் விடுவீர்கள். மீண்டும் மீண்டும் படித்து இவர்கள் எப்படி இவ்வளவு எளிதாயும் தெளிவாயும் தீர்க்கமாயும் எழுதியிருக்கிறார்கள் என்பதை உணர்வீர்கள்

சுத்தமான இங்கிலீஷ் எழுத இங்கிலீஷ்காரனாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

-ஆலன் வார்னர் - எ ஷார்ட் கைட் டு இங்கிலீஷ் ஸ்டைல்

-தம்பி சீனிவாசன்

கூனி மீன்

இதை மீன் என்று அழைப்பினும் உண்மையில் மீனாகக் கருத முடியாது. ஏனெனில் இது முதுகெலும்பில்லாத (crustacea) என்ற வகுப்பைச் சேர்ந்தது. பொதுவாக நீரில் நீந்துவதற்கு இதன் கால்களே உதவுகின்றன. தரையில் நகரவும் கால்கள் உதவும்.

"இறால்" என்று அழைக்கப்படும் இந்தக் கூனி மீன் ஆறுகளிலும், ஏரிகளிலும் கடலிலும் வாழ்கிறது. பெரும்பாலும் கரையோரக் கடலில் கூட்டம் கூட்டமாக நீந்திச் செல்லும்.


உடம்பு முழுதும் கொம்புப் பொருளாலான தோலினால் மூடப்பட்டிருக்கும். இது ஓர் ஓடு போன்று பாதுகாப்பாக உதவுகிறது. இந்த ஓட்டை நீக்கினால் வயிறு முழுவதும் பருத்த தசைக் கண்டங்கள் இருக்கும்.

இறால் பெரும்பாலும் செத்துக் கிடக்கும் பொருட்களைத் தின்று அசுத்தத்தைப் போக்கும் பிராணி. சிலசமயம் உயிருள்ள சிறு பிராணிகளையும் பிடித்து உண்ணும். மீன்களுக்கு இருக்கிறதுபோல் செவுள்கள் இருப்பதினால் செவுள்களின் வழியாகவே மூச்சு விடும்.

இறாலின் விசேஷத் தன்மை என்னவென்றால், இதன் உடம்பில் நுண்ணிய தொட்டுணர்வுக் கருவிகள் இருப்பதே. ஒவ்வோர் உணர் கொம்பின் அடியிலும் ஒரு சிறு பை உண்டு. அதில் நீர் நிரம்பியிருக்கும். நுண்மையான உணர்ச்சி மயிர்களும் உண்டு. இவற்றினிடையே மணலும் நிரம்பியிருக்கும். இறாலே மணலை இப் பைக்குள்ளே போட்டு வைத்துக் கொள்கிறது. இதை அறிவதற்காக ஒரு விஞ்ஞானி ஒரு சிறு பரிசோதனை செய்தார். நன்றாக வடிகட்டின நீரில் இறால் ஒன்றை விட்டார். அதில் இரும்புத் தூளை வைத்தார். உடனே அந்த இறால் இரும்புத் தூளைப் பையினுள் போட்டுக் கொண்டது. அவர் ஒரு பலமான மின்காந்தத்தைப் பிராணியின் மேலே பிடித்தார். உடனே இறால் மல்லாக்காகத் திரும்பிக் கொண்டது. இரும்புத் தூள் மேலே இழுக்கப்பட்டிருக்கும். அதனால் அம்மீன் இழுப்பு வலிமை மிக்க பக்கமாகத் திரும்பிக் கொண்டிருக்க வேண்டும்.

இறால் தான் இருக்கும் இடத்துக்கு ஏற்றவாறு தன் நிறத்தை மாற்றிக் கொள்ள வல்லது. இது அதன் உடலில் உள்ள பல வண்ணமான நிறமிகளுக்களால் நிகழ்கிறது. அவை வெளிச்சம் விழுவதற்கேற்றவாறு மாறுகின்றன. மணலில் வாழும் இறால், மணல் நிறமாகவே இருக்கிறது.

ஆழ்கடலில் உள்ள சில இறால்கள் மிகவும்



சிவப்பாக இருக்கும். சில இறால்களில் ஒருவித ஒளி உண்டாகிறது. இந்தியப் பெருங்கடலில் ஆழத்தில் வாழும் ஒருவித இறால்கள் ஒளிவிடும் பொருளை உணர் கொம்பின் அடியிலுள்ள சுரப்பிகளிலிருந்து வெளி விடுகின்றன. இவை ஒளிவிடும் புகை போலக் குப் குப்பென்று வெளிவரும். இந்த ஒளிப் புகையினால் இவை தம்மைப் பிடிக்க வரும் பகைப் பிராணிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும்.

இறால் மிக நல்ல உணவு. மிக்க சுவை உள்ளது. இதன் கறி முள்ளோ, நாரோ,எலும்போ இல்லாதது. இறாலை வற்றல் போடுவதுண்டு.


—எஸ். சாரதாம்பாள்



மூன்று குரங்கு உருவங்களைப் பார்த்து அண்ணல் காந்தி அடிகள் மனத்தைப் பறி கொடுத்தாரல்லவா? அவற்றுக்குப் பெயர்மிஜாரு, இஜாரு, ஜொரு. இவற்றுக்கு ஆதாரமான ஓவியம் ஜப்பான் நாட்டு நிக்கோர் நகரில் உள்ள புத்தர் கோயிலில் உள்ளது. இந்த ஓவியத்தை 'இதாரி ஜின்கோ' என்ற ஓவியர் தம் இடது கையாலேயே தீட்டினார். ஜப்பான் மொழியில் 'இதாரி' என்றாலே இடது கைக்காரர் எனப் பொருள்படும்.

-- தேஜ்


சிங்கக் கழுகு 3
பீட்டர் ஓ டான்னல்
இந்த அக்கா தான் என்னைப் போலீஸ்காரரிடமிருந்து காத்தாள். இவள் படகில் ஒளிந்து இவள் ஜாகையில் குளித்துப் பின் இங்கே வந்திருக்கிறேன்.
அவளோடு சேர்ந்து நீ இங்கே உள்ளே நுழைந்ததைப் பார்த்தேன்.
ஃபிரான்செஸ்கா! கவலைப்படாதே. அக்காவுடனேயே நான் சதா இருந்துவிடப் போவதில்லை. மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டதும் விடு திரும்பவிருந்தேன்..
இதோ பார்! உனக்காகவும் நிறைய உணவைப் பாக்கெட்டில் பதுக்கிக் கொண்டேன்.
1701
சாப்பாடு முடிந்ததும்...
இவர்களை நாம் என்ன செய்ய?
சும்மா விட்டால் போதும்.
மாடஸ்டி! திருடிப் பிழைக்கும் இந்த அநாதைகளைக் கவனித்துக்கொள்ள யாருமே இல்லையே!
அவர்கள் ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வார்கள், மாக்ஸ்! வேறு யார் உதவியும் அவர்களுக்குத் தேவையில்லை.
நாம் அநாதை ஆசிரமம் ஆரம்பிக்கவேண்டும் என்கிறாயா? இவர்கள் ஒரு நிமிஷம்கூட அதில் தங்கி இருக்க மாட்டார்கள்.
அக்கா, நீ சொல்வது உண்மை. ஸான்டா மரியா கன்னிமாடத்து 'நன்'கள் எங்களைக்காப்பாற்ற முன்வந்தனர். நாங்கள் ஓடிவிட்டோம்.
1702


'நன்'கள் உங்களுக்கு அடைக்கலம் தரும் போது ஏன் ஏற்காமல் ஓடுகிறீர்கள்?
அனாதை ஆண்களுக்கு ஒரு விடுதி, பெண்களுக்கு ஓர் இல்லம் என்றுண்டு. நாங்கள் சேர்ந்து வாழ முடியாது.
ஓ! பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை, பிரிந்து வாழக்கூடாதாக்கும்!
அன்பு!—அதை விலைக்கு வாங்கவோ, விற்கவோ, இருடவோ முடியாது!—இந்தா
ஃபிரான்செஸ்கா! மூக்கு, வாயெல்லாம் துடைத்துக்கொள். கர்சிப்பை நீயே வைத்துக்கொள்.
அக்கா! என்னால் இதற்குமேல் சாப்பிட முடியாது. நாங்கள் இப்போ சீக்கிரமாய்ப் போய்விடுவது நல்லதென்று நினைக்கிறேன்.
1703
வீட்டுச் செலவுக்கு இதை வைத்துக் கொள்ளுங்கள். ஒருவரை யொருவர் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.
நன்றி அக்கா!
போய் வருகிறேன் அக்கா!
வருகிறேன் அண்ணா!
ஆன்ஜெலோ! அவன் தோல் பையைத் திருடியது அழகல்ல.
இதனால் அவன் ஏழையாகிவிடப் போகிறானா? அக்காவின் கைப் பையை எடுக்க என்னால் முடியவில்லை. ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தாள்.
1704


நான் உணர்ச்சி வசப்படுபவனல்ல. ஆனாலும் அந்தக் குழந்தைகளைப் பார்த்தபோது தொண்டையை அடைத்தது... அடக் கஷ்டமே! என் தோல் பை எங்கே?
ஆன்ஜெலோவின் கண்ணில் படும்படியாக அதை வைத்திருந் தாயா என்ன?
நீ என்ன சொல்கிறாய்? ஆன்ஜெலோ...! பேஷ்! சோறு போட்டதற்குக் கைமேல் பலன்!
தொண்டை அடைக் கிறது என் றேனே, இப்போ இல்லே!
மாக்ஸ்! தப்பு உன்னு டையதுதான். ஓர் அரடு வகையாக மாட்டிக் கொள்ளும்போது நன்றி உணர்ச்சி குறுக்கிட அவர்கள் அனுமதிப் பார்களா?
1705
ஆன்ஜெலோவும் பிரான்ஸெஸ்காவும் தேட்டை போட்ட தோல் பையை ஆராய்கிறார்கள்.
சில கடிதங்கள், சில வரைபடங்கள் — நாம் விற்கக்கூடியது ஏதுமில்லே.
தோல்பை தவிர
அது என்ன பழைய காகிதம், ஆன்ஜெலோ?
எனக்குத் தெரியலியே..
பழங்காலத்து எழுத்து... பார்! ஒரு தேதி, ஒரு பெயர்.. அல்போரினி பிரபு.
அவன் பணக்காரன். அல்போரினி அரண் மனையில் வசிக்கிறான். அது இருக்குமிடம் எனக்குத் தெரியும்.
(தொடரும்)
1706



☐ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது

'அணிலுக்குச் செய்த அணில் பணி'' என்ற பேட்டியில், கீழே விழுந்த குட்டியைத் தாய் அணில் திரும்பச் சேர்த்துக் கொள்வதில்லை என்று சகோதரி ஜானகி கூறியிருக்கிறார். எங்கள் வீட்டின் உத்தரத்திலிருந்து இரண்டு குட்டிகள் கீழே விழுந்து விட்டன. ஆனால் தாய் அணில் கதவு வழியாக வந்து இரு குட்டிகளையும் தன் அழகிய இருகைகளால் தூசி தட்டி வாயில் கவ்விக் கொண்டு தன் இருப்பிடத்துக்கு எடுத்துச் சென்றதைப் பார்த்தபோது வியப்பாக இருந்தது. அணிலின் இவ்வியல்பைச் சகோதரி ஜானகி கண்டதில்லை போலும்.

சென்னை — 33
12—1—71 குமாரி கமலா ஸ்ரீநிவாசன்

தனியார்த் துறை மருந்துக் கம்பெனியினர் கொள்ளை லாபம் அடிப்பதாகப் பிரசாரம் செய்தார்கள் அல்லவா? இந்திரா சோஷலிச சர்க்கார் கம்பெனிகள் மட்டும் என்ன செய்கின்றன?

ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன், இந்தியன் ட்ரக்ஸ் அண்ட் பார்மஸூடிகல்ஸ்—போன்ற சர்க்கார் ஏஜன்ஸிகள் மருந்து மூலப் பொருள்களின் விநியோகத்தைத் தங்கள் கரங்களில் வைத்துக் கொண்டு கொள்ளை லாபத்துக்கு விற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணத்துக்கு வைடமின் பி-2, ஃபெனஸெடின், அயடின் போன்ற மூலப் பொருள்களைக் குறிப்பிடலாம்.

வைடமின் பி-2 வெளிச் சந்தையில் விலை கிலோவுக்கு 425 ரூபாய்தான். ஆனால், அரசாங்கக் கம்பெனியான இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மஸூடிகல்ஸில் விலை என்ன தெரியுமா? தயவு செய்து மூர்ச்சை போட வேண்டாம். கிலோவுக்கு 650 ரூபாய்!

'அதனால் என்ன? உற்பத்தியாளர்கள் வெளிச் சந்தையில் வாங்கிக் கொள்ளலாமே' என்றால் முடியுமா? கிடைக்காத ஃபெனஸெடின் மூலப் பொருளுக்கு எங்கே போவது? ''ஹூம்! ஃபெனஸெடின் வேண்டுமா? மரியாதையாக வைடமின் பி-2 எங்களிடம் வாங்கு'' என்று மருந்து தயாரிப்பவர்களை அரசாங்கக் கம்பெனி மிரட்டுகிறது.

சரி, ஃபெனஸெடின், அயடின் விலைகள் என்னவென்று கேட்டால்.... இரண்டு பங்கு. அதாவது நூறு சதவிகித லாபம்!

இறுதியில் உண்மையிலேயே கஷ்டப்படுவது யார்? கடையில் போய் டாக்டரின் சீட்டைக் காட்டி மருந்து வாங்கும் ஏழைகள்தாம்!

சென்னை—18
6—12—70 ஜே. முத்துஸ்வாமி

குரோம்பேட்டையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஒரு சந்தர்ப்பவாதிப் 'பிரமுகர்' சுப்ரீம் கோர்ட் மன்னர்கள் மானிய விஷயத்தில் வழங்கிய தீர்ப்பை யொட்டி சுப்ரீம் கோர்ட்டையும், அதன் நீதிபதிகளையும் மிகத் தரக் குறைவாகத் தாழ்த்திப் பேசினார்.

''சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளை ஜனாதிபதி நியமிக்கிறார். அப்படியிருக்கக் குடியரசுத் தலைவர் அங்கீகரித்த சட்டத்தைச் செல்லாது என்று கூற இந்த *........யார்? நான் இவ்வாறு பேசுவதால் என் மீது கோர்ட் அவமதிப்புக் குற்றம் சுமத்தலாம். ஆனாலும் என்ன? நான் மதிப்புக் கொடுக்கும்வரையில்தான் சுப்ரீம் கோர்ட். இல்லையெனில் அது என் வீட்டில் இருக்கும் *.........(?)....... தான். நாட்டு மக்கள் அனைவரும் பொங்கியெழுந்து விட்டால் சுப்ரீம் கோர்ட் தூள் தூளாகிவிடும்'' என்றெல்லாம் முழங்கினார். பாவம்! அவருக்கு விஷய ஞானம் அவ்வளவுதான்!

மேற்கூறிய சொற்பொழிவு இந்திரா காங்கிரஸ் — தி. மு. க. கூட்டுத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்டது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய கொள்கைகளை இந்தப் பிரசாரகர்களுக்கு இன்னும் அதிகமாக வலியுறுத்த வேண்டும்.

சென்னை — 44
2—1—71 சீனி. நரசிம்மன்

* கண்ணியத்தை முன்னிட்டு வார்த்தைகள் விடப்பட்டுள்ளன.

☐ எழுத்தறிவு இல்லாத, கூலி வேலை செய்யும் ஒருவரின் அரசியலறிவு எவ்வாறு உள்ளது என்று தெரிந்து கொள்ள நினைத்தேன்.

இந்திரா காந்தியைப் பற்றித் தெரியுமா என்றபொழுது, காந்தியைப் பற்றித் தெரியும் வேறொன்றும் தெரியாது என்று அவர் சொன்னார். லோக் சபை, மாநில சட்டசபை இவற்றைப் பற்றியும் ஒன்றும் அவருக்குத் தெரியவில்லை. கருணாநிதியைத் தெரியுமா என்றதற்கு, இவ்வூரில் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள (அண்ணாதுரை அவர்களின்) சிலையல்லவா என்றார். ஓட்டுப் போடச் சொன்னால் யாருக்குப் போடுவீர் என்றதற்கு அவர் கொடுத்த காரணம் இங்கு பிரசுரிக்கப்பட இக்கட்டாக உள்ளதால் நான் அதை எழுதவில்லை. சுருங்கக் கூறின், அந்தத் தொழிலாளியின் அரசியலறிவு பரிதாபகரமானது. இதே நிலையில் இந்நாட்டின் கிராமப்புறங்களில் கோடிக்கணக்கானவர்கள் உள்ளனர்.

பாமர மக்களில் பெரும்பான்மையோரை நம் நாட்டின் அரசியல்வாதிகள் ஜாதி அல்லது வேறு ஏதேனும் உள்ளூர் பிரச்சினை மூலம் அணுகி, ஏமாற்றி, அவர்களின் பொன்னான ஓட்டைப் பெற்று, நாட்டைத் தாங்கள் ஆண்டு அதன் மூலம் தங்கள் சொந்தநலன்களைப் பெருக்கிக் கொள்கின்றனர். நாடு எதிர்நோக்கி நிற்கும் அபாய நிலையை இப்பாமர மக்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்ல, ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த ஒவ்வொரு அரசியல்வாதி மட்டுமல்ல, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு தனி மனிதனும் முயன்றால்தான் நாட்டின் எதிர்காலம் சுபிட்சமடையும்.

ஆழ்வார்குறிச்சி,
9—1—71 தேசபக்தர்

தில்லியில் ஒரு சுவாமி மலை!




கல்லுளிகளின் கல், கல் என்ற ஓசை இனிய நாதமாகச் சூழ்கிறது. கற்பாறைகளை ஒட்ட வைக்கச் 'சாந்து' அரைப்பது சீரான ஓசையுடன் வருகிறது. அத்துடன் சுமார் ஐம்பது சிற்பிகளின் தமிழ் சம்பாஷணையும் காதில் விழுகிறது. கல்லுளிகள் அவ்வப்போது காய்ச்சிக் கூராக்கப்படும் சுத்தியல் அடியின் ஒலி ஒழுங்கான தாளமாகக் கேட்கிறது.—இத்தனையும் நம்மைத் தமிழ் நாட்டுக்கு இழுத்துச் சென்றுவிடுகின்றன. எங்கிருந்து? புதுதில்லியிலிருந்து! ஆம், புதுதில்லி ராமகிருஷ்ணபுரத்தில் குன்றுதோறாடும் குமரனுக்குக் கோவில் சிறந்த முறையில் உருவாகி வருகிறது. தக்ஷிண தேசத்தில் தமிழகத்தில் உள்ள சுவாமிமலை போல் இங்கும் சுவாமிநாதன் குடிகொள்ளப் போகிறான். முருக பக்தர்கள் யாவருக்கும் இது தெரிந்த விஷயம் எனினும், குன்றின் மேல் கட்டப்பட்டு வரும் கோவிலைப் பற்றி—அதன் பின்னணியில் எடுக்கப்பட்ட முயற்சிகள், உழைப்புகள் சிறப்பு அம்சங்கள், பகீரதப் பிரயத்தனங்கள் பற்றிப் பலருக்குத் தெரியாது.



ஆகவே இக்கோயிலைக் கட்டி வரும் ஸ்ரீ சுவாமிநாதசுவாமி சேவா சமாஜத்தின் தலைவர் திரு ஆர். வெங்கடராமன் அவர்களையும் காரியதரிசி திரு பாலகிருஷ்ணன் அவர்களையும் சந்தித்துப் பேசலாம்.

''முழுக்கமுழுக்கக் கற்கோயிலாகக் கட்டப்பட்டு வருகிறது இக்கோயில். சுவாமிநாத சுவாமிக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு கற்கோயில் எழும்புகிறது தில்லியில். இது மா பெரும் முயற்சிதான். எங்கள் சக்தியை நம்பி இதில் எங்கள் சமாஜம் இறங்கவில்லை. முருகனின் சக்திதான் இக்கோவிலை உருவாக்கி வருகிறது'' என்கிறார் திரு ஆர்.வி.

''அறுபதடி உயரமானது இக்குன்று. இதன் மேல் சுமார் நாற்பதடி உயரம் கோவில். இந்த உயரத்துக்கு வேலைப்பாடு செய்யப்பட்ட கற்களை ஜாக்கிரதையாக ஏற்றி அமைக்க வேண்டும். கோயில் செய்யத் தகுதியான கற்களை மட்டும் நாற்பத்திரண்டு ரயில் வாகன்களில் தமிழகத்திலிருந்து கொண்டு வந்தோம். பெரியதும் சிறியதுமாக 875 கற்கள் — இவற்றில் சில ஐந்து டன் எடை கொண்டவை — வாலாஜாபேட்டையிலிருந்து தில்லிக்குப் பிரயாணம் செய்துள்ளன'' என்று உற்சாகமாகக் கூறுகிறார் திரு பாலகிருஷ்ணன்.



வாலாஜாபேட்டைக்கு அருகில் உள்ள பட்டுமலைக் குப்பத்தில் அறுபது சிற்பிகள் சுமார் நான்கு வருடங்கள் கற்களைப் பொளிந்து ஓரளவு உருவம், வடிவம் கொடுத்தார்கள். இக்கற்களுக்கு டில்லியில் முழுமையான,

□

வாலாஜாபேட்டையில் திருப்பணி வேலையைப் பார்வையிடும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆசார்ய சுவாமிகள்.

□

பக்தி மிகுந்த உற்சாகத்துடன் கந்தனுக்குக் காவடி எடுக்கும் புது தில்லி வாசிகள்.

□

புது டில்லி விஜயத்தின்போது கோயில் திருப்பணியைக் காண வந்த தமிழக முதல்வர், திரு ஆர். வெங்கடராமன் அவர்களுடன் சேர்ந்து பிள்ளையாரைப் பார்வையிடுகிறார்.

நுணுக்கமான சிற்பவேலைப்பாடுகள் செய்யப் படுகின்றன. சென்ற இரண்டு வருடங்களாகச் சுமார் நாற்பது சிற்பிகள் ஸ்தபதி ஜானகிராமனன் மேற்பார்வையில் டில்லி வெய்யிலையும் குளிரையும் பொருட்படுத்தாமல், பணி செய்து வருகின்றனர். வட இந்தியர்கள் இந்த வேலைப்பாடுகளைக் கண்டு வியந்து போகின்றனர். அத்துடன் இக்கோயில் நிதிக்கு உதவியும் வருகின்றனர். தமிழ் மன்னர் வளர்த்த தமிழ்க் கலைக்கு இக்கோயில் ஓர் எடுத்துக் காட்டாக இருக்குமாம். எப்படி?

''சோழர் பாணியில் முருகன் கோவிலும், மூன்றாவது பிராகாரத்தில் உருவாகும் சுந்த





ரேசுவரர் ஆலயம் பல்லவர் பாணியிலும் மீனாட்சி கோவில் பாண்டியர் பாணியிலும் அமைக்கப்படும். பாண்டியர் பாணி என்பது ஆந்திர (விஜயநகர) பாணிக்கு இணைந்ததாக இருப்பதால், தென்னிந்திய சிற்பக் கலை இங்கு கவினுற அமையும். கோவிலுக்குப் பின்னால் பொற்றாமரைக் குளம் அமைக்கும் திட்டம் உண்டு. இது மட்டுமின்றி யாத்திரிகர் தங்கும் மண்டபம், கலியாண மண்டபம் ஆகியவை களைக் கட்டவும் நினைத்துள்ளோம். லட்சக் கணக்கில் பொருள் தேவைப்படும். நிறைய நன்கொடைகள் கிடைத்து வருகின்றன. இன்னும் தேவைப்படுகின்றன. திட்டத்தின் முதற் கட்டத்துக்கு மட்டும் 25 லட்ச ரூபாய் செலவாகும். உடனடியாக இரண்டரை லட்சம் ரூபாய் இருந்தால்தான் மூலாலயம், சுவாமி பிரதிஷ்டை முதலியவைகளை முடிக்க முடியும்'' என்கிறார் திரு பாலகிருஷ்ணன்.

''குன்றின்மேல் கோவில் சிறிய அளவில் தான் முதலில் கட்டப்பட்டிருந்தது. கட்டிட வேலைகள் நடைபெறுவதற்காகக் கீழே ஒரு பாலாலயம் கட்டி அங்கு இப்போது வழிபாடு நடந்து வருகிறது. தில்லியில் கந்த சஷ்டியன்று மலையே திருவிழாக் கோலம் கொள்கிறது. ஏராளமான காவடிகள் எடுத்துப் பக்தர்கள் செல்வது மெய்சிலிர்க்கச் செய்கிறது.

''இந்தக் கோவிலுக்குச் சிருங்கேரி, ஜோதிர் மடம், துவாரகா, பூரி பீடாதிபதிகள் விஜயம் செய்துள்ளனர். காஞ்சிப் பெரியவர்கள், ஆழ்ந்த பரிவுடன் உதவிகள் புரிகிறார். சுவாமிநாத சிலை செய்வதற்குத் தேவையான கருங்கல்லைத் தேடிக் கொண்டிருந்தபோது, காஞ்சி ஆசாரியார் ஒரு யோசனை கூறினார். ''தாமிரவருணி ஆற்றில் குறுக்குத்துறை அருகில் உள்ள ஒரு கற்பாறையிலிருந்துதான் திருச்செந்தூர் மூலவிக்கிரகம்செய்யப்பட்டது. அந்தப் பாறையைக் கண்டுபிடித்துத் தேவையான அளவு எடுத்துக் கொள்வது நல்லது'' என்று அருள்கூர்ந்து கூறினார் ஆசாரியார்.


''குறிப்பிட்ட பாறையைக் கண்டுபிடிப்பது சுலபமாக இல்லை. பெருத்த முயற்சிக்குப் பிறகு அது கிடைத்ததாம். கல்லை எடுத்து மகாபலிபுரம் கொண்டு வந்தார்கள்.

''மகாபலிபுரம் சிற்பக் கல்லூரித் தலைவர் ஸ்தபதி கணபதிதான் சுவாமிநாத சுவாமி கோவிலை நிர்மாணிப்பதற்கான திட்டங்களையும் வரைபடங்களையும் தயாரிப்பவர். சென்னை அரசாங்கம் திரு கணபதியின் சேவையை அவ்வப்போது சுவாமிநாத சுவாமி கோவிலுக்குத் தந்து வருகிறது.

''கல்லை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். சிற்ப, ஆகம முறைப்படி சுவாமி சிலைகள் செய்யு முன் கற்களைப் பரிசோதிக்க வேண்டிய வழிகள் உள்ளன. ஸ்தபதியார் கல்லைச் சோதித்துப் பார்த்தார். பெருத்த ஏமாற்றம். கல் ஜீவனற்ற கல்லாக இருந்ததாம். இவ்வளவு பிரயத்தனங்களையும் செலவையும் செய்து கொண்டுவரப்பட்ட கல், மூல தெய்வம் வடிக்க லாயக்கற்றதாக இருக்கிறதே என்று வருந்தினார்.

''காஞ்சிக்குச் சென்று ஆசாரியாரைத் தரிசித்துவிட்டு வந்தார். ''தாங்கள் சொன்ன கல், சரியான கல்லாக இல்லை'' என்று ஆசாரியரிடம் சொல்லத் துணிவோ, மனமோ





ஏழை நாட்டுப் பணக்காரர்களும் பணக்கார நாட்டுப் பணக்காரர்களும்

புது தில்லியில் ஒரு வியாபாரி சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் கொடுத்து ஒரு கார் வாங்கியிருக்கிறார். அரசாங்க வர்த்தக கார்ப்பொரேஷனிலிருந்து ஏலத்தில் வாங்கப்பட்டது இந்தக் கார். அதன் உரிய விலையைவிடப் பல மடங்கு அதிகம் கொடுத்து, வெறும் டாம்பீகத்துக்காக இப்படி இங்கு கிடைக்காத அயல்நாட்டுக் கார்களை வாங்குகிறார்கள். இந்தப் போக்கைக் கண்டித்து ஓர் அமெரிக்கர், 'இந்துஸ்தான் டைம்'ஸில் கடிதம் எழுதியிருக்கிறார். 'எங்கள் நாட்டில் பெரும் பணக்காரர்கள் உண்டு. ஆனால் அவர்களில் யாரும் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

--- பாலி

இல்லை. இருந்தும் மனச் சாந்திக்காக ஆசாரியாரிடம் சென்று வந்தார்.

"ஊர் திரும்பியதும், ஒரு நாள் கல்லை மரப்படியும் தட்டிப் பார்த்தார். ஆச்சரியம்! கல்லிலிருந்து சுநாதமான ஒலி எழுந்தது. ஆண் மூர்த்திகள் சிலை செய்வதற்கான சர்வ குணங்களும் இருப்பதாகக் கண்டறிந்தார். "சில வாரங்கள் வெய்யிலில் கிடந்ததால் கல்லின் மேலிருந்த தாமிரப் படிவம் உதிர்ந்து போயிருக்கலாம். அதன்காரணமாகக் கல்லின் உண்மைத்தரம் இப்போது தெரிந்திருக்கலாம். அல்லது காஞ்சிப் பெரியவரின் கருணையால் கல்லின் தோஷங்கள் மறைந்திருக்கலாம். எது எப்படியோ, கணபதி ஸ்தபதிக்கு ஒரே உற்சாகம்! மளமளவென்று கல்லுளியும் கையுமாக வேலையில் இறங்கினார்."

திரு பாலகிருஷ்ணன் இவ் வரலாற்றைக் கூறும்போது மெய் சிலிர்க்கிறது.

தமிழகத்திலிருந்து தில்லிக்கு விஜயம் செய்த எவரும் இக் கோவிலுக்கு வந்து தரிசனம் செய்யாமல் இருந்ததில்லை. சில மாதங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் திரு கருணாநிதி இக்கோவிலுக்கு வந்திருந்தார். "முதல்வர் சுந்தமலைக்கு வந்து சென்ற இரண்டு தினங்களில் கஞ்சமலை (இரும்பு ஆலை) தமிழகத்துக்குக் கிடைத்தது" என்று சில பத்திரிகைகளும் குறிப்பிட்டு எழுதியிருந்தன. தமிழக அரசும் இந்தக் கோவிலுக்கு உதவிகள் செய்து வருகிறது.

திட்டக் குழுவின் உறுப்பினர் திரு ஆர். வேங்கடராமன் எப்பணியில் ஈடுபட்டாலும் ஆர்வத்துடன் உழைப்பவர். தில்லி மதராஸிப் பள்ளிகளை வளர்த்ததில் முக்கிய பங்கு இவருக்குண்டு. கல்விப் பணிகளையே ஆலயப் பணிகள் மாதிரி செய்த இவர் ஆலயப் பணிகளை மிகவும் ஆழ்ந்த சிரத்தையுடன் செய்வதில் வியப்பில்லை.

"இக் கோவில் கர்ப்பக்கிருகம், முகமண்டபம், விமானம், மகா மண்டபம் ஆகியவைகளுடன் மூன்று பிராகாரங்களும் ஒரு ராஜ கோபுரமும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதுவரை இதற்காக எட்டு லட்ச ரூபாய்வரை செலவாகியுள்ளது. மூலாலயம், சுவாமி பிரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலியவற்றை நடத்த உடனடியாக இரண்டரை லட்சம் தேவைப்படுகிறது. உலக நாடுகளில் எங்கெங்கிருந்தோ ஆஸ்திகர்கள் பணம் அனுப்புகிறார்கள்.

"தமிழகத்தில் உள்ள ஆதீனங்களும் மடங்களும் மனமுவந்து நன்கொடைகள் கொடுத்து வருகின்றன. திருப்பனந்தாள் மடாதிபர், ஓதுவார் நியமனம் செய்வதற்காக ஓர் அறக் கட்டளை செய்துள்ளனர். சிவாசாரியாரின் படிக்காசுக்காகவும் ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். ஆந்திர அரசும், திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் 25 ஆயிரம் ரூபாய் தருகிறது. வட நாட்டில் உள்ள பெரும் தொழிலதிபர்கள் சிங்கானியா, டால்மியா, ஜெயின் போன்றவர்களும் தமிழகத் தொழிலதிபர்கள் செல்வந்தர்களும் கடல் கடந்துள்ள அன்பர்களும் நிறைய உதவிகள் செய்கின்றனர். தமிழக தேவஸ்தானங்கள் சுமார் ஒன்றேகால் லட்சம் வரை நன்கொடை தந்துள்ளன. இன்னும் தரும் என்ற நம்பிக்கை உள்ளது. தமிழவேள் பி. டி. ராஜன் வேல் கொடுத்திருக்கிறார். "கர்ப்பந்நியாஸத்தின்போது, பொன், நவரத்தினம், பணம் எனப் பல்லாயிரக் கணக்கில் ரூபாய் சேர்ந்தது" என்று நன்றிப் பெருக்குடன் கூறுகிறார் திரு ஆர். வி.

தமிழகத் திரைப்படத் துறையினர் அவ்வப்போது பல படங்களைப் போட்டு சமாஜம் நிதி வசூல் செய்து கொள்ள உதவி வருகின்றனர். திருமுருக கிருபானந்தவாரியார், ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் போன்றவர்கள் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

"வட இந்தியாவில் இக்கோவில் கட்டப்படுவதால் நம்முடைய திறமைகளைக் காட்டும் பல சிற்பங்களையும் இங்கு வைக்க நினைத்துள்ளோம். திருவலஞ்சுழியில் சங்கிலி போன்ற அமைப்பு ஜன்னல் கருங்கல்லில் செய்யப்பட்டுள்ளது. மதுரையில் உள்ள இசைத் தூண்கள், ஆவுடையார்கோவில் கொடுங்கை அமைப்புகள், சிங்கத்தின் வாயில் பந்து உருளுவது போன்ற சிலை — இத்தனையும் இங்கு வைக்கப் போகிறோம்" என்கிறார் காரியதரிசி.

"வருகிற பிப்ரவரி மாதம் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் தில்லியில் உதவிக் கச்சேரி வழங்க இசைந்திருக்கிறார். உப ராஷ்டிரபதி ஸ்ரீ பாடக் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கிறார்.

"எம்.எஸ்ஸின் சங்கீதம் தெய்விக சக்தி வாய்ந்தது. அது தெய்விகப் பணிகளில் ஈடுபடுவது நம் பாக்கியம்" என்று ஆழ்ந்த உணர்ச்சியுடன் திரு ஆர். வேங்கடராமன் கூறுகிறார்.

இக்கற்றளி மலைக் கோவிலுக்கு மலையென நன்கொடைகள் அளித்து உதவுவது ஆஸ்திகர்களின் கடமையாகும். இது சாதாரண ஆலயப் பணியல்ல; ஹிமாலயப் பணி.

— பி. எஸ். ரங்கநாதன்

லிங்கனுடைய மூக்கின் நீளம் பதினைந்தடி!

பிரசித்திபெற்ற சிற்பி கட்ஸன் போர்க்ளம் 1927ல் ஒரு திட்டத்தைத் தொடங்கினார். இது முடியாத காரியம் என்று நிபுணர்கள் பலர் முடிவாகச் சொன்னார்கள். பாறைகளைச் செதுக்கி அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுள் இதைக் காட்டிலும் பெரிதான ஒன்று இந்த நிலவுலகில் இல்லை என்று சொல்லுமளவுக்கு, அமெரிக்க ஜனநாயகத்தைப் போற்றும் முகமாக ஒரு சிற்பத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டார் போர்க்ளம். எகிப்திய மன்னர்கள்கூட இத்தனை பெரிய சிற்பத்தைப் பாறையில் செதுக்க முற்பட்டதில்லை.

தெற்கு டகோடா மாநிலத்தில் கருப்புக் குன்றுகள் என்ற கருங்கல் மலைத் தொடர் உண்டு. இதில் ரஷ்மோர் மலை என்ற பகுதியைத் தேர்ந்தெடுத்தார். ஐந்நூறு மில்லியன் டன் எடையுள்ள பாறைகள் வெடிமருந்து வைத்துத் தகர்க்கப்பட்டன. மலையைச் செதுக்கிய சிற்பிகள் பூமிமட்டத்திலிருந்து நூற்றுக்கணக்கான அடிகள் உயரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தனர். இவ்விதம் தொங்கியவாறே அவர்கள் மலைச் சரிவில் பாறையைச் செதுக்கி மாபெரும் தலைவர்களின் மிகப் பெரிய முகங்களை உருவாக்கினார்கள். தொடக்கத்தில் மலைச் சரிவின் மேல் பரப்பு எந்த மட்டத்திலிருந்ததோ அந்த நிலையிலிருந்து நூற்றி இருபது அடி ஆழம் வரை குடைந்திருக்கிறார்கள், ஆப்ரஹாம் லிங்கனுடைய முகத்தின் சில பகுதிகளை வடிக்க. பதினான்கு ஆண்டுகள் போர்க்ளம் தமது சகாக்களுடன் பாடுபட்டார். அமெரிக்க ஜனாதிபதிகளாக விளங்கிய, லிங்கன், வாஷிங்டன், ஜெபர்ஸன், தியோடோர் ரூஸ்வெல்ட் ஆகியோரது முகத் தோற்றங்களை மலைச் சரிவில் கொண்டு வர அத்தனை ஆண்டுகள் ஆயின. ஒரு கட்டத்தில் ஜெபர்ஸனின் முகம் பாதியளவு பூர்த்தியாகி இருந்த போது சிற்பி போர்க்ளம் அந்த இடம் சரியல்ல என்றும், ஜெபர்ஸனின் முகம் வேறு ஓர் இடத்தில் அமைந்தால்தான் நன்றாயிருக்கும் என்றும் தீர்மானித்தார். பாதியளவு உருவாகியிருந்த முகத்தை வெடி வைத்துத் தகர்த்து விட்டுப் புதிதாய்த் தேர்ந்தெடுத்த இடத்தில் மீண்டும் அடியிலிருந்து வேலையை ஆரம்பித்தார். அமெரிக்க ஜனநாயகத்துக்குப் பலமான அஸ்திவாரமிட்ட அறிஞர்களுக்கு அற்புதமான நினைவுச் சின்னம் 1941ல் பூர்த்தியாகியது.



* * *

நீக்ரோக்களை அடிமைகளாகக் கருதும் முறையை ஒழிக்க அமெரிக்கா முற்பட்ட



போது இதனால் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாக பதினொரு மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து பிரிந்து தனி ராஜ்யமாக விளங்கத் தீர்மானித்தன. பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக் கொள்ள முடியாது என்று ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் ஐக்கியத்துக்காகப் போர் தொடுத்து வெற்றி கண்டார். 1861ல் ஆரம்பித்த இந்த உள்நாட்டுப் போரின்போது பிரிவினைக்காகப் போர் புரிந்த மாநிலங்களின் ஜனாதிபதியாக விளங்கியவர் ஜெஃபர்ஸன் டேவிஸ். போரில் அவருக்குத் தளபதிகளாக விளங்கியவர்கள் ராபர்ட் ஈ லீ, தாமஸ் ஜே. ஜாக்ஸன் ஆகியோர். இவர்களுக்கும்கூடக் கருங்கல்லில் ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் அமைந்துள்ளது. ஐம்பதாண்டுகளுக்குமுன் ஆரம்பமான பணி அண்மையில் முடிவடைந்தது.

ரஷ்மோர் மலையில் உள்ள ஜனாதிபதிகளின் முகங்கள் ஒவ்வொன்றும் இந்த நினைவுச் சின்னத்தில் உள்ள முகங்களைவிடப் பெரியவைதாம். ஆனால் நினைவுச் சின்னத்தின் மொத்தப் பரப்பளவு என்று நோக்கினால் ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள கல் மலையில் செதுக்கப்பட்டிருக்கும் இந்த நினைவுச் சின்னம் முன்னதைவிட மூன்று மடங்கு பெரிதானது. ஒரு கால்பந்தாட்ட மைதானத்தைவிட இந்த நினைவுச் சின்னத்தின் விஸ்தீரணம் அதிகம். ஜெனரல் லீயின் உயரம் மட்டும் அறுபத்தொன்பது அடி!

27. தீப்பற்றியது

கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு சிவராமனை அப்போதுதான் பார்த்தான் முரளி. சிவராமனிடம் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு திகைத்தான். அவன் உடல் இளைத்திருந்தது. முகத்தில் வழக்கமாக உள்ள களை இல்லை. ஏதோ ஒரு கவலை அவனைச் சூழ்ந்து படர்ந்திருப்பது போல் தோன்றியது. சிவராமன் வந்துவிட்டதில் சாரதாவுக்குத்தான் அளவு கடந்த மகிழ்ச்சி. அவனுடைய கண்களில் தெரிந்த ஆர்வத்தையும், முகத்தில் பொலிந்த மந்தகாசத்தையும் முரளி நொடியில் புரிந்து கொண்டான்.

அன்று 'பாரத மணி'க் காரியாலயத்தில் சிவராமன் வெகு நேரம் முரளியோடு பேசிக் கொண்டிருந்தான். சிவராமனின் அரசியல் கொள்கையில் ஏற்பட்டிருந்த மாறுதலை அறிந்து திகைத்தான் முரளி.

''கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கில் பெருத்த மாறுதல்கள் ஏற்படலாம்'' என்றான் சிவராமன்.

முரளி ஒன்றும் புரியாமல் சிவராமனைப் பார்த்தான்.

''நாங்கள் இனி, ரஷ்யாவையோ, சீனாவையோ எதிர்நோக்கியிருக்க மாட்டோம்.''



''அவர்கள் உங்கள் எஜமானர்கள்'' என்றான் முரளி, அலட்சியமாக.

''அந்த நிலையிலிருந்து விடுபடத்தான் முயற்சி நடக்கிறது. இந்த நாட்டின் கலாச்சாரம், சூழ்நிலைகள், தேவைகளுக்கு ஏற்ப இனி எங்கள் கட்சி பணி புரியப் போகிறது'' என்றான் சிவராமன்.

இதைக் கேட்டு முரளி சிரித்தான். பிறகு சொன்னான். ''நீ கனவு காண்கிறாய். கம்யூனிஸ்ட் கட்சிக்கு — அது ரத்தச் சிவப்பானாலும் இளஞ் சிவப்பானாலும் தலைமையகம் மாஸ்கோவாகவோ பீக்கிங்காகவோதான் இருக்க முடியும். நம் நாடு, நமது கலாசாரம், நமது தேவைகள் என்றெல்லாம் கம்யூனிஸத்துக்கு எதுவும் கிடையாது. அதற்குத் தெரிந்ததெல்லாம் மக்களைச் சுதந்திரமிழக்கச் செய்து வலுக் கட்டாயமாக வேலை வாங்குவதுதான். வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காது; அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்ற ஊதியம்தான் கிட்டும். இந்தவிதமாக துப்பாக்கி முனையில் உழைப்பைப் பெற்று நாட்டை உயர்த்துவதுதான் கம்யூனிஸ சித்தாந்தம். இதற்கெல்லாம் இந்தியப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் தடையாக இருக்கும் என்பதால் கம்யூனிஸ்டுகளிடம் அதிகாரம் கிடைத்தால் முதல் பலி நம்முடைய கலாச்சாரமாகத்தான் இருக்க முடியும். கம்யூனிஸம் நமது கலாசாரத்தையும் காப்பாற்றும் என்று எதிர்பார்ப்பது கிளியைப் பூனையிடம்



கொடுத்து வளர்த்து வருமாறு கோருவது போல்தான்.''

''உன்னோடு வாதிக்க நான் தயாரில்லை. நீ தர்க்கம் செய்து என் சிந்தனைகளைக் குழப்பி விடுவாய். எனக்கு என்னுடைய சிந்தனையில் நம்பிக்கை இருக்கிறது'' என்றான் சிவராமன்.

'பாரதமணி'க் காரியாலயத்திலிருந்து வெளியேறிய சிவராமன் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தை நோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தான். அவனுடைய மனம் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது. அடுத்த மாதம் சென்னை நகரில் நடக்கவிருக்கும் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தைப் பற்றிய நினைவுதான் அவனுடைய சிந்தனை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் அவன் எதிர்பார்த்தது போல் உண்மையிலேயே ஒரு மாறுதலுக்குக் கட்சி தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமா, அல்லது வேதமூர்த்தியின் சர்வாதிகாரத்துக்குப் பணிந்து ஒடுங்கி விடுமா என்பதைப் பற்றித் திட்டவட்டமாக அவனால் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை. அவனுக்குப் பக்கபலமாக இருப்பதாக ஆறு மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்கள் உறுதியளித்திருந்தாலும் சிவராமனின் உள் மனத்தில் இனம் புரியாத பயம் அழுத்திக் கொண்டிருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்துக்குச் சென்றபோது, வாசற்கதவு தாளிடப்பட்டிருந்தது. நல்லதம்பி கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்த சிவராமன் ஒரு மூலையில் விரித்து வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தாள்களைக் கண்டு திடுக்கிட்டான்.

''ஓ....! இங்கேயும் இது வந்து விட்டதா?'' என்று முனகினான்.

''இவற்றையெல்லாம் இரவில் தெருத் தெருவாக ஒட்ட வேண்டுமாம்'' என்றான் நல்லதம்பி.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். எல்லாவற்றையும் எரித்துவிடு.''

''தலைமைக் காரியாலயத்தின் உத்தரவு'' என்றான் நல்லதம்பி.

''உம்.... எனக்குத் தெரியும். நான் சொன்னபடி செய்.''

''என்ன சொல்லுகிறாய் என்பதை யோசித்துத்தான் சொல்லுகிறாயா?'' என்று கேட்டான் நல்லதம்பி, சற்றுக் கோபத்துடன்.

''அத்தனையும் சினச் சுவரொட்டிகள். நமக்கு இவை தேவையில்லை.''

''தேவையா, இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்ய நமக்கு அதிகாரம் கிடையாது. இது கட்சியின் கட்டளை'' என்று கோபத்தில் கத்தினான் நல்லதம்பி.

''கட்சியின் கட்டளை என்றாலும் நம்முடைய மனச்சாட்சிப்படிதான் நாம் நடக்க வேண்டும்'' என்றான் சிவராமன், உறுதியுடன்.

''தலைவர் ஐயாவின் கோபத்துக்கு ஆளாகிறாய். ஏற்கனவே உன்னைப் பற்றியும் சாரதாவைப் பற்றியும் ஐயா அவர்களுக்குக் கோபம்.''

''ஏனோ?''

''நீயும் சாரதாவும் நம்முடைய எதிரியான முரளியுடன் நெருங்கிப் பழகுவதைத் தலைவர் வெறுக்கிறார்.''

''உம்..... பிறகு?''

''கட்சிக்கு எதிராக நீங்கள் இருவரும் சதி செய்வதாகவும் புகார் எட்டியிருக்கிறது.''

''என்னை மிரட்டுகிறாயா?'' என்றான் சிவராமன், கோபத்துடன்.

''நான் ஏன் மிரட்டப் போகிறேன். தலைவரிடமிருந்து எனக்கு வந்த ரகசியக் குறிப்பிலிருந்து தெரிந்துகொண்டேன்.''

''சதி என்னவோ?''

''கட்சியின் லட்சியங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று நீயும் சாரதாவும் முயல்கிறீர்களாம். அதற்காக மற்றத் தலைவர்களை இரகசியமாகச் சந்தித்துப் பேசினீர்களாம்.''

''லட்சியங்களில் குறை இருந்தால், மாற்றி அமைப்பதில் என்ன தவறு?''

''லட்சிய விஷயங்களில் முடிவு எடுக்க வேண்டியது தலைமைப் பீடந்தானே தவிர உன்னைப் போன்ற சாதாரணத் தலைவர்கள் அல்ல'' என்றான் நல்லதம்பி. அவனுடைய குரலில் தொனித்த வெறுப்பையும், அலட்சியத்தையும் உணர்ந்த சிவராமன் கோபமடைந்தான்.

''நான் யாருக்கும் அடிமை இல்லை'' என்று இரைந்து கத்தினான் சிவராமன்.

''இன்னொரு மனிதனுக்கு நீ அடிமையில்லை என்றாலும், கட்சியின் சித்தாந்தங்களுக்கு நாம் எல்லோருமே அடிமைகள்தாம். அப்படி வாக்குறுதி கொடுத்ததை நீ மறந்திருக்க மாட்டாய்'' என்றான் நல்லதம்பி நிதானமாக.

இதைக் கேட்டதும் சிவராமன் சற்று அமைதி அடைந்து நல்லதம்பியை உற்றுப் பார்த்தான். பிறகு சொன்னான்:

''நம்மையெல்லாம்விடக் கட்சியின் சித்தாந்தங்கள் முக்கியமானவைதாம். ஆனால்...ஆனால், சித்தாந்தங்களிலேயே

குறை இருக்கும் போது..... நல்லதம்பி, மனிதனுக்காகத்தான் சித்தாந்தமே தவிர, அவைகளுக்காக நாமல்ல.''

''சித்தாந்தங்களைப் பற்றி முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு தலைமைப் பீடத்துக்குத்தான் உண்டு.''

''தலைமைப் பீடத்தை அவ்விதம் நடக்கும்படி நாம் நிர்ப்பந்திக்கலாமே.''

''நெருப்போடு நீ விளையாடத் தொடங்கியிருக்கிறாய். சாரதா, இந்த மாநிலத்தில் உள்ள தலைவர்களின் மனத்தைக் கலக்கும் சதியில் ஈடுபட்டுப் பலரைத் தன் பக்கம் இழுத்திருக்கிறாள். எல்லாம் உன்னுடைய தூண்டுதலால் தான். தலைமறைவாயிருக்கும் போது யாருடனும் தொடர்பு கொள்ளக் கூடாது என்னும் விதியை மீறிச் சாரதாவுக்கு நீ அடிக்கடி கடிதம் எழுதி, சதி வேலையில் ஈடுபடும்படி தூண்டிவிட்டிருக்கிறாய். கட்சியைப் பிளவுபடுத்தும் சதியில் நீங்கள் இருவரும் இறங்கியிருக்கிறீர்கள்.....''

''நிறுத்து!... இது என் இஷ்டம். நீ யார் கேட்க? இந்த மாநிலத்துக்குத் தலைவன் நான். இங்கு கட்சி எப்படி வளர வேண்டும் என்பதைக் கவனிக்கும் பொறுப்பு என்னுடையது'' என்று கோபத்துடன் கத்தினான் சிவராமன்.

நல்லதம்பியின் உதடுகளில் கேலிச் சிரிப்பு நெளிந்தது. அலட்சியமாகச் சிவராமனைப் பார்த்தான். ''தலைமைக் காரியாலயத்துக்கு நீ பதில் சொல்ல வேண்டியிருக்கும்....'' என்றான்.

''நான் சொல்லிக் கொள்கிறேன். அடுத்த மாதக் கூட்டத்தில் என் பதிலைச் சமர்ப்பிக்கத்தான் போகிறேன்'' என்றான் சிவராமன், கோபத்துடன்.

''கூட்டத்துக்கு நீ போனால்தானே?'' என்றான் நல்லதம்பி.

''ஏன் ?'' — பதற்றத்துடன் கேட்டான் சிவராமன்.

''உனக்கு அழைப்பு இல்லையென்றால்......?''

''ஓ.... !'' — சிவராமன் திடுக்கிட்டுப் பேச முடியாமல் நின்றான். நல்லதம்பியை வெறிக்கப் பார்த்தான்.

''அப்படியும் நடக்குமோ.... ?'' என்று சந்தேகத்துடன் கேட்டான்.

''எதுவும் நடக்கும்.'' — நல்லதம்பி அழுத்தமாகச் சொன்னான்.

''இது சர்வாதிகாரத்தனம். இதற்கு முடிவு கட்டத்தான் வேண்டும். இதற்கெல்லாம் அந்தக் கூட்டத்தில் ஒரு முடிவு ஏற்பட்டு விடும்'' என்றான் சிவராமன், படபடப்புடன். மூச்சுத் திணறியது. முகத்தில் வியர்வை துளித்தது. உடல் சிறிது நடுங்கியது. இந்த நடுக்கம் கோபத்தாலா அல்லது ஏமாற்றத்தாலா அல்லது உள்ளூரப்படர்ந்து கொண்டிருந்த இனம் புரியாத பயத்தாலா என்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஒரு வெறி அவனை ஆட்கொண்டிருந்தது.

''இந்தச் சுவரொட்டிகளை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான், நல்லதம்பி.

''பார்த்துக்கொண்டே இரு'' என்று கூறிவிட்டு மேஜைக்குள்ளிருந்த தீப்பெட்டியை எடுத்துப் போஸ்டர்களுக்குத் தீ வைத்தான் சிவராமன். அவனை நல்லதம்பி தடுக்கவில்லை. தீ, பற்றி எரிந்தது. காகிதம் எரியும் நாற்றம், அறை முழுவதும் பரவியது. நல்லதம்பி அமைதியாக அந்த நெருப்பையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சிவராமன் கோபத்தில் கொளுத்திவிட்டானே தவிர, உள்ளூர ஏற்பட்டுவிட்ட பயத்தினால் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அந்த யாகத் தீயில் தன்னுடைய சித்தாந்தங்களைப் புடம் போட்டானா அல்லது, எஞ்சியுள்ள வாழ்நாட்களைத்தான் பலிகொடுத்து விட்டானா....?

''ஏற்கனவே நீ குண்டூரில் இப்படிப் போஸ்டர்களை எரித்து விட்டாய். இது இரண்டாவது முறை'' என்றான் நல்லதம்பி, நெருப்பைப் பார்த்துக் கொண்டே. நெருப்பின் ஒளியில் நல்லதம்பியின் முகம் குங்குமமாகச் சிவந்து பயத்தை ஊட்டியது.

''குண்டூரில் எரித்தது உனக்கு எப்படித் தெரியும்?'' — திகைப்புடன் கேட்டான் சிவராமன்.

''இதுகூடத் தெரியா விட்டால், இந்தக் கட்சி இவ்வளவு தூரம் வளர்ந்திருக்குமா ?'' என்றான் நல்லதம்பி. அவனுடைய குரலில் தோன்றிய அலட்சியமும், அழுத்தமும் பயத்தை ஊட்டுவதாயிருந்தன.

''போ... டில்லிக்குக் காவடி தூக்கிக் கொண்டு போய்த் தலைவரிடம் இங்கேயும் நான் நெருப்பு வைத்ததாகச் சொல்லு.... போ...'' என்று படபடத்தான் சிவராமன்.

மூலையில் கிடந்த சாம்பற் குவியலிலிருந்து தன் பார்வையைத் திருப்பி, சிவராமனின் பார்வையோடு மோதினான், நல்லதம்பி. அவனுடைய கண்களில் தெரிந்த குரோதமும், வெறுப்பும் அச்சமூட்டுவதாயிருந்தன. சிவராமனைப் பார்த்தவாறே நிதானமாகவும் அழுத்தமாகவும் மிகத் தெளிவாகச்சொன்னான்:

''யாரும் டில்லிவரை போய்ச் சொல்ல வேண்டியதில்லை. கட்சிக்கே

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2



உங்கள் பணத்திற்கு கைநிறைய


பிரிட்டானியா

பிரிட்டா பிஸ்கட்டுகள்

ருசி மிகுந்த பிரிட்டா பிஸ்கட்டுகளை நயமான விலையில் வாங்கிச் சுவைத்து மகிழுங்கள்.

அவை சில்லறையாக கிடைப்பதால் உங்கள் தேவையான அளவிற்கு சிக்கனமாக வாங்கலாம். குழந்தைகளுக்கும் கை நிறைய கொடுக்கலாம்.

பிரிட்டானியா பிரிட்டா பிஸ்கட்டுகளை எப்போதும் கை வசம் வைத்திருங்கள்.



BBC-1429

பிரிட்டானியா

என்றுமே உயர்தரம்

பல ஆயிரம் கண்கள் உண்டு, சிவராமன்.''

இப்படிச் சொல்லி விட்டு அந்த அறையை விட்டு வேகமாக வெளியேறினான் நல்லதம்பி. தனிமையில் அந்த அறையில் நின்று கொண்டிருந்த சிவராமன், மூலையில் கிடந்த சாம்பலை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். கொலையுண்டுகிடக்கும் பிணத்தைத் தனிமையிலிருந்து கொலைகாரன் கவனிக்கும் போது ஏற்படும் திகிலும் நடுக்கமும் இப்போது சிவராமனைப் பற்றிக் கொண்டன. அந்த அறைக்குள் தனியாக நிற்கவே பயந்தான். வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறி, காரியாலயக் கட்டடத்தைப் பூட்டிவிட்டுச் சாரதாவின் வீட்டைநோக்கிச் சைக்கிளில் சென்றான்.



''என்னிக்கோ ஒரு நாள் அபூர்வமா ஸ்ட்ராங்கா கம கமன்னு வாசனை உள்ள காப்பியா அமைகிறது. அன்னிக்குப் பார்த்து உங்களுக்கு ஜலதோஷம் வந்து விடுகிறது. நான் என்ன செய்யட்டும்?''

அன்று மாலை சிவராமன் வந்தான். கொஞ்ச நாட்களாகவே சிவராமன் கலகலப்பாக இல்லை என்பதை முரளி புரிந்துகொண்டான்.

சிவராமனுடைய பேச்சு அடிக்கடி தொடர்பற்றுக் குழறியது. பேசிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று எங்கோ கவனத்தைச் செலுத்தி மௌனமாகிவிடுவான். திடீரென்று எழும் சிறு ஓசைகூட அவனைத் திடுக்கிட வைக்கிறது என்பதை அறிந்த போது முரளிக்கு அவன் மீது இரக்கம் தோன்றியது. அன்று நேரடியாகவே கேட்டு விட்டான். ''உனக்கு ஏதாவது உதவி தேவை இருந்தால் சொல், செய்கிறேன். கொஞ்ச நாட்களாக நீ அமைதி இழந்திருக்கிறாய்'' என்றான் முரளி.

''கட்சி பற்றிய பிரச்னைதான். கட்சியில் பெரிய மாறுதல் செய்ய வேண்டிய முயற்சி நடக்கிறது. எல்லையில் சீனா தாக்குகிறது. இந்தச் சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, தேசத் துரோகமானது என்று எண்ணும்படி ஏற்பட்டுவிடக் கூடாது'' என்றான் சிவராமன். அவனுடைய குரலில் ஒலித்த கவலையையும், வெறுப்பையும் முரளி உணர்ந்து திகைத்தான். 'கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இவனுக்கு மட்டும் நாட்டின் மீது இவ்வளவு அக்கறை இருக்கிறதே' என்றெண்ணி வியந்தான்.

* * *

'பாரத மணி'க் காரியாலயத்தில் முரளி, பத்திரிகையின் வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பத்திரிகையின் லாப நஷ்டத்தைக் கணித்துக் கொடுத்த ஆடிட்டரின் குறிப்பையும் படித்தான். பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க ஏதாவது முயற்சி செய்தாலன்றி ஓர் ஆண்டுக்குள் தாங்க முடியாத நஷ்டத்தை எதிர்பார்க்க வேண்டியிருக்கும் என்று ஆடிட்டர் எச்சரித்திருந்ததைப் படித்ததும் முரளி முகத்தைச் சுளித்தான்.

முரளி, சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்தான். மக்கள் எந்தப் பாணியில் ஒரு பத்திரிகையை வரவேற்றார்கள் என்பதை அவன் நன்கு புரிந்து கொண்டிருந்தான். மக்களின் மன ஓட்டமும் வெறியும் எந்தத் திசையில் செல்கின்றன என்பதையும் அறிந்துதான் இருந்தான். ஆனால், மனிதனின் மட்டமான ரசனையைக் கிளறிவிட்டுப் பணம் சம்பாதிக்கும் ஈனச் செயலில் ஈடுபட முரளியின் கண்ணியம் மறுத்துவிட்டது. இந்தப் பிடிவாதத்தினால் பத்திரிகை நஷ்டப்படுவதையும் அவன் உணர்ந்தான். செய்வதறியாது குழம்பினான். பத்திரிகையை நிறுத்தி விடவும் அவன் மனம் ஒப்பவில்லை. என்றாவது ஒரு நாள் மக்களின் அறிவு வளர்ந்து, தரம் உயரும் என்ற நம்பிக்கை அவனை இறுகப் பற்றியிருந்தது. ஆனால் அந்த நாள் எப்போது வரும்? வருமா?

அந்தச் சமயத்தில் பரபரப்புடன் அந்த அறைக்குள் வந்தான் சாமிநாதன்.

''சார், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இரண்டு பேர் சந்தேகமான சூழ்நிலையில் இறந்துவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது'' என்றான்.

இதைக் கேட்டதும், ''ஆ....!'' என்று அலறியவாறு நாற்காலியைவிட்டு எழுந்தான், சிவராமன். முரளியை வெறிக்கப் பார்த்தான்.

''வங்கத் தலைவர் நரேந்திரபோஸும் பஞ்சாப் தலைவர் குர்நாம் சிங்கும் இறந்து விட்டார்களாம். கொலையா, தற்கொலையா என்று இன்னும் தெரியவில்லையாம்'' என்றான் சாமிநாதன்.

''இறந்தது எப்போது?'' — முரளி கேட்டான்.

''கல்கத்தாவில் காலையில் நரேந்திர போஸின் சடலம் கட்சிக் கட்டடத்தில்

ஓர் அறையில் கிடந்ததாம். மாலையில் அம்பாலாவில் குர்நாம்சிங் தம்முடைய வீட்டில் இறந்து கிடந்தாராம். இருவருமே தற்கொலை செய்து கொண்டிருப்பதாகக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்களாம்'' என்றான் சாமிநாதன்.

இதைக் கேட்டதும் சிவராமனின் உடல் ஒருகணம் குலுங்கியது. திறந்த வாய் மூடவேயில்லை. அவனுடைய கண்களில் நிறைந்திருந்த பீதியையும், உடல் நடுக்கத்தையும் கண்டு முரளி திகைத்தான். சிறிது நேரம் பைத்தியக்காரனைப் போல் சிவராமன் பரக்கப் பரக்க விழித்தான். உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கால்கள் தள்ளாடின. பிறகு சோர்ந்து போய் நாற்காலியில் தொப்பென்று விழுந்தான்.

சாமிநாதனைப் பார்த்துத் தண்ணீர் வேண்டும் என்று சைகை செய்தான். பேசக்கூட முடியவில்லை. சாமிநாதன் அந்த அறையில் மூலையிலிருந்த மண் பானையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். ஒரே மூச்சில் தண்ணீரைக் குடித்தான் சிவராமன். இன்னும் அவன் உடல் நடுங்கிக் கொண்டுதான் இருந்தது. அளவுமீறிய சோர்வினால் நாற்காலியில் சாய்ந்தபடியே கண்களை மூடிக் கொண்டான்.

அவனை மிகுந்த பரிதாபத்துடனும், கவலையுடனும் பார்த்துக் கொண்டிருந்தான் முரளி. (தொடரும்)



சித்திரவிஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

விஞ்ஞான அறிவை, வளர்ச்சியை, உண்மைகளை எளிய முறையில், ஏராளமான விளக்கப் படங்களுடன் குறைந்த விலையில் கவர்ச்சிகரமாக வெளியிட்டால்தான் ஒரு நாட்டின் வருங்காலச் சந்ததிகளை அறிவில் வலுவுள்ளவர்களாக்க முடியும். மேல்நாடுகளில் இத்தகைய புத்தகங்கள் இம்முறையில் தான் வெளிவருகின்றன. இம்முயற்சி நம் பாரதத்தில் இல்லையே என்ற குறையை நீக்க கல்கத்தாவைச் சேர்ந்த பாரதிய ஸம்ஸ்கிருத பரிஷத் என்ற ஸ்தாபனத்தினர் முன்வந்திருக்கின்றனர். விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் அடிப்படைக் கொள்கைகளையும், அவை சமீப காலம் வரை அடைந்த முன்னேற்றங்களையும் எளிதாக விளக்கியும் ஏராளமான படங்களோடும் வெளியிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து வரப்போகும் இந்தச் சிறு சிறு நூல்களை ஒன்றாகச் சேர்த்தால் இவை ஒரு கலைக் களஞ்சியமாகவும் உருப்பெறும். இந்நூல்களைப் பாரத மொழிகள் எல்லாவற்றிலும் வெளிக் கொண்டு வர வேண்டும் என்பது பரிஷத்தின் நோக்கம் என்றும் தெரிகிறது. இதை ஆங்கிலத்தில் தயாரிப்பவர்கள் ப்ரொக்ரஸிவ் பப்ளிஸிடி ஸர்வீஸ் (14, பெண்டிங் தெரு, கல்கத்தா—1) என்ற நிறுவனத்தின் ஆசிரியர் குழு. தமிழில் இதை மொழிபெயர்த்திருப்பவர், நமக்கெல்லாம் மிகவும் பரிச்சயமானவரும் பல விஞ்ஞானப் புத்தகங்களைத் தமிழில் எளிய நடையில் தயாரித்திருப்பவருமான திரு பெ. நா. அப்புஸ்வாமி அவர்கள். ஆகவே, இப்புத்தகங்களின் தரத்தைப் பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. தமிழில் வெளியிடுபவர்கள் கலைமகள் காரியாலயத்தார் (தபால் பெட்டி எண்: 704, சென்னை — 4)

சித்திர விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் என்ற இந்த வரிசையில் இது வரை ராக்கெட்டுகளும் துணைக் கோள்களும், டெலிபோனும் தந்தியும், ஏரோப்ளேன், விண்வெளிப் பயணம் என்ற நான்கு புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொன்றிலும் அதன் தோற்றம், வளர்ச்சி, இயங்கும் முறை ஆகியவையெல்லாம் சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளும்படி விளக்கப்பட்டிருக்கின்றன. இதேபோல் இன்னும் இருபதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இவ்வரிசையில் வெளிவரவிருக்கின்றன. மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்புத்தகங்கள் ஒவ்வொன்றின் விலையும் ரூ. 1.25தான். விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ளப் பொது மக்களுக்கு இவ்வரிசைப் புத்தகங்கள் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இராமாயணக் காட்சிகள்

எழுத்தால் வடிப்பதைப் படிப்பதை விடப் படங்களால் விளக்கம் தருவதைப் பார்த்துப் படிப்பதில் ஒரு தனி இன்பம் உண்டு. முக்கியமாகக் குழந்தைகளுக்கு இம்மாதிரிப் படக் கதைகளில் ரொம்ப ஈடுபாடு. இதைக் கருத்தில் கொண்டுதானோ என்னவோ ஓவியர் கணேசன் இராமாயணத்தைத் தொடர் படங்களால் சொல்ல முற்பட்டிருக்கிறார். தனி ஒருவராக இதைச் சாதிக்க முன்வந்துள்ள அவரது துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும். பாலகாண்டம் பதினாறு பக்கங்களில் வெளிவந்திருக்கிறது. படங்களின் அழகில், நயத்தில் ஓவியரின் உழைப்பு பளிச்சிடுகிறது. இம் முயற்சிக்குக் காஞ்சிப் பெரியவாளின் அருளாசியும் கிட்டியிருக்கிறது. இந்தப் படப் புத்தகங்களின் வரிசை வெற்றிகரமாக முற்றுப்பெற அயோத்தி ராமனின் அருளும் தமிழக மக்களின் ஆதரவும் கிடைக்க வேண்டும். இப் படக் கதைக்கு வசனம் தொகுத்து அளித்திருப்பவர் தணிகை வேலன் அவர்கள்.

கணேசன் வெளியீடு, 54-1, பஜார் ரோடு, மயிலை, சென்னை-4. விலை 50 காசுகள்.



Only
2 things
make
his face tingle

CREST is one of them

CREST AFTER SHAVE LOTION

A quality product of *SAHIB SINGH*

For export advice on [illegible] processing, write to:
CREST ADVISORY SERVICE, P.O. Box No. 440, NEW DELHI

For Export Enquiries write to:

Sahib Singh Mfg. Co., Pvt. Ltd.
7, Okhla Industrial Estate
NEW DELHI - 20

சம்ஸ்கிருதம்

மீனா



"ஆமாம், நான்தான் பேசுகிறேன்..என்ன? பெண் குழந்தையா? பேஷ்."

அனந்த் மகிழ்ச்சியுடன் டெலிபோனை வைத்து விட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி நாலரை.

அலுவலகச் சிப்பந்தி ஒருவனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் திணித்து விட்டு, "இங்கு உள்ளவர்களுக்கெல்லாம் இனிப்பு வாங்கித் தந்து அவர்களை இன்முகமாக்கு" என்று குதூகலத்துடன் கூறினான்.

அந்தச் சிப்பந்தி, "என்ன சுப சங்கதி ஸார் வந்தது?" என விசாரித்தான்.

கோட்டைப் போட்டுக் கொண்டே அனந்த் சொன்னான்: "சுப சங்கதிதான். எனக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. வீட்டுக்குப் போகிறேன். நீ எல்லோருக்கும் இனிப்புவாங்கி வழங்கி விடுகிறாயா?"

பிரசவ அறைக்குள் பேரானந்தத்துடன் நுழைந்தான் அனந்த். அவனுடைய மனைவியான் முகத்தில் மகிழ்ச்சி ரேகை அணுவளவும் காணப்படவில்லை. அவனது அன்னையிடமும் அதே பாவம்தான். ஆண் குழந்தை அல்லவே என்ற சலிப்பு.

அனந்த் பச்சிளம் குழந்தையை நெருங்கி அதன் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். ஆனந்தபரவசமாகி ஆர்ப்பரித்தான்: "மீனா! என்னுடைய எல்லாமும் ஆன மீனாவேதான்! ஆஹா, மீனா!"

அனந்தின் அன்னை இதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் சமையற்கட்டுக்குப் போய்விட்டாள்.

☼ ☼ ☼



○ உதக மண்டலத்தில் பிறந்து காசி ஹிந்து பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற ஸ்ரீ கஜேந்த்ரேயின் தாய் மொழி மராத்தி என்றாலும், சம்ஸ்கிருதம், ஹிந்தி தமிழ் ஆகிய மொழிகளில் எழுதும் திறமை பெற்றிருக்கிறார். இந்த நான்கு மொழிகளிலும் சேர்ந்து இது வரை இருநூறுக்கும் மேற்பட்ட கதைகளும், கவிதைகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன. முதல் சம்ஸ்கிருதக் கதையான 'அஞ்ஞாத பதிக' 1960ல் 'திவ்யஜ்யோதி' தீபாவளி மலரில் வெளிவந்தது. ஏறக் குறையப் பதினேழு புத்தகங்கள் படைத்த இவருடைய 'மீனா' என்னும் ஸம்ஸ்கிருதக் கதை, வடமொழியிலும் தற்கால இலக்கியம் எப்படி வளர்ந்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.



அனந்தின் மனைவியாள் பிரமீளா வேண்டா வெறுப்பாகக் கேட்டாள் : '' மீனாவா ? யாருன்னு அந்த மீனா ?''

''யாரா? இதோ புத்தம் புதிதாகப் பிறந்திருக்கிறாளே, இவள்தான்.'' — குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுவது போல் தன் தலையை அதனருகே ஆட்டி ஆட்டிக் காட்டினான் அனந்த். ''இவள்தான் என் மீனா. அதே குளிர்ச்சியான அழகு. அதே மனோகரக் கண்கள். அதே துளிர் உதடுகள்'' என்றான்.

பிரமீளாவுக்குப் பெண்களுக்கே உரிய ஐயப்பாடு எழுந்து விட்டது. ''மீனா மீனா என்றால் யார்தான் அவள்?'' என்று குடைய ஆரம்பித்து விட்டாள்.

அனந்த் நீண்ட பெருமூச்சு விட்டான். ''பிரமீளா, அது ஒரு நீண்ட நெடுங்கதை. இப்போது உனக்கு அதைக் கேட்க அவகாசம் ஏது ?'' என்றான்.

பிரமீளா விடவில்லை. ''அவகாசம் இல்லாமல் என்ன? இப்போதுதான் எனக்கு வேறு காரியம் எதுவும் இல்லை. சொல்லுங்கள், அந்தக் கதையை !''

அனந்த் பேச ஆரம்பித்தான் : ''நம் கலியாணத்துக்கு முன் நான் டேராடூனில் உத்தியோகம் பார்த்து வந்தேன் என்று உனக்குத் தெரியுமல்லவா ?''

'' ஆமாம், ஆனால் அங்கு இரண்டு மாதங்கள்கூட நீங்கள் இருக்கவில்லையாம் !''

''வாஸ்தவம்தான். அவ்வளவு அசௌகரியமான இடம் அது. முதலில் வீடே கிடைக்கவில்லை. அப்புறம் நிர்மானுஷ்யமான ஓரிடத்தில் கிடைத்தது. வீட்டுக்குரிய லட்சணங்களே இல்லாத வீடு ! அந்த வீட்டில் எவருமே நீடித்து வசித்ததில்லை; பயந்து ஓட்டம் பிடித்திருக்கிறார்கள் !''

''ஏன், பேய் பிசாசு உலாவிய வீடோ ?''

''பேயா, பிசாசா ? நான் எப்படி அவ்வாறு சொல்ல முடியும்? எவளுடைய கிருபையால் இன்று நான் உயர் பதவியில் இருக்கிறேனோ, எவளுடைய கருணையால் நான் உன்னை அடைந்த பாக்கியவானாக இருக்கிறேனோ, அவளைப் பேய் என்றும் பிசாசு என்றும் நான் கூடச் சொல்ல இயலுமா ?''

அனந்த் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பிரமீளா ஊக்கினாள்: ''பின் அந்த வீட்டுச் சமாசாரம் என்னதான் என்று சொல்லுங்களேன். அங்கே என்னென்ன நடந்தது என்று கூறுங்களேன்.''

அனந்த் பழங்கதையை வர்ணிக்கலானான்.

* * *

அன்றிரவு ஒரு சினிமாவுக்குப் போய் விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். தன்னந் தனியனாக வருகிறேன். மனித நடமாட்டமே இல்லாத வழி. தெரு விளக்குகள் கூடக் கிடையாது. ஒரே அந்தகாரத்தில் சிக்கிக் கொண்டேன். வீடு போகும் மார்க்கம் தவறிக் காட்டு வழியில் வந்து விட்டேன். பரிசயமற்ற வழியில் மேலும் எப்படிப் போவது என்றே குழப்பமாகி விட்டது. குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றினேன். எத்தனையோ தூரம் நடந்தும் வீடு வந்தபாடாக இல்லை.

அப்போது அருகே காலடிஅரவம் கேட்டது. யார் என்று நின்று பார்த்தேன்.

ஒரு யுவதி. அவள் தலையில் விறகுச் சுமை.

வழி தெரியாமல் தடுமாறிய என்னைப் பார்த்து அவள், ''சாமி, எங்கே போறீங்க ? இந்தப் பக்கத்துலே வீடு ஏதுமே கிடையாதே. இந்தப் பயங்கர வனப் பிரதேசத்தில், இந்த இரவில் எங்கே போறீங்க?'' என்று வினவினாள்.

அப்போது மணி பதினொன்று. அந்த வேளையில், அந்த ஜன சஞ்சாரமற்ற இடத்தில் ஒரு பெண்ணைத் தன்னந் தனியாகப் பார்த்ததும் எனக்குச் சங்கை உண்டாயிற்று. நான் அவளைத் திரும்பக் கேட்டேன்: ''அது சரி, இந்த அர்த்தராத்திரியில் நீ எங்கேயிருந்து வருகிறாய், எங்கே போகிறாய் ? உனக்குப் பயமாக இல்லை ?''

''பயமா ? பயம் எதற்கு ஐயா? நாங்கள் பாட்டாளி ஜனங்கள். பயந்தால் எங்கள் பிழைப்பு எப்படி நடக்கும்?'' என்றாள் அவள்.

''அது சரி, எங்கிருந்து வருகிறாய், எங்கே போகிறாய் ?''

''மூணு கல்லில் ஒரு கிராமம். அங்கிருந்து வருகிறேன். நீங்கள் எங்கே போகிறீர்கள், ஐயா ?''

இங்கே 'வன விஹார்' என்று ஒரு வீடு இருக்கிறது. அங்கு நான் வசிக்கிறேன். வழியை மறந்துவிட்டு இங்குமங்குமாகத் திண்டாடுகிறேன்.''

''அடடா, அந்த வீட்டைத் தாண்டி வெகு தூரம் வந்து விட்டீர்களே ! பரவாயில்லை, அதனருகில்தான் என் வீடு. என் பின்னோடு வாருங்கள்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே அவள் எனக்கு முன் நடந்தாள். அவள் அந்த வழி காண முடியாத மார்க்கத்தில் நிர்ப்பயமாகச் சரசரவென்று சென்று கொண்டிருந்தாள். நான் பயந்து பயந்து, உன்னிப்புடன் கவனித்துக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்தேன். அப்படியும் எங்கோ காலைப் பிசகாக வைத்துத் தடுக்கிக் கொண்டேன்.

அவள் கலகல வென்று நகைத்துக் கொண்டே, ''என்ன, இம்மாதிரி இடத்தில் நடந்து பழக்கம் இல்லையா ? கவனித்து வாருங்கள் '' என்றாள்.

வீட்டை அடைந்ததும் அவள் கேட்டாள்: ''இதுதான் உங்கள் வீடு இல்லையா ?''

''ஆம், இதேதான்.'' இப்படிச் சொல்லும் போது எனக்கு ஏக சந்தோஷம்.

அவளுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. கிராமத்துப் பெண்ணான அவளோ எவ்விதமான பிரதி உபகாரமும் நன்றி வார்த்தையும் எதிர்பாராமல் போய்விட்டாள்.

மறு நாள் காலை எழுந்து அக்கம் பக்கமெல்லாம் சுற்றிப் பார்த்தேன். வெகுதூரத்துக்கு அங்கு வீடோ, குடிசையோ ஏதுமே தென்படவில்லை. ''அருகில்தான் என் வீடு'' என்று அவள் சொன்னதை நினைத்து ஆச்சரியப்பட்டேன்.

இன்னொரு நாள். இரவு உண்டுவிட்டுப் படுத்தேன். பதினொரு மணி அடித்தும் உறக்கம் வரவில்லை. மார்கழி மாதத்துக் குளிரில் என் உடல் நடுங்கத் தொடங்கியது. குளிர



"அதிகமான வேலையில் ஈடுபட்டிருக்கும் போது சில சமயம் எனக்குக் கடுமையான தலைவலி வருகிறது"

என்கிறார் விபின் ஜெயின்
பம்பாய் ஆபீசர்

தலைவலியா? விரைவிலே குணம் பெற அனாஸின் சாப்பிடுங்கள்



வயது வந்தவர்களுக்குப் போதுமான சக்தி வாய்ந்தது குழந்தைகளுக்கு நம்பகமானது

அனாஸின் சக்தி வாய்ந்தது—உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாகச் சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது. அனாஸின் நம்பகமானது. டாக்டரின் மருந்தைப் போல பல மருந்துகளின் சரிவிகிதக் கலவையே அது. தலைவலி, ஜலதோஷமும் ஃப்ளூவும், முதுகு வலி, பல் வலி மற்றும் தசை வலிகளுக்கு அனாஸின் சாப்பிடுங்கள்.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்



இந்தியாவின் மிகப்
பிரசித்தமான வலி நிவாரணி

4 வழிகளில் செயலாற்றுகிறது.

A-41

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.


கேரளா
சந்தன சோப்
உங்களை
விரும்புகிறது
SANDALWOOD
கேரளா சந்தன சோப உங்களுடைய
மேனியை பார்ப்பதற்கு மிக இளமை
யாகவும், அழகாகவும் இருக்கச்செய்
கிறது. அதனுடைய சுத்தமான சந்தன
எண்ணெ உங்களுடைய நிறத்தை
வெயிலிலிருந்தும் குளிர் காற்றிலிருந்தும்
காப்பாற்றுகிறது. அதனுடைய சுத்தமான
நறுமணம் மணிக்கணக்கில் உங்களை விட்டு
அகலாது.
இது ஒரு
கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
கோழிக்கோடு-5. ன் உன்னத தயாரிப்பு
(இது ஒரு கேரள அரசின் நிறுவனம்)
SISTA'S-KSO-TA
சென்னை நகரம் & செங்கல்பட்டுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
Ms. காகா கோபி கிருஷ்ண கோகுல்தாஸ், 98-A, அரமனைக்கார தெரு, சென்னை

அட்டைப்படக் கதை -
வண்ணப்படம்:
வித்யா விரதா

ஏறிக்கொண்டே வந்தது. கம்பளி உடுப்பும் சீதத்தைச் சமனம் செய்யப் போத வில்லை. வெடவெடக்கும் குளிரில் உறக்கம் வராமல், செய்வதேதும் அறியாமல் அவதிப்பட்டேன்.

வாசற் கதவைத் தடதட வெனத் தட்டும் ஓசை கேட்டது.

இந்த நள்ளிரவில் வந்திருப்பது யார்? பகல் போதிலேயே இந்த அழகான இருக்கைக்கு யாரும் வந்தது கிடையாதே !

எழுந்து சென்று கதவைத் திறந்தால் அங்கு யாரைப் பார்க்கிறேன், தெரியுமா ?

அவளைத்தான்! அதே யுவதியைத்தான்.

அவள் நகைத்துக் கொண்டே "ஐயா, குளிர் தாங்கவே முடியவில்லை, அப்படித் தானே ? இதற்குத்தான் நான் கம்பளி சுமந்து வந்திருக்கிறேன். கணப்புப் போட்டுக் கொண்டு குளிர் காயுங்கள். இல்லாவிட் டால் ராத்திரி முழுதும் தூங்கவே முடி யாது. இந்தச் சீமையின் குளிர் அப்படிப் பட்டது. இது உங்கள் நாகபுரி அல்ல" என்றாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என் காரியாலயத்தில் ஓரிருவரைத் தவிர நான் நாகபுரிக்காரன் என்பது எவருக்குமே தெரி யாதே ! ஏதும் அறியாப் பெண்ணாகத் தோன்றும் இவளுக்கு எப்படி அது தெரிந்தது?

அவள் கையிலிருந்த கம்பளியை வாங்கிக் கொண்டு, "நான் நாகபுரிக்காரன் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன்.

அவள் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு பெரிதாகச் சிரித்தாள். "உங்களுக்கு என்னைப் பற்றி ஒரு சமாசாரமும் தெரியவில் லையே, ஐயா" என்றாள் சிரிப்புக்கிடையே.

வாசலிலிருந்து என் பின்னோடு உள்ளே வந்தாள். கம்பளிக் கற்றையைப் பிரித்தாள். கணப்பு மூட்டிக் காய்ச்சிக் கொள்ள அறியாத எனக்கு அவளே எட்ட நின்றபடி, கம்பிகளை மூட்டச் சொல்லிக் கொடுத்தாள். ஆனால் ஏனோ அவளே மூட்டித் தரவில்லை. தன் மூங்கில் கூடையிலிருந்து எதையோ எடுத்து நெருப்பில் போடச் சொல்லி, "இதை நன் ருக வேவு பிடியுங்கள்" என்றாள்.

அப்படியே செய்தேன்.

கணப்பு கணகணவென்று எரிந்தது. இத மாக இருந்தது.

அரை ரூபாய் நாணயத்தை அவளிடம் நீட்டினேன்.

"எனக்குக் காசில் துளிக்கூட ஆசையில்லை ஐயா. நீங்கள் நன்ருகக் குளிர் காய்ந்து சிரமத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள், அதுவே எனக்குப் போதும்" என்றாள் அந்தப் பெண்.

அந்தப் பணத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவளிடம் நான் மன்றாடினேன். பலனில்லை. கடைசியில் என் தோல்வியை ஒப்புக்கொண்டு கட்டிலில் போய் அமர்ந்து கொண்டேன்.

அவள் கீழே பக்கத்தில் நின்றுகொண்டு சிரித்துக் கொண்டே யிருந்தாள்.

அவளது முக கமலத்தில்தான் எத்தகைய கௌரவம் நிரம்பி வழிகிறது! நீக்கொழுந்து களின் ஒளியில் அது சொக்கத் தங்கமாக ஒளி விட்டது! ஆகா, அந்தப் பொன் முகம்...

ஆம், இதோ இந்தப் பச்சைப் பசும் குழந்தையின் முகமேதான். இதே அழகு நாசிதான், இதே பரந்த கண்கள்தாம். இதே போன்ற மெல்லிய துளிர் உதடுகள்தாம். அடடா, என்ன சோபை! முக் காட்டுக்கிடை ஒளிந்துள்ள அந்த முகத்தி லிருந்த விழிகள் என்னையேதான் துளைத்துக் கொண்டிருந்தன!

இப்படிப் பல நாட்கள் சென்றன.

இன்னமும் அவள் யார் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. அவளைப் பற்றி நான் எப்போது கேட்டாலும் அவள் சொன்ன ஒரே மறுமொழி: "அதைப் பற்றிச் சிந்தை வேண்டாம் ஐயா. உங்களுக்குத் தானே எல் லாம் தெரியும்."

ஒரு நாள் கேட்டேன், "உன் பேரையாவது சொல்லேன்" என்று.

"மீரு" என்றாள்.

அப்பெயரின் மதுரத்தில் மூழ்கினேன்.

"மீரு! நாம் எத்தனை காலம் இப்படியே இருப்பது? நீ எப்போது என்னைச் சேரப் போகிருய்?" என்றேன்.

அவள் சட்டென்று தன் முகத் திரையை இழுத்துவிட்டுக் கொண்டாள். "ஐயா! நான் ஒரு வனவாசி. நாகரிக சமூகத்தின் எதிரே நிற்க லாயக்கில்லாதவள். என்னை நீங்கள் மணப்பது எப்படிச் சாத்தியம்?" என்றாள்.

அவள் குழந்தை போல் படபடவென்று பேசியதைக் கேட்டு நகைத்தேன். "வன வாசி என்றால் அவ்வளவு மட்டமா என்ன? மீரு, மணவினைக்கு வேண்டியது பிரேமை தானே? உனக்கு என்னிடம் ஆசை இல்லையா? எனக்கு இந்த உலகில் உள்ள அதிப்பிரியமான வஸ்து நீதான். மெய்யான பிரேமையின் முன் வர்ண தர்மமும், வர்க்க தர்மமும் வெறும் புரளிதான். மீரு, சொல், எப்போது திரு மணம் வைத்துக் கொள்ளலாம்?"

'திருமணம்' என்ற வார்த்தையைக் கேட்ட வுடன் அவள் விம்மினாள். நீர் நிறைந்த நயனங் களைத் தூக்கி என்னைப் பார்த்தாள். "திரு மணம்! அது எப்படி நடக்க முடியும் ஐயா?" என்றாள்.

நான் உருகிவிட்டேன். "நீ என்ன சொல் கிருய், மீரு? உன்னுடைய தாய்—தகப்பன்..."

"இரண்டுபேரும் பரலோகம் போயாச்சு."

"அப்படியானால் நீ தனியொருத்தியாக இருப்பவள்தானே?" — அவளுடைய மறு மொழியை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கேட்டேன்.

"ஆம் ஐயா!" என்றாள் அவள்.

ஆயினும் அவள் குரலில் நிராசைதான் தொனித்தது.

எனக்கு ஒரே உற்சாகம். "அப்படியாயின், திருமணத்துக்கு என்ன குந்தகம்?" என்றேன்.

இதுவரை என் அருகே உட்கார்ந்திருந்த அவள் எழுந்திருந்தாள். எனக்குப் பின்புறம் தெரியுமாறு நடந்தவாறே, "ஆளையைக் கலி யாணம் செய்து கொள்வதா? அது எப்படி நடக்கும்?" என்றாள்.

ஆவி என்ற பதத்தைக் கேட்டவுடன் நான் அட்டகாசமாக நகைத்தேன். ''பெண்ணே, என்ன பேசுகிறாய்? என்னைப் பார்த்தால் ஆவியாகவா தோன்றுகிறது?'' என்றேன்.

ஒரு விநாடி அவள் அப்படியே நின்றாள். பிறகு இன்னும் அப்பால் சென்றபடியே, ''**உங்களை** ஆவி என்று சொல்லவில்லை'' என்றாள்.

அப்போதும்கூட அவள் ஏதோ வேடிக்கை செய்கிறாள் என்றுதான் நினைத்தேன். அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரவேண்டும் என்று அவள் பின்னே ஓடினேன்.

அவள் அப்படியே மறைந்து விட்டாள்!

என் நெஞ்சில் இனம்தெரியாத திகில் பரவத் தொடங்கியது.



''சென்ற வருஷம் நீங்கள் துவக்கி வைத்த சங்கீத சபையின் காரியதரிசி நான்.''

''ஓ! அப்படியா? என்ன விஷயம்?''

''மறுபடியும் இந்த வருஷம் அதைத் துவக்கி வைக்க வேண்டும்!''

''நீ சத்தியமாகச் சொல் மீனா. வாஸ்தவமாகவே நீ ஆவியா, அல்லது என்னிடம் விளையாட்டுப் பண்ணுகிறாயா?'' எனக் கேட்டேன்.

''நான் ஏன் ஐயா விளையாடப் போகிறேன்? உண்மையாகவே நான் சொல்கிறேன். நான் செத்துப்போய் எத்தனையோ வருடங்களாகி விட்டன.''

''அப்படியானால் நீ என் எதிரே வந்து உட்கார்ந்திருப்பது எப்படி? உன்னை நான் தெளிவாகப் பார்க்கிறேனே!''

''ஆம் ஐயா! நீங்கள் என்னைப் பார்ப்பது வாஸ்தவம். ஆனால் பஞ்சபூதங்களால் ஆன என் சரீரத்தை அல்ல. என் சூட்சும சரீரத்தையே நீங்கள் பார்க்கிறீர்கள். எல்லா மக்களுக்கும் இதைப் பார்க்கும் சக்தி கிடையாது. நான் யார் என்னைப் பார்க்கலாம் என விரும்புகிறேனோ அவர்களே என்னைப் பார்க்க முடியும். இது பரியந்தம் நான் எவருமே என்னைப் பார்க்க வேணுமென ஆசைப் படவில்லை. உங்களைத்தான் முதலில் பார்த்து விரும்பினேன். 'அடடா, ஏன் இப்படித் தற்கொலை செய்துகொண்டு தொலைத்தோம்' என்று இப்போது நினைத்து வருந்துகிறேன். நான் என்னதான் ஆசைப்பட்டு என்ன பிரயோசனம்? விஷயம் என்வசம் மீறிப் போய் விட்டதே, ஐயா!''

''தற்கொலையா செய்து கொண்டாய்? எதனால்?'' என்று வினவினேன்.

அவள் கூறினாள்: ''நான் இப்போது எப்படிக் காண்கிறேனோ அப்படியேதான் அப்போதும் ஏழையாக இருந்தேன். என் அப்பா பெரும் குடிகாரர். குடி இல்லாமல் அவரால் ஒரு வேளை கூட இருக்க முடியாது. இங்கு பாட்டாளிகள் படும் சிரம ஜீவனம் உங்களுக்கே தெரியும். எனவே வேலை முடிந்த பின், மாலையில் குடித்தால் ஒழிய என் தகப்பனாருக்கு அலுப்புத் தீராது. குடித்துக் குடித்து மூளையைக் கெடுத்துக் கொண்டார். சம்பாதித்ததற்கும் அதிகமாகக் குடிச்செலவு உயரத் தொடங்கியது. கடன் வாங்கிக் குடிக்கலானார். காபூலிவாலாவிடம் கடன் சுமை ஏறிற்று.

''ஒரு நாள் ஈட்டிக்காரனே எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டான். அப்போது அப்பாவின் கையில் சல்லிக் காசு கிடையாது. இருவருக்குமிடையே பேச்சு வலுத்துச் சண்டை ஆயிற்று. ஈட்டிக்காரன் எத்தனை குரூரமாக நடப்பான் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். மகா மட்டமான வார்த்தைகளைக் கொட்டினான் அவன். அப்பாவுக்குக் கோபம் எல்லை மீறிவிட்டது. அப்போது அவர் விறகு பிளந்து கொண்டிருந்தார். கோடாரிக் கையுடனேயே தான் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். இப்போது ஆத்திரத்தில், ''போதும் நிறுத்து! இப்படியே பேசினால், இந்தக் கோடாலியால் உன்னைப் பரலோகம் அனுப்பிவிடுவேன்'' என்றார்.

''ஈட்டிக்காரன் முன்னிலும் இழிவான வார்த்தைகளை மொழிந்தபடி சவுக்கைச்

மறுநாள் அவள் வரவில்லை. அதற்கு மறு நாளும் வரவில்லை. என் மனத்தில் பீதி ஓங்கிக் கொண்டே வந்தது. இருப்பினும் அவளைப் பாராமல் மனத்தில் வியாகுலமும் வந்தது.

நான்காம் நாள். எனக்குக் காய்ச்சலே வந்துவிட்டது. ஜுர வேகத்தில் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது. சுள்ளிகளும் தீர்ந்து விட்டன.

மனத்தில் நானாவிதக் குழப்பங்கள் அலைமோதின. என்ன முயன்றும் சமாளிக்க முடியவில்லை. படுக்கையில் புரண்டு அழத் தொடங்கி விட்டேன்.

காலடி ஓசை!

படுக்கையிலிருந்து எழுந்திருந்தேன்.

மீனாதான் — சிரித்தபடி என் அருகே வருகிறாள்!

''மீனா'' என்று ஏதோ ஒரு விநயத்துடன் அழைக்கிறேன்.

அவள் முன்போலவே சரளமாக நடந்து கொள்ளுகிறாள். அதில் வசமான நான் மற்றதை யெல்லாம் மறந்து விடுகிறேன்.

அவள் சுள்ளிக் கத்தையைக் கீழே போட்டு விட்டு, ''காய்ச்சல் வேகத்தில் பயந்துவிட்டீர்களா ஐயா? மூலிகையும் தருவேனுக்கும். அதை உண்டுவிட்டு வெதுவெதுப்பான வெந்நீர் அருந்துங்கள். உடனேயே சொஸ்தமாகத் தொடங்கும்'' என்றாள்.

புடவைத் தலைப்பி லிருந்து மூலிகையை எடுத்துப் படுக்கையில் வைத்தாள். ''உடனே வெந்நீர் அருந்த வேண்டுமே! அந்தச் சுள்ளிகளைக் கொஞ்சம் கொளுத்திப் போடுங்கள்'' என்றாள்.

தலையணையில் சாய்ந்தபடியே வர்த்திக் குச்சியை எடுத்து அவளிடம் நீட்டினேன். ''நீயேதான் மூட்டேன்'' என்றேன்.

''ஐயா, அதுமட்டும் செய்ய என்னால் முடியாது'' — இப்படிச் சொல்லிக் கொண்டே அவள் சமையற்கட்டுக்குள் சென்றுவிட்டாள்.

ஒரு பாத்திரம் நிறைய நீருடன் வந்தாள் மீனா.

என் பக்கத்தில் வைத்துவிட்டு, ''இதைச் சுட வையுங்கள்'' என்றாள்.


இலவசம்
ஒரு ஜார்
விக்கோவின் டெர்மரிக்
VICCO
TURMERIC
VANISHING CREAM
VICCO LABORATORIES, BOMBAY 14
விக்கோவின் வஜ்ரடந்தி
(எகானமி சைஸ்) வாங்கினால் டெர்மரிக் வானிஷிங் க்ரீம் ஒரு ஜார் இலவசமாகப் பெறுவீர்கள்.
VICCO
Vajradanti
உண்மையிலேயே இது ஒரு மகத்தான சலுகை
விக்கோ வஜ்ரடந்தி
ஆயுர்வேத பற்பசை
இந்த ஆயுர்வேத பற்பசை மதிப்புமிகுந்த மூலிகைகளினால் தயாரானது. இதைத் தொடர்ந்து உபயோகித்து வந்தால் பல் சொத்தை, பற்களில் சீழ்ரத்தம் வடிதல் நாற்றம் ஈறு வீக்கம் ஆகியவை மறையும்.
விக்கோ டெர்மரிக்
வானிஷிங் க்ரீம்
சந்தண நறு மணமுள்ளது.
உங்கள் நிறத்திற்கு மேலும் அழகூட்டுகிறது. சருமத்தை மென்மையாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது. ஷேவிங் செய்துகொண்டபின் உபயோகிக்க அருமையானது. வெட்டு. காயங்களைக் குணப்படுத்தும்.
முந்துங்கள்!
இன்றே வாங்குங்கள்
ஸ்டாக்குகள் தீரும்வரை இந்தச்சலுகை
விக்கோ லாபரெட்டரீஸ்
பம்பாய்-14
இலங்கை, மலேயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு ஏஜண்டுள் தேவை

சொடுக்கிக் கொண்டு அப்பாவை அடிக்க வந்தான்.

''அப்பா தம் வசமிழந்துவிட்டார். கோடாலியால் ஒரு போடு போட்டு விட்டார். அவன் அப்படியே பூமியில் சாய்ந்து விட்டான். ரத்த வெள்ளம் பாய்ந்தது.

''ஊர் ஜனங்கள் திரண்டு வந்தனர். போலீசாரும் வந்து விட்டனர். அப்பாவின் கையில் விலங்கு ஏறிற்று. அதன் பின் அவர் முகத்தை நான் பார்க்கவே யில்லை.

''கோடாலித் தாக்கில் காபூலிவாலா இறந்து விட்டதாகவும் கொலையாளியான என் தந்தைக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்றும் பிற்பாடு ஜனங்கள் சொல்லித் தெரிந்து கொண்டேன்.

''இதன்பின் வீட்டின் நிலை என்னவாயிற்று என்பதை எப்படிச் சொல்வேன்? அம்மா அழுது அழுதே செத்தாள். தன்னந் தனியன் ஆனேன். ஒழுக்கம் கெட்ட வஞ்சகப் பாவிகள் இந்த நிலையில் என்னைக் கெட்ட வழியில் பயன்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டார்கள். நான் வெளியில் வருவது என்றாலே நரக அவஸ்தை ஆயிற்று.

''உங்களை முதலில் காட்டுப் பாதையில் சந்தித்தேனே, அவ்வழியில் ஒரு நாள் தலையில் விறகுக் கட்டுடன் வந்து கொண்டிருந்தேன். திடீரென ஒரு வஞ்சகன் வந்து என் கையைப் பிடித்திழுத்தான். நான் தலையில் இருந்த சுமையை அப்படியே அவன் மேல் தள்ளி விட்டு ஓடலானேன். அந்தத் துராசைக்காரனும் என்னைப் பின்தொடர்ந்தான். எதிரே மலைச் சிகரம். அதனை நோக்கி ஓடினேன். உச்சிக்கு · வநதாயிற்று. அந்தப் போக்கிரி அங்கும் தொடர்ந்தான். பின்புறம் திரும்பி ஓடுவதற்கில்லை. யோசிப்பதற்கோ பொழுது இல்லை. அலுத்துக் களைத்துத் திராணியற்றுப் போய்விட்டேன் நான். இதோ என்னை அவன் பிடித்தே விடுவான்! அந்த நொடியில் சடேரென்று மலையுச்சியிலிருந்து மறுபுறம் குதித்து விட்டேன்.

''ஐயா, அதோடு என் வாழ்வு முடிந்தது. அதனால் என்ன? இன்றுவரை அந்தப் பாவியால் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை அல்லவா? ஐயா, இப்படிச் சில ஆடவர்கள் கொடூரமாக ஆவது ஏன்? இவர்களுக்குத் தாயார் கிடையாதா? இவர்களுக்கு உடன் பிறந்த தங்கை தமக்கை கிடையாதா? பரஸ்திரீகளைக் கெடுத்து இவர்கள் அடையும் இன்பம்தான் என்ன?''

அந்த வரலாற்றின் பயங்கரம் என்னைச் சூழ்ந்திருந்தது.

''மீனா! என்ன கொடூரமான கதை! என் தலை வெட்கத்தில் குனிந்து கொள்கிறது'' என்றேன்.

''அந்தப் பாவி யார் தெரியுமா?'' என்றாள் மீனா. ''உங்கள் காரியாலய மானேஜர் தான். இன்றுவரை அவன் படு துஷ்டனாகத்தான் இருக்கிறான். எனவே நீங்கள் அவனை விட்டுப் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.''

''ஏன், நான் அவனுக்கு என்ன தீங்கு இழைத்தேன்?''

''ஐயா, நீங்கள் கபடமே தெரியாதவரா யிருக்கிறீர்கள். இந்த உலகில் எல்லோரும் ஒரே குணத்தவர்கள் அல்ல. உங்களை எப்படி



'' ஓ அதுவா? டிரைவிங் ஸ்கூல் கார்!''

யாவது விரட்டிவிட்டு, உங்கள் பதவியில் தான் அமர வேண்டும் என்று அவன் மறைவாக இந்திர ஜாலம் செய்து வருகிறான்.''

''இந்திர ஜாலம் செய்யட்டுமே! நானும் ஒன்றும் அவனிடம் விசுவாசமா யிருக்கவில்லை.''

''நீங்கள் விசுவாசமாகத்தான் இருங்கள், இல்லாவிடில்தான் போங்கள்! அதைப் பற்றிக் கேள்வி இல்லை. அவனுடைய 'பிரபாவ'த்தைச் சொன்னேன். அவனால் அடிக்கடி அவதிப் படுகிறீர்கள் அல்லவா? இதைத் தொடர்ந்து செய்யத்தான் போகிறான்'' என்ற மீனா, ''ஆனால், இன்றுவரை ஆவியிடம் விசுவாசம் வைத்தவர் உண்டா?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

மின்னல் கொடி போல் அவள் முகத்தில் புன்னகை படர்ந்தது.

நான் மௌனமானேன். அவளது முகத் தாமரையின் அழகுத் தேனில் மூழ்கின என் நயன வண்டுகள்.

அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்து அவளே பேசினாள்: ''ஐயா, ஒரு விஷயம். நாகபுரியில் உங்கள் அம்மாவுக்கு உடம்பு சரி இல்லை. நீங்கள் சீக்கிரமே அங்கு போய்ச் சேருங்கள்'' என்றாள்.

எனக்குத் தெரியாத செய்திகள் இவளுக்கு எப்படித் தெரிகின்றன?

நான் மிகவும் வியப்புடன், ''நாகபுரி சமாசாரம் உனக்கு எப்படித் தெரிந்தது'' என்றேன்.

முகம் மலர்ந்து அவள் சொன்னாள்: ''ஐயா! நீங்கள் உங்கள் சரீரத்தின் அடிமை. அது உங்களை மெய்யறிவு பெற முடியாமல் வஞ்சிக்கிறது. நீங்கள் ஓரிடத்தில் இருந்தால் அந்த ஓரிடத்து சமாசாரம்தான் உங்களுக்குத் தெரிகிறது. எனக்கு அப்படி யில்லை. சமஸ்த பிரபஞ்ச சமாசாரத்தையும் அறியும் ஆற்றல்

எனக்கு உண்டு. உங்கள் மனத்தில் இருப்பதும் கூட எனக்கு நன்ருகத் தெரியும்.''

''அப்படியா? சரி, என் அம்மாவுக்கு என்ன உடம்பு?'' என்றேன்.

''ரத்தக் கொதிப்பு. இப்போது மருத்துவ மனையில் இருக்கிருள். உங்களுக்குத் தந்தி வரப் போகிறது.''

''அப்படியா?''

''அப்படியேதான். நீங்கள் நாகபுரியிலிருந்து இங்கு திரும்பி வரப் போவதில்லை. லக்னௌவில் உங்களுக்குப் பெரிய உத்தியோகம் கிடைக்கப் போகிறது. ஒன்றும் யோசிக்காதீர்கள் ஐயா. எல்லாவற்றையும் நான்தான் செய்து தருகிறேன்.''

''அது சரி, அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்ருயே, குணமாகுமா?''

''மெல்ல மெல்லக் குணமாகும்.''

மீனா தொடர்ந்து சொன்னுள்: ''உங்களோடு நானும் நாகபுரிக்கு வரப் போகிறேன். என்னை வேறு யாரும் பார்க்க முடியாது. ஆனல் இங்கு போல் அங்கு நான் அடிக்கடி உங்களைச் சந்திக்க மாட்டேன்.''

மீனாவின் வார்த்தை மெய்யாயிற்று. மறு நாள் காலையே தந்தி வந்தது. நாகபுரிக்குப் போனேன். அம்மா மருத்துவ மனையில்தான் இருந்தாள். வாஸ்தவமாகவே அவளுக்கு ரத்தக் கொதிப்பு. நான் போன பின் சில நாட்களில் அவள் சிறிது சிறிதாகக் குணம் அடைந்தாள்.

* * *

ஒரு நாள் கனவில் வந்தாள் மீனா. லக்னௌவில் இன்ன இடத்தில் ஒரு பெரிய பதவி காலியாக இருக்கிறது என்று கூறிருள். ''நீங்கள் அதற்கு மனுப் போடுங்கள். நான் உங்களுக்கு அந்த வேலையைச் சாதகமாக முடித்துத் தருகிறேன். இது வெறும் சொப்பனம்தானே என்று சும்மா இருந்து விடாதீர்கள்'' என்ருள்.

மறுநாள் அவள் சொன்ன வண்ணமே செய்தேன்.

ஒரே மாதத்தில் அந்த அதிகாரப் பதவி எனக்குக் கிடைத்து விட்டது.

* * *

மாதங்கள் பல சென்றன. ஓர் இரவு அவள் வந்தாள். கேட்டாள்: ''ஐயா, இப்படியே எத்தனை காலம் ஏகாங்கியாக இருக்கப் போகிறீர்கள்? ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?''

''மீனா, உன்னை மனத்திலிருந்து அகற்றி வேறொருத்திக்கு அங்கு இடம் தருவதற்கில்லை. உன்னையன்றி ஒருத்தியுடன் நான் திருமணத் தொடர்பு கொள்வது எப்படி?''

''ஐயா! இதைத்தான் ஞானிகள் மாயை மாயை என்று சொல்கிருர்கள். உங்களுக்கு ஏற்றபடி சகல தகுதியும் பொருந்திய ஒரு பெண் போபாலில் இருக்கிருள். என்னைப் போலவே அவள் இனியவள். ஒழுக்கமானவள். அழகி. போபாலிலிருந்துதான் வருகிறேன். 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். நான் சாதித்துத் தருகிறேன்.''

''வேறொரு பெண்ணைப் பார்ப்பது பற்றி நினைத்தாலும் நெஞ்சு நோகிறது.'' — நான் விசனத்தில் மூழ்கினேன்.

அவள் சொன்னுள்: ''ஐயா, காலம் ஓடிக் கொண்டே இருக்கிறது. நான் இப்போதே போபால் போகப் போகிறேன். ஏன் தெரியுமா? எனக்கும் உங்களை விட்டு எங்கும் போகப் பிடிக்கவில்லை. அதனல் உங்களுக்கு முதல் குழந்தையாகப் பிறவி எடுக்கத் தீர்மானித்து விட்டேன். அதனல்தான் உங்களைத் திருமணத்துக்குத் தூண்டுகிறேன். நான் உங்களுக்குப் பெண்ணுகப் பிறக்கும்போது என்னை 'மீனா' என்றே பெயரிட்டு அழையுங்கள்.''

''மீனா! இது ரொம்ப விசித்திரம். பேய் பிசாசுபற்றி எத்தனையெத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறேன். அத்தனையும் பொல்லாப் பிசாசுகள்தாம். நீயோ பரம மதுரம், பரம சுந்தரம்.''

''இது அவரவர் வினைப் பயனைப் பொறுத்தது ஐயா. பொல்லாதவர்களாக வாழ்ந்த ஜனங்கள் ஆவியாக அலையும்போதும் கொடுமை செய்கிருர்கள். தருமத்தில் களித்து வாழ்ந்தவர்கள் ஆவியான பின் மக்களுக்குப் பணி புரிந்து உதவுகிருர்கள்.''

இருவரும் பேசாமலே நீண்ட நேரம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தோம்.

மௌனத்தைக் கலைத்து மீனா பேசினுள்—

அனந்த் இந்த இடத்தில் பழைய சிந்தனை கலைந்து புத்தம் புதிய பெண் குழந்தையை அன்பு கனியப் பார்த்துக் கொண்டே, மீனா அன்று சொன்ன வார்த்தைகளைத் திரும்பக் கூறினுன்:

''ஐயா, இதோ நான் போகிறேன். மீண்டும் இப்படி நான் வரவே மாட்டேன். ஆம், இனி உங்கள் புதல்வியாகத்தான் வருவேன். உங்கள் சீராட்டலைப் பெறுவேன். இந்த மீனாவை என்றும் மறவாதீர், ஐயா.''

பிரமீளாவைப் பார்த்துக் கேட்டான் அனந்த்: ''பிரமீளா! என் மீனாவிடம் நீயும் அன்பு செய்வாய் அல்லவா? நீ அன்பு செலுத்தாவிடினும் நான் அவளிடம் அன்பாகத்தான் இருப்பேன்.''

பிரமீளா குழந்தையை அன்பு வழியப் பார்த்தாள். ''இவள் என் மீனா மட்டும் இல்லையா என்ன?'' என்ருள். இப்படிச் சொல்லிக் கொண்டே ஒரே அன்பு மயமாக அக்குழந்தையை முத்தமிட்டாள்.

அனந்த் குழந்தை மீனாவிடம் நெருக்கமாகத் தன் முகத்தை வைத்துக் கொண்டு தந்தை — மகள் என்ற வாத்சல்ய பாவம் கொந்தளிக்க, ''மீனா, என் மீனா, என்னை விட்டு உன்னுல் எங்கும் திரிய முடியவில்லை அல்லவா?'' என்று கேட்டான்.

மீனா கண்ணை மூடிக் கொண்டாள். அவள் முகத்தில் ஓர் இன்னகை இழை விட்டது. பிரமீளாவுக்கும் அனந்துக்கும் தேன் சொரியும் இன்பக் கொடியாக இருந்தது அந்த இளநகை.

தமிழாக்கம்: ரா. கணபதி

பிளேடு தயாரிப்பு முறையில் ஓர் புதிய முன்னேற்றம்

உலகத்திலே சிறந்த பிளேடுகளை தயாரிப்பதில் கையாளப்படும் மிக நவீனமும் ரகசிய தொழில் நுணுக்கமுமான பிரத்யேக முறையான ''மல்டி பேஸட் கிரைண்டிங் ப்ராஸஸ்'' மூலமாக, முதன்முறையாக பனாமா ஒரு புதிய க்ஷவர பிளேடைத் தயாரித்து அளிக்கிறார்கள். அது மட்டும் அல்ல, உலகத்திலேயே வெகு சுகமாக க்ஷவரம் செய்யக் கூடியதும், நீண்ட நாள் நன்கு உழைக்கக்கூடிய பிளேடுகளின் இரு ஓரங்களில் மட்டுமே ரசாயன முறையில் பூசப்படும் உயர்ரக ரசாயனப் பொருளான ''ஹை டென்ஸிடி பாலி டெட்ரா ப்ளுரோ எதிலீன்'' என்னும் கலவைப் பொருள் இப்புதிய பிளேடின் இரு ஓரங்களிலும் பனாமா தொழில் நுணுக்க முறை மூலம் பூசப்பட்டு இருக்கிறது.



இருபது வயதுப் பருவம் அவனுடைய நரம்புகளை முறுக்கேற்றியது. பெண்மை பகமையாகத் தென்பட்ட போது. ஆசை கதகதப்பாக உடம்பெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. இப்படி நேர்வது அவனுக்கு முதல் தடவை அல்ல. இந்தக் கதகதப்பும் துடிதுடிப்பும் உடம்பெங்கும் ஓடிப்பரவ ஒரு கணம் கூடத் தேவைப்படுவதில்லை – இது தான் அவனுக்கு வேடிக்கை யாக இருந்தது.

உடல் பற்றிய விஷயம்... பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ஒரு மணி நேரம் சமாளித்து விட்டால் பசி உள்ளுக்குள் ளேயே அடங்கிப் போகி றது. குளிரில் விரல்களின் விறைப்பு...வெய்யில் சூட் டில் கால்கள் கொப்புளித் தல்...ரொம்ப நாளாகவே அவனுக்கு இவையெல்லாம் வியப்பைக் கொடுத்த விஷ யங்கள்...இவையெல்லாவற் றையும்விட இந்தக் கத கதப்பு காலோடு தலை இப் படி ஊடுருவிப் பாய்வது தான் அவனுக்கு மிகவும் வியப்பை அளித்தது.

ஒரு கணத்துக்கு முன் அவன் அவளை மனிதப் பிறவி யாகவே எண்ணவில்லை.

ரயில் நின்றும் நிற்காதது மாக, அவள் கதவைப் பற்றிக் கொண்டு தாவி ஏறினாள். இரண்டு உள்ளங் கைகளிலும் பலம் சேர்த்து அதை ஆதாரமாகக் கொண்டு ஊனக் கால்களை உந்தி மேலேறி வந்தாள். உன்னிப்பாகப் பார்த்தா லொழிய அவள் கட்டியிருந் தது புடவையா, பாவா டையா என்று கண்டு பிடிக்க முடியாது.

புழுதி படர்ந்து, ரயில் புகை படிந்து, ரயில் பெட்டியின் அழுக்கும் ஏறி – எல்லாமாகக் கலந்து அந்தப் புடவைக்கு ஒரு புது நிறம் ஏற்றியிருந்தன.

புடவையைவிட....ஊனக் கால்களைவிட....இரண்டு கைகளுக் கிடையே மினிர்ந்து கொண்டிருந்த உடற்பாங்கே கண் முன்னே வந்தது. இறுக்கமான சிவப்புப் பூப்போட்ட ரவிக்கை, இறுக் கம் தாள முடியாதபடி...கீழே நழுவி விழுந்துவிடும் போல...

மனிதப் பிறவியென்று, பெண் பிறப்பு என்று, பருவ வயதுக்காரி என்று கவனப்படுத்திக் கொள்வதற்கு முன்பே அவனுடைய நரம்புகள் முறுக்கேறி விட்டன.

''ஏன் அப்பிடிப் பார்க்கிறே ?''

அதிர்ந்து போனான் அவன் – கால்களின்மீது கைகளை ஊன் றிக் குனிந்தபடி, தன்னைத்தான் கேட்கிறாள் என்பதை அறிந்ததும்.

சேற்றுப்புறத்திலிருந்து வந்த கொழுத்த தவளையைப் போலிருந்தாள் அவள் !

''உன்னைத்தான்....'' என்றாள் மறுபடியும். அவள் குரலில்தான் என்ன இனிமை !

தெலுங்கு

அழிப்பு



என்ன சொல்ல? இதுவரையிலும் அவன் பார்த்துக் கொண்டிருந்ததென்ன? பதில் சொல்ல முயன்றபோது நாக்கு அண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. எப்படியோ அல்லற்பட்டு, ''ஒண்ணுமில்லே !'' என்றான்.

'களுக்'கென்று சிரித்தவள், ''நல்லா இருக்கு. கள்ளத்தனம்... சித்தே இரு. ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வர்றேன்'' என்றாள் ஊர்ந்தபடி.

அங்குமிங்கும் பார்த்தான்.

இந்தக் கதவிலிருந்து அந்தக் கதவுவரை எல்லாமே காலியாக இருந்தது.

அங்கே வானம் விரைந்தோடிக் கொண்டிருந்தது.

இங்கே மரங்கள், தந்திக் கம்பங்கள், விரைந்து கொண்டிருந்தன. அடியெடுத்து வைக்க முடியாதபடி வயிற்றில் பசி கிள்ளியது.

உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து பார்த்தபோது ரயில் பெட்டி ஒரு கரங்கத்தைப்போல் இருந்தது. கரங்கத்தின் ஓரத்தில் எத்தனையோ கால்கள் — முரட்டுத்தனமாக உருண்டு திரண்டு சில, மென்மையாய் நொய்ந்தவையாய்ச் சில, செருப்புடனிருந்தவை சில, செருப்பைப் போலவே இருந்தவை பல.

உரத்த குரலில் அவள் பாடினாள்.

தலை நிமிர்த்திப் பார்க்க வேண்டும் என்றே தோன்றவில்லை. கண்ணை மூடிக் கொண்டால் வயிற்றுப் பசி புரட்டி எடுத்தது. ரயிலேறுவதற்கு முன்பு, முந்தா நான் சாயந்திரம் சாப்பிட்டதுதான். பத்துப் பைசா ரொட்டிதான் — அதோடு சரி!

முந்தா நாள் ஏறி உட்கார்ந்தது இந்த ரயிலல்ல. இது மூன்றாவது. முதல் ரயிலிலிருந்து இறக்கி விட்டு விட்டார்கள். இரண்டாவதிலிருந்து அவனாகவே இறங்கிவிட்டான் ஆயாசம் வந்து. இப்போது மூன்றாவது ரயிலில் பயணம்....

இப்படியே எங்கே போவது, எதற்காகப் போவது என்று அவனுக்குப் புரியவில்லை. பல முறை இப்படி நினைத்தாயிற்று. இருபது வருட வாழ்க்கையில் இது அவனுக்குப் புது அநுபவம். ஏதேனும் ஓர் ஆசை அவனைச் சுற்றி எப்போதும் கவசமாக ஒட்டிக் கொண்டிருந்தது.





வி. ராஜாராம் மோகன்ராய்

● ஆந்திராவைச் சேர்ந்த ராஜமந்திரியில் 3 - 4 - 1946ல் பிறந்த திரு ராஜாராம் மோகன் ராய் தெலுங்கு இலக்கியத்துக்கு அணி சேர்க்கும் எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர். சிக்கந்திராபாத்தில் ரயில்வே இலாகாவில் பணி புரியும் இவர், தெலுங்குப் பத்திரிகைகளில் உள்ளத்தைத் தொடும் பல சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரது சில கதைகள் ஹிந்தியிலும், கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'கழிப்பு' என்னும் கதையில் உள்ளத்தை உரையாட விட்டிருக்கும் பான்மை பிரமிக்கத்தக்கதாயுள்ளது. ●

சின்னஞ் சிறு வயதில், மற்ற எல்லாக் குழந்தைகளையும் போலவே தானும் அழகழகாக ஆடை உடுத்த வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் தாய் தந்தையருடன் உல்லாசமாக நடந்து செல்வதைப்போல் தானும் நடக்க வேண்டும் என்றும் அவன் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அவையெல்லாம் தன்னைப் பொறுத்த வரையில் நடக்க முடியாதவை என்று பின்னர்தான் அவனுக்குத் தெரித்

தது. பசி....கண்ணில் தென்பட்டதையெல்லாம் அப்படியே விழுங்கிவிட வேண்டும் போலிருக்கும், வாழைக்காய் பஜ்ஜியிலிருந்து ஆப்பிள் பழம் வரை. பசி என்பது ஆசையின் பாற் பட்டதல்ல வென்று வயது வந்து அறிந்து கொண்ட போது அந்த ஆசை அவனை விட்டுச் சென்றது.

அந்தந்தப் பருவங்களுக்கு ஏற்ப ஏதேனும் ஓர் ஆசை வாழ்க்கையில் முளைவிடுகிறது. அதைக் கைவரப் பெறுவதில்தான் வாழ்க்கையோட்டம் அமைகிறது. ஆசையை நிறைவேற்றுவதில் கைகொடுப்பவர்கள் ஒரே மாதிரி வாழ்க்கைப் போக்கைக் கொண்டவர்கள்தாம்..... அம்மா, அப்பா அல்ல. தன்னுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ள ஆளில்லாதவர்கள், அப்படி யாரேனும் இருந்தாலும் அவர்களிடமிருந்து ஓடிவந்தவர்கள், தன்னந் தனியர்கள் —எல்லோரும் செய்வது ஒரே காரியத்தைத்தான். பசிக்குச் சோறு வேண்டிச் சம்பாதிப்பது, உறங்குவதற்கு உறைவிடம் தேடிக் கொள்வது — அதற்காக ஹோட்டலில் பாத்திரம் தேய்த்துக் கழுவினாலும் கடைவீதியில் 'பிக்பாக்கெட்' அடித்தாலும், எல்லாம் ஒரே ரகம்தான்.

அந்தப் பின்னணிதான் இப்போது அவனுக்குப் பெண்மையைப் பற்றித் தெரிந்து கொள்ளக் காரணமாக இருந்தது. இந்தக் கதகதப்பு... இந்தத் துடிப்பு.... இவையெல்லாம் —

''என்ன தூக்கம்?... இல்லாட்டி கனவு காண்றியா ?''

திறந்த கண்களுக்கு முன்னே அவள்தான். அலங்கோலமாக இருந்த புடவையைச் சரிப்படுத்திக் கொண்டாள். கையில் காக. ரவிக்கையின் ஒரு பக்கம் இறங்கிவிட்டிருந்தது. கழுத்துப் பகுதியில் வியர்வைத் துளிகள் மினுமினுத்தன.

'' இந்தா, இப்பிடிப் பாரு... எங்கேருந்து வர்றே ?'' என்று கேட்டாள் அவள்.

''பம்பாயிலிருந்து'' என்றான் அவன்.

''எங்கே போறே ?''

ஆமாம், எங்கே ? எங்கேயோ... எங்கே போனால் என்ன?.... அவனுக்கே பதில் தெரியாத கேள்வியை அல்லவா கேட்கிறாள் !

''அப்படின்னா சித்தம் போக்கு, சிவம் போக்குத்தானுக்கும்!'' என்றாள் பல் வரிசை தெரியும்படி சிரித்துக் கொண்டே.

''போகட்டும். என்னை மாதிரி நீ பொழைக்கக் கத்துக்கிட்டால் என்ன?'' என்றாள் சிரிப்பைத் தொடர்ந்து கொண்டே.

''நீ பொம்பிளை!'' என்றான். ஆம், விவரம் தெரிந்துதான் சொன்னான். வாழ்க்கையோட்டத்தில் பெண்ணுக்குள்ள சமூகச் சூழ்நிலை பருவ வயதில் ஆணுக்குக் கிடையாதென இருபது வயது அநுபவமே அவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது.

''ஆமா தெசந்தான். நான் பொம்பிளை... அதுவும் வயசுக்காரி'' என்றாள், 'கொல்' லென்று சிரித்துக் கொண்டே. அப்படிச் சிரித்தவண்ணமே தன் இரண்டு கைகளையும் அங்குமிங்குமாக அநாயாசமாக அலைவீசிக் கொண்டாள். அந்தச் சிரிப்பினால் கன்னத்தின் செழுமை தெரிந்தது. மார்பசைவும் இணைந்தது. அந்த அசைவில், சிரிப்பில் கர்வம் வெளிப்பட்டது — தனக்குப் பக்கபலமாக அமைந்த பெண்மை மீது, தன் மனைத்தையும் தாண்டிய சிலிர்ப்பின் மீது.

''எங்கேன்னு போய்க்கிட்டிருக்கிறே?'' என்று கேட்டாள் மீண்டும் சிரிப்பையெல்லாம் ஒதுக்கிவிட்டு.

தனக்கே தெரியாதபோது அவன் என்ன பதில் சொல்ல? திரும்பத் திரும்ப அதையே கேட்கிறாளே!

''எத்தினி நாளைக்கு இப்பிடி? எவளையாவது பார்த்துக்கிட்டா என்னவாம்? இந்த அலைச்சலை விட்டுட்டு ஒரு எடத்திலே கட்டைடையைப் போட வச்சிருவாளில்ல?'' என்றாள் அவளே தொடர்ந்து.

அந்தச் சொற்களில் ஆசை கனன்றது. புதிய வாழ்க்கை தனக்காக மின்னிடுவது போல் அவனுக்குத் தோன்றியது. அதே போக்கில் மின்னிட்ட கண்களால் அவளைப் பார்த்தான். — பசையின்றிப் பஞ்சு பறக்கும் தலை, பளபளக்கும் கண்கள்.

எங்கேயோ என்ன? அவனுக்கென்று யார் இருக்கிறார்கள்?... அவளுடன்... அவளுடனேயே இருந்து விட்டால் என்ன? — அவனுடைய தொண்டை வறண்டு உலர்ந்து விட்டது. வெளியில் சொல்லிவிடலாம் என்று எண்ணிய வார்த்தைகள் உள்ளேயே தேங்கிக் கடைசியில் கண்களில் சேர்ந்தன.

உள்ளே யிருந்து 'டக் டக்' என்று கால் ஒலி எழுப்பிக் கொண்டு வந்த யாரோ ஒருவன் அவர்கள் இருந்த திசையில் பார்த்தான். கறுப்பு பூட்ஸ், அவற்றைத் தழுவி அணைத்தபடி பச்சை வண்ணப் பாண்ட்... அந்தக் கால்கள் 'லட்ரின்' கதவைநோக்கிச்சென்றன.

மீண்டும் அவளை உற்றுப் பார்த்தான். அவளும் பார்த்தாள்.

''உன்னை... உன்னை மாதிரி இருக்கிறவங்களை... சூது வாது இல்லாம பார்க்கிற அந்தப் பார்வையைக் கண்டால் என்னவோ பண்ணணும்போல இருக்கு எனக்கு... பொம்பிளையா இருந்து நான் என்ன செய்ய முடியுமோ, அதெல்லாம் செய்யணும் போல இருக்கு'' என்றாள் தலையைக் குனிந்தபடி.

மீண்டும் கதவுப் பக்கத்திலிருந்து 'டக்டக்' ஒலியோடு அந்தப் பச்சைப் பாண்ட் வந்தது. கடந்து உள்ளே போய்விட்டது.

''பாரு... அந்த பூட்ஸ்காரன் எப்படி அலையறான் பாரு. அவனோட பார்வையைப் பார்த்தால் கால் ரூபா கொடுப்பான் போல் இருக்கு. ...அவன் எதுக்கு வர்றான்னு தெரியாதாக்கும்!... அவ்வளவு இலேசாகப் போச்சு அவனுகளுக்கு. அவ்வளவு லேசுதான்னு தெரிஞ்சும் நெஞ்சிலே திராணியில்லாமே திருட்டுப் பார்வை எதுக்கு? சோமாறிப் பசங்க... அவனோட பாண்டும் பூட்டும் பார்த்து நான் மயங்கிடுவேன்னு நெனச்சான் போலிருக்கு...''

உள்ளே எட்டிப் பார்த்தான்; பச்சைப் பாண்டுக்காரன் தென்படவில்லை.

''மறுபடியும் அவனே வருவான், அப்போ பாரு'' என்றாள் அந்தத் திக்கில் பார்த்துக்

குளோப் · பிராட்வே · மகாலக்ஷ்மி மற்றும்
தென்னாடெங்கும்

புரட்சி நடிகர் நடிக்கும்



கே. சி. பிலிம்ஸ்

குமரிக்கோட்டம்

ஈஸ்ட்மென்கலர்

டைரக்ஷன்
ப. நீலகண்டன்

தயாரிப்பு
கோவைசெழியன்

கொண்டிருந்த அவனுடைய கவனத்தைப் பற்றியிழுத்தபடி.

அப்புறம் அவனுடைய கைகளைப் பார்த்தாள். அவனுடைய கால்களைப் பார்த்தாள். கால் சட்டையை உற்றுப் பார்த்தாள்.

''என்ன இது, மூட்டை சுமக்கிறவன் மாதிரி கையும் காலும் முரடேறிப் போயிருக்கு?'' என்றாள்.

'ஆமாம்' என்றபடி தலையை ஆட்டினான்.

கண்களில் மின்னல் தேக்கி — அவனுடைய உடம்பைக் குறித்துப் புகழ்ந்துரைத்ததால் ஏற்பட்ட மிகை உணர்ச்சியை ஏற்றுக் கொண்ட அவனுடைய கண்களைத் தாக்குவது போல் அவள் சிரித்தாள். சிரித்துக்கொண்டே அவனுடைய உடம்பு முழுவதையும் பரிசீலித்துப் பார்த்தாள்.

அழுக்குப் படிந்த அவளது பார்வை ஸ்பரிசமே அவனை என்னவோ செய்தது. சொல்லிவிடவேண்டியதுதான் — உன்கூடவே இருக்கப் போகிறேன்; ரயில் நின்றதும் உன் கூடவே இறங்கிடப் போறன் என்று! இப்படி எண்ணிச் சொல்லிவிடத் துடித்தானே ஒழிய வார்த்தைகள் உள்ளேயே அமுங்கிப்போயின.

அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

நினைத்ததைச் சொல்லிவிட மீண்டும் முயன்றான் அவன். கதவை யாரோ தள்ளினார்கள். ஸ்டேஷன் போலிருக்கிறது... யாரோ ஏறினார்கள். இருவருக்கும் இடையிலாகச் சில கால்கள் கடந்து சென்றன. உள்ளே எந்தப் பரபரப்பும் இல்லாமல் வயிறு நிரம்பியிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

ரயில் நகர்ந்தது... மீண்டும் சலனம்...

''அடியே, நீ இதிலேதான் இருக்கியா?'' தலை நிமிர்த்திப் பார்த்தான் அவன். —முப்பது வயது இருக்கும், ஒருவன் கையில் பட்டாணிக் கடலைக் கூடையோடு நின்றிருந்தான்.

''எப்படி இருக்கே?'' என்றான் கதவுப் பக்கமாக வந்தபடி.

''நல்லாத்தான் இருக்கேன்'' என்றாள் அவள். அவள் வேண்டா வெறுப்பாகப் பதில் சொல்வது போல் அவனுக்குத் தோன்றியது.

''என்னடி ரொம்பச் சலிச்சுக்கிறே..... உ...க்கூம்'' என்றான் பட்டாணிக் கூடையுடன் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடி.

''உங்கப்பன் கிழவன் எப்படி இருக்கான்? நல்லா இருக்கானா?'' என்று பேச்சைத் தொடர்ந்தான், அவளுடைய கையில் ஒரு பிடி பட்டாணியைக் கொடுத்தபடி.

''என்னவோ இருக்கு.. அந்த இருமல் ஓயறதாத் தெரியலே... இருமி இருமி என்னை சாகடிச்சுடும் போலே!''

''என்னமாவது மருந்து குடுத்தியா?''

''அதுக்கு மருந்து மாயம் எதுக்கு? குடிக்கிற கள்ளுக்குத் தினமும் காசு குடுத்தாப்போதும். அதுக்குக்கூட நான் வக்கில்லாதவளாயிட்டேன்... நேத்து அதுக்குக் கஞ்சிகூடக் காய்ச்சிக் குடுக்கலே...''

இடைவிடாமல் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டேயிருந்தார்கள். அவன் இருந்த பக்கம் அவர்கள் இருவரும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பட்டாணியைக் கொறித்தபடி அவனுடன் பேசவிலேயே அவள் முனைந்திருந்தாள்.

தான் இங்கிருப்பதே அவளுக்கு மறந்துவிட்டதோ என்று அவனுக்குத் தோன்றியது. ரயில் வெகு தூரம் கடந்திருக்கும் போலிருந்தது. வயிற்றுக்குள் ஏதோ புரட்டுவதுபோல் இருந்தது.

''சீ, பாழாய்ப் போன பசி!'' என்று உள்ளூற எண்ணிக் கொண்டான். அது பசி இல்லையென்று அவனுக்கே தெரியும்; எதனால் அந்தச் சுழிப்பு என்றும் அவனுக்குத் தெரியும். ஆனால் நேரடி உண்மையைப் புலப்படுத்திக் கொள்ள விருப்பமில்லை.

ஆம், தான் யார்? என்ன உறவு? எதற்காக இந்த வேதனை?... போகட்டும்... இருபது வயதில் எத்தனையோ பேருக்கு இந்த அநுபவம்.....

'களுக்'கென்று சிரித்தாள் அவள். இவன் விதிர்ப்படைந்தான். பார்க்கக் கூடாதென்று எண்ணிக் கொண்டே பார்த்தான்.

இதுவரை தன்னுடன் சிரித்துக் கொண்டிருந்தது போலவே பட்டாணிக் கூடைக்காரனைப் பார்த்தும் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் அப்போதிருந்த மின்னல் கிளர்ச்சி இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

''உனக்காக நாலு நாளா ஒவ்வொரு வண்டியாத் தேடிக்கிட்டிருக்கேன், தெரியுமா?'' என்றான் பட்டாணியைத் துளாவியபடி.

''எதுக்காகவாம்?'' என்றாள் கடைக்கண்ணோட்டமாக, உதட்டைக் கடித்தபடி.

''எதுக்குன்னு கேட்டா...?'' என்று திருப்பிக் கேட்டான் அவன் — இந்தத் தடவை பட்டாணியை விரல்களால் பிசைந்தபடி.

'' மறுபடியும் அப்பனுக்குக் கஞ்சி.... மருந்து...'' என்றாள் ஒருக்களித்தபடியே.

''எனக்குத் தெரியாதாக்கும்?... ரெண்டு போதுமா?'' என்று கேட்டான்.

அவள் சிரித்தாள்.

ரயில் நின்றது.

பட்டாணிக் கூடையுடன் அவன் இறங்கினான். அவளும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள் முன் கைகளில் பலத்தைத் தேக்கி, ஒரு தாவு... கம்பார்ட்மெண்ட் கதவு... மற்றொரு தாவு... பிளாட்பாரம்.

அவள் இறங்கிப் போய்விட்டாள்.

இவன் கதவுப்பக்கமாக வந்தான்.

அவள் இறங்கிப் போகும்போது அவனைச் சற்றே தலை திரும்பிப் பார்த்தாள்.

அப்படியே அசைவற்றுக் கதவருகிலேயே நின்றிருந்தான் இவன்.

ரயில் நகர்ந்தது.

ஒரு தடவை.... ஒரு தடவை போதும்... பின் பக்கம் திரும்பி ''இறங்கு'' என்று அவள் கையைக் காட்டினால் போதும்....

பிளாட்பாரத்தில் குதித்து விடலாமா வென்று அவனுக்குத் தோன்றியது. எவ்வளவு நேரமானாலும், எத்தனை நாட்களானாலும், தான் திரும்பி வரும்வரை அவள் எதிர்பார்த்துக் காத்திருப்பாள் என்று தோன்றியது அவனுக்கு.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை. தாவித் தாவிக் கடந்து போனான். பிளாட்பாரத்தை ரயில் கடக்கும் வரையில் கதவுப் பக்கத்திலேயே அவன் ஆசை தேக்கி நின்றிருந்தான்.

தமிழாக்கம்: இளம்பாரதி

மாலினியும் மின்னியையும் பார்த்தால் தாயும் மகளும் என்றே யாருக்கும் சொல்லத் தோன்றது. போகும் இடங்களில் எல்லாம் மக்கள் அவர்களை அக்காள் – தங்கை என்றே எண்ணி வந்தார்கள். மின்னி ஓர் அங்குலம் உயரம், தன் தாயாரைக் காட்டிலும்.....

'அடியே, மாலின்! உன் மகளிடம் எப்படி இளமை கொழிக்கிறது! அள்ள அள்ளக் குறை யாத அழகு மெருகிடுகிறது!' என்று கூறி அக்கம் பக்கத்துப் பெண்டிர்கள் மின்னியின் அழகைப் பார்த்துப் பார்த்து மாய்ந்து போவார்கள்; அழகுப் பசி தீர முயல்வார்கள். ஆனல் என்ன முயன்றும் அவர்கள் பசிதான் தீருவதில்லை. மின்னி பார்ப்பதற்கு ஒரு நன் முத்து. அழகுக்கேற்ற அடக்கம், ஒடுக்கம்! மாலின் தன் மகளின் முகத்தை நோக்கு வாள். அவளுக்குத் தானேதான் அவளோ என்று தோன்றும். ஆம், மகள் தாயை அப்படி உரித்து வைத்திருந்தாள், ஒரே அச்சில் வார்த்தாற்போல. மாலினும் தான் என்ன, அன்றலர்ந்த மேனியாகக் கடுகளவும் கட்டுக் குலையாமல் இருந்தாள். நாளுக்கு நாள் அவள் மெருகு கூடியதே ஒழியக் குறையவில்லை. இன்றைக்கும் – ஆமாம் இன்றைக்கும்கூடத் தான் அவளுக்காக எவனே ஒருவன், உருது காதற் காவியங்களிலே வருவதுபோல மலைவெட்டிக் கால்வாய் தோண்டிக் காத்திருந்தான்; ஏழு கடல்களை நீந்தித் தாண்டி அவளை அடையத் துடியா யிருந்தான்.

யார் அவன்? இன்றைக்கு எதற்காக அவன் நினைவு அவளுக்கு வர வேண்டும்? ஏனே தெரியவில்லை. வேண்டாமென்றாலும் அன்று அவனது நினைவு மீண்டும் மீண்டும் வந்தது. அவன் ஒரு முத்து வியாபாரி!

அவன் நினைவு வந்தால் வந்து விட்டுப் போகட்டும், அதற்காக இன்று அவள் கண்ணிமைகள் நீரில்





பஞ்சாபி




ராவல்பிண்டிக்கருகே தம்யால் கிராமத்தில் 1-3-1917ம் ஆண்டு பிறந்த கர்த்தார் சிங் துக்கல் பஞ்சாப் சர்வகலாசாலேயின் எம். ஏ. பட்டதாரி. பஞ்சாப் நாடோடி இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு ஆராய்ச்சிகள் பல புரிந்திருக்கிறர். அகில இந்திய ரேடியோவிலும் பணியாற்றி யிருக்கும் இவர் பஞ்சாபி மொழியில் பதினறு தொகுதி சிறுகதைகளும், ஆறு நாவல் களும் ஆறு நாடகங்களும் எழுதி இலக்கியத்துக்கு வளம் கூட்டியிருக்கிறர். 1965ல் பஞ்சாபி மொழியில் இவர் எழுதிய 'இக்கித் சாளன் நீ' என்ற சிறுகதைத் தொகுதி சாஹித்ய அகாதெமியின் பரிசு பெற்றது. இப்பொழுது இவர் தேசிய புத்தக நிறுவனத்தின் காரியதரிசியாகப் பணியாற்றி வருகிறர்.

'தண்ணிலவிலே துயர நாடகம்' என்னும் இவரது சிறுகதை, எப்படி ஒரு புதிர் போட்டு, அதை அவிழ்க்கிறது, படிப்பவர்களையும் பெருமூச்சுவிடச் செய்கிறது, பாருங்கள்!

மிதப்பானேன்? அவள் மகள் இப்பொழுது சிறுமியல்ல; பெரியவள்; பருவம் வந்தவள். இனி அதெல்லாம் அவளுக்கு அழகு தராது. ஆயுள் முழுவதும் அவள் வெகு ஜாக்கிரதையாக இருந்து வந்திருக்கிறாள். இன்றைக்கு இதென்ன இவ்வளவு நினைவு அலைகள், அவளை இப்படி அலைபாய வைக்கின்றன? அவற்றுக்கு இடம் கொடுக்கக் கூடாது; கூடவே கூடாது. அடுத்த வாரம் மின்னிக்கு — அவள் மகளுக்குத் திருமணம்! எனவே, இத்தகைய எண்ணங்கள் எல்லாம் கூடாது, கூடாது; கூடாது!

'என் அன்பின் வடிவமே! நெஞ்சில் நீக்கமற நிறை தெய்வமே!'

நேற்றுக்கூட அவன் ஒரு கடிதம் எழுதியிருந்தான். ஒவ்வொரு முறையும்



தண்ணிலவில் துயர நாடகம்

கர்த்தார் ஸிங் துக்கல்

அவன் வருவான்; வந்தவனை வந்தபடியே அவள் திருப்பியனுப்பி விடுவாள். கண்களை இறுக மூடிக் கொண்டு வீட்டுக் கதவையும் அறைந்து சாத்தி விடுவாள். ஆனால் அவன்....? ஒரு கணமும் மாலினை மறந்து அறியான். மாலின் அவனது உயிர். ஆம்; உயிருக்கு உயிர். அவள் இல்லாத எந்தக் கணமும் அவனுக்கு இன்பம் பயக்கவில்லை. அவளை எதிர்நோக்கி எதிர்நோக்கி அவன் ஆயுள் முழுவதையுமே ஓட்டி விட்டான். பொறுமிப் பொறுமி, துடித்துத் துடித்து, விசித்து விசித்து, அவனது ஆயுள் முழுவதுமே எப்படி ஓடிவிட்டது?

மாலினின் மனத்திலும் ஒரு நிறைவு நிழலாடும். 'இன்று இரவு அவன் கட்டாயம் வருவான்!' என்று எண்ணுவாள். இளம் பனிக் காலத்து முழுமதி தண்ணிலவு பொருக்கும் நாளன்று இரவு அவன் அவள் வீட்டு வாசற் கதவைத் தட்டத் தவறுவதில்லை; மறப்பதும் இல்லை. பல ஆண்டுகளாக அவன் விடாமல் செய்து வரும் காரியம் அது. ஆனால் என்றைக்குமே அவள் அவனுக்குத் தன் இல்லக் கதவைத் திறந்ததில்லை.

இந்த நினைவின் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்கு முந்திய ஓர் இளம் பனிக் காலத்து முழுமதி இரவு மாலினின் நினைவில் தோன்றியது. அன்று அவள் மாந்தோப்பில் ஆனந்தமாக ஆடிப் பாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய தாவணியின் தலைப்பு அவனது கைகளில் சுற்றிக் கொண்டது. அந்த வேகத்தில் முகத் திரை விலகவே, அவள் நாணத்தினால் கூனிக் குறுகி விட்டாள். அவன் தாவணியைத் தன் கையால் அவளது தோளில் போர்த்தினான்.

அட, இதென்ன இது? இன்று அவன் இல்லாமலே அவளது தாவணி தோளில் சரிந்து விட்டதே! மாலின் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை நாணம் கமழ நின்றாள்.

எதிரே தெருவில் மின்னி வந்து கொண்டிருந்தாள். நெட்டிலிங்க மரம் போன்று நிமிர்ந்த மேனி! உயரம், உயரத்துக்கேற்ற பருமன். இரண்டுக்கும் ஏற்ற சிவப்பு. கை பட்டால் கசங்கிவிடுமோ என்று எண்ணும் படியான பூவுடல்! தாவணியின் தலைப்பு முகத்தையும் தலையையும் மறைக்க, கண்கள் கீழே நோக்க நடந்து வந்து கொண்டிருந்தாள்! யாரும் அவள் உரக்கப் பேசிக் கேட்ட

இந்த வாசகங்கள் எங்கே இருக்கின்றன ?

1. ''உனக்காக நீ அல்ல; மக்களுக்காக நீ ஆவாய்''

2. ''காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது.''

3. ''கழகம் பார்வையாளர்களுக்காக இல்லை; தயவுசெய்து எங்களுக்குத் தொல்லை தரா தீர்கள்.''

4. ''வேலை வணங்குவதே வேலை''

(விடை: 79-ம் பக்கம்)

இல்லை. கோயிலிலிருந்து திரும்பி வந்ததும் வராததுமாக, ''அம்மா! அப்பா இன்னும் வரவில்லையே!'' என்று தன் தாயாரிடம் கேட்டாள்.

''உன் அப்பா இன்று வரமாட்டார்.....! நாளைக்கு வந்தால்கூடப் பெரிதுதான். எத்தனை ஜவுளி, எத்தனை மளிகை எடுத்தாக வேண்டியிருக்கிறது, தெரியுமா? கல்யாணம் கார்த்திகைகளுக்கு வாங்குகிற சாமான்கள் மிச்சப் பட்டாலும் படலாமே ஒழியக் குறைந்துவிடக் கூடாது. குறைந்து விட்டால் பல தொல்லைகள்!'' மாலின் தன் மகளுக்கு விஷயத்தை விளக்கிக் கொண்டிருந்தாள். மின்னி அடுப்பங்கரை வேலைக்குப் போவதற்கு முன்னால் மெதுவாகத் தாயார் அருகே வந்தாள். தன் ஜிகினா வைத்துத் தைத்த தாவணியைத் தாயாரின் தோள்களில் போட்டுவிட்டு அவளுடைய சாதாரண துப் பட்டாவை எடுத்துக் சென்றாள். தனது பட்டுத் துணி அழுக்காகி விடக் கூடாதே என்ற கவலை. இருக்காதா பின்னே? அந்தப் பட்டுத் தாவணியில்தான் அவள் எத்தனை நுட்பமான பூவேலைகள் செய்திருந்தாள்!

மாலை மயங்கிக் கொண்டிருந்தது. இலேசாக இருள் படர்ந்து கொண்டிருந்தது. முற்றத்தில் தனியாக இயந்திரம் பிடித்து உட்கார்ந்திருந்த மாலின் கற்பனையில் மிதக்கலானாள்!

நான்கு நாட்கள்தான் இன்னும் இருக்கின்றன. அவள் வீட்டு முற்றத்தில் பாட்டும் கூத்துமாகக் களைகட்டிவிடும். மின்னிக்கு மருதாணி இட்டுச் செம்பஞ்சிக் குழம்பு பூசி எல்லோரும் பாடி மகிழ்வார்கள். மின்னி மணப்பெண் ஆவாள்.

தலையிலிருந்து கால்வரை நகைகள் பூண்டு சிவப்பு நிற ஆடை மின்ன எழிற் கன்னியாகக் காட்சி தருவாள்! மணமகன் குதிரை மீதேறி மலர்ச் சரங்களில் முகம் மறைத்து இதழ்கள் பூநகைபுரிய வருவான். அவளைப் பல்லக்கில் ஏற்றித் தன் இல்லத்துக்கு — எட்டடுக்கு மாளிகைக்கு இட்டுச் செல்வான். அவள் உள்ளங்கைகளை முத்தமிட்டு முத்தமிட்டு மருதாணி நிறம் அத்தனையையும் பருகி விடுவான்.

இப்பொழுதுதான் நேற்று நடந்தாற்போல் இருந்தது. — மாலினின் நினைவு தொடர்ந்தது: அவளும் மருதாணி இட்டுக் கொண்டு புக்ககம் சென்றாளே, அப்பொழுது மின்னியின் தந்தை ஒரு முறையாவது அவள் உள்ளங்கைகளைத் தூக்கித் தன் உதடுகளுக்கு எடுத்துச் சென்று முத்தமிட்டிருப்பாரா? அவள் கைகளை எடுத்துக் கண்களில்தான் ஒற்றிக் கொண்டிருப்பாரா?

அலுத்துச் சலித்துப் போய் வேலையிலிருந்து வீடு திரும்புவார்; உணவு அருந்துவார்; அப்புறம் படுத்துத் தூங்கி விடுவார். ஆஸ்திக்கு ஒரு மகன் வேண்டும் என்ற ஆசையில் சிற்சில சமயம் அவருக்கு விழிப்புக் கொடுக்கும். அந்த நேரம் பார்த்து, வெகு சிரமப்பட்டு நட்சத்திரங்களை எண்ணி எண்ணிப்பார்த்து அயர்ந்து போய் மாலின் கண் அயர்ந்திருப்பாள். அது முதற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும்—இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அவர்கள் வீட்டில் ஒரு பெண் தோன்றுவாள்! யார் பெண் வேண்டுமென்று தவங் கிடந்தார்கள்? வேண்டாத பெண்கள்! தானாக வருவார்கள், தானாகப் போயும் விடுவார்கள். ஒரு பெண்ணாவது தங்கவில்லை. மின்னி ஒருத்திதான் மிஞ்சினாள், ஆசைக்கு ஒரு பெண்ணாக. பெரிய கரிய வண்டு விழிகள்! மாலினின் விழிகளேதான்! சிவந்த கன்னங்களுக்குக் கீழே அழகாக ஒரு மச்சம்! அதுவும் மாலினின் மச்சம்தான்! முழங்கால் அளவுக்கு நீண்ட கேசங்கள்! அவையும் மாலினுடைய கேசங்கள்தான்!

தனது வாழ்வின் பசி அனைத்தும், மகள் உருவில் மறுவாழ்வு பெற்று விட்டதாகத் தோன்றும் மாலினுக்கு! பௌர்ணமி இரவு வந்து விட்டால் மாலினால் எதுவுமே சாப்பிட முடிவதில்லை.

மின்னி அடுப்பங்கரை வேலையை முடித்துக் கொண்டு, கதவுகளை யெல்லாம் தாளிட்டுக் கொண்டுவந்து தன் அறையில் படுத்து உறங்கி விட்டாள். குளிர்ந்த இரவு! இன்னும் வெடவெடக்கும் குளிர் வரவில்லை. இலேசான குளிர். இதமான குளிர். முழுமதி இரவு, தனிமையான வீட்டு முற்றம்! — மாலின் எண்ணிப் பார்த்தாள். அவள் ஏன் அப்படி உட்கார்ந்திருக்கிறாள்? மின்னியோ உள்ளே தூங்கி விட்டாள். மின்னியின் அப்பா இன்றைக் கென்று நான் பார்த்து எதற்காக நகரத்துக்குப் போனார்? பௌர்ணமி இரவு அன்று அவள் தன்னைக் கட்டிப் போட்டுக் கட்டிப் போட்டு வாழ்ந்து வந்தாள். மாலின் ஜிகினா வேலை செய்த மின்னியின் தாவணியினால் தன் முகத்தையும் தலையையும் மூடிக் கொண்டாள். நிலவின் ஒளியில் ஜிகினாப் பொட்டுக்கள் பளபளத்தன. வானத்து நட்சத்திரங்களே இறங்கி வந்து அவள் தலையில் மின்னுகிறாற் போலத் தோன்றியது; கன்னங்களிலும் தோள் பட்டைகளிலும் வந்து விளையாடுகிறாற்போலப்பட்டது. எதிரே மாந்தோப்பில் ஏதோ ஒரு பறவை உட்கார்ந்து இனிய குரல் எடுத்துக் கூவிற்று: 'ஹூக், ஹூக், ஹூக்!' அதன் அந்தக் குரலில்தான் என்ன ஏக்கம்!

இன்றைக்கென்ன, என்ன என்னவோ எண்ணங்களில் அவள் மிதந்து கொண்டே இருக்கிறாள்! தனிமை ஒரு காரணமாக இருக்குமோ? அவள் தனியாக எங்கே இருந்தாள்? அவளுடைய வயது வந்த பெண் மின்னிதான் உள்ளே படுத்து உறங்கிக் கொண்டிருந்தாளே! அடுத்த வாரம் மின்னிக்குத்

திருமணம்! இன்னும் ஏழே நாட்கள்தான் பாக்கி. அப்புறம்? இத்தனை பெரிய வீட்டில் அவள் மட்டும்தான் தனியாக இருக்க வேண்டும். மாலினின் உடல் முழுவதையும் என்னவோ செய்தது. மின்னிக்கு அப்பாவின் வாழ்க்கை முழுவதுமே வட்டி — வியாபாரம் என்று ஓடிவிட்டது. மாலையில்தான் ஆய்ந்து ஓய்ந்து வீடு திரும்புவார். சோர்ந்து போய்த் தம் கட்டிலில் சவமாகக் காலைநீட்டி விடுவார். எத்தனையோ முறைகள் அவள், 'எதற்காக இத்தனை தொல்லைகளைத் தலையில் போட்டுக் கொள்ளுகிறீர்கள்?' என்றுகூடக் கேட்டிருக்கிறாள்.

மாலின் ஒரு கணத்துக்கு உள்ளே போனாள். மின்னி நிசமாகவே தூங்கிப் போயிருந்தாள். வினையறியாத இளமைத் தூக்கத்தில் தன் நிலை — நினைவு மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். சிவப்பு வளையல்களைக் கழற்றித் தலைமாட்டில் வைத்துக் கொண்டு அவள் தூங்கியிருந்தாள். வளையல்களை எப்படி வைத்திருக்கிறாள்? புரண்டு படுத்தால் நறநறவென்று உடைந்து விடுமே! வளையல்களை எடுத்து மாடத்தில் வைக்க நினைத்தாள் மாலின். மாடத்தில் வைப்பதற்காக வளையல்களைக் கையில் எடுத்துக் கொண்டவள், அப்படியே தன் கைகளில் போட்டுக் கொண்டாள். கைக்கு ஆறு வீதம் அடுக்கிக் கொண்டாள். பளபளவென்று மின்னின வளையல்கள். நேற்றைக்குத்தான் தெருவில் வளையல்காரன் வந்த பொழுது மின்னி கையொன்றுக்கு ஆறாக அடுக்கிக் கொண்டாள்.

மாலின் வெளியே முற்றத்துக்கு வந்தாள். ஜிகினாப் பொட்டுப் பளபளக்கும் பட்டுத் தாவணி தலையிலும், செக்கச் சிவந்த வளையல்கள் கைகளிலுமாக வெண்ணிலவில் வந்து நின்றாள். உடலின் ஒவ்வோர் அவயவமும் முறுக்கிக் கொள்ளுகிறாற் போலத் தோன்றியது மாலினுக்கு.

அந்த நேரம் பார்த்து அவள் வீட்டு வாசற் கதவை யாரோ தட்டினார்கள் — அவன் தான், ஆம், அவனேதான்! அச்சத்தோடு, வெட்கத்தோடு மெதுவாக தட்டினான் அவன்! ஆம், அவனேதான்! அவன் தன் கடிதத்தில் எழுதியபடி சொன்ன நேரத்துக்கு வந்து விட்டான். '' இளம் பனிக் காலத்துப் பௌர்ணமி நிலவில் நான் உன் வீட்டுக் கதவைத் தட்டுவேன். உனக்கு இஷ்டமிருந்தால் திற, இல்லாவிட்டால் திறக்க வேண்டாம். ஆனால் என்றாவது ஒரு நாள் உன் மனம் இரங்கும் என்ற நம்பிக்கையில் உன் வீட்டுக் கதவைப் பௌர்ணமி இரவுகளில் தட்டும் உரிமையை மட்டும் வழக்கம் போல் நான் வைத்துக் கொண்டிருக்கிறேன்!' சொன்னபடியே தட்டியும் விட்டான்.

மாலினின் கால்கள் அவளையும் மீறி அவள் மனத்தையும் மீறி வாசற்புறம் சென்றன; நடுங்கும் கைகள் மெதுவாகக் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து விட்டன. அடுத்த கணம் தன்னை அணைக்கத் துடிக்கும் கரங்களில் அவள் தன் நிலை மறந்து சாய்ந்து விட்டாள். கடந்த இருபது ஆண்டுகளாக அவள் தனக்குத் தானே விதித்துக் கொண்டிருந்த கட்டுப்பாடும் உறுதியும் தளர்ந்து விட்டன; அணை உடைந்து பெருகினாற்போல. பூனிதழ் சுழற்காற்றில் சிக்கிக் கொண்டாற்போல! அவள் நிலை தடுமாறித் தத்தளித்தாள்.

ஆம், மாலினுக்குத் தெரியவே இல்லை, என்ன செய்கிறோம் என்று! வீட்டு வாசற்படியை விட்டு இறங்கியவள் எப்பொழுது எப்படி கிராமத்துக்கு வெளியே யிருந்த ஆலமரத்தடிக்கு அவனோடு போனாள், எத்தனை நேரம் அங்கு நின்றாள் என்பது தெரியாது. ஆலமரத்தை ஒட்டினாற்போலிருந்த வயல்களில் எப்பொழுது அவர்கள் இறங்கினார்கள், எத்தனை நேரம் அங்கு மறைந்திருந்தார்கள் என்பதும் அவளுக்குத் தெரியாது. விடியற்காலையில் இருள் பிரிவதற்கு முன்பாகச் சாலைக்கு அப்பால் வண்டி கூவிக் கொண்டு போன பொழுதுதான் அவளுடைய கண் இமைகள் திறந்தன. மாலின் மெதுவாக அவனுடைய கரங்களிலிருந்து விடுபட்டு, தலை முகத்தை மூடி மறைத்துக் கொண்டு வேகம் வேகமாகத் தன் வீட்டை அடைந்தாள்.

வளையல்களைக் கழற்றி அவள் பழையபடியே மின்னியின் தலைமாட்டில் வைத்து விட்டாள். அவளுடைய பட்டுத் தாவணியை அவளுடைய கட்டிலில் போட்டாள். பிறகு தனது துப்பட்டாவை எடுத்துக் கொண்டு எதிரிலிருந்த படுக்கையில் போய்ப் படுத்தாள். தன் கட்டிலில் படுத்ததும் மாலினுக்கு தன்னையறியாமல் தூக்கம் கண்களை சுற்றிக் கொண்டு வந்தது. பொதுவாக அவளுக்கு இப்படித் தூக்கம் வந்ததே கிடையாது. வாழ்க்கை முழுவதும் இரவு கண் விழித்தவள் போல உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

வெய்யில் நன்றாக ஏறியபின்னரே அவளுக்குத் தூக்கம் கலைந்தது.

''சின்னக் குழந்தைகளைப் போல என்னம்மா இன்றைக்கு இத்தனை தூக்கம்?'' என்று மின்னிகூடக் கேலி செய்தாள்.

வயது வந்த பெண்! அம்மாவுக்கு முன்பு எழுந்து வாசல் தெளித்து வீடு பெருக்கி மெழுகித் தீற்றி முடித்து விட்டாள். அடுப்புக் காரியங்களையும் முடித்துக் கொண்டு, குளித்து உடுத்திக் கோவிலுக்கும் புறப்பட்டாள். முத்துப்போன்ற பூ மொட்டுக்களைத் தனது இஷ்ட தெய்வத்துக்குச் சாற்றுவதற்காகத் தாவணித் தலைப்பில் கட்டி எடுத்துக் கொண்டாள்.

மின்னி பார்வையிலிருந்து மறைந்தாள். மாலின் சோம்பல் முறித்துக் கொண்டு, லட்சம் கனவுகளைக் கண்களில் தேக்கிக் கொண்டு எதிரே இருந்த முற்றத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். இனிமையான கீழ்க் காற்று வீசிக் கொண்டிருந்தது. இளம் வெய்யில் எதிர்க் கூரையிலிருந்து தாழ்வாரத்தில் இறங்கிக் கொண்டிருந்தது. அக்கம் பக்கமே ஒரு மோன மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாற் போலத் தோன்றியது மாலினுக்கு.

''ஏண்டி மாலின்! எங்கேடி உன் அடிமாண்டு போன பெண்?'' — திடீரென்று யாரோ வந்து ஓங்கி அறைந்தாற் போலிருந்தது மாலினுக்கு. மாலினுக்கு மேல் மூச்சு மேலேயும் கீழ் மூச்சு கீழேயும் நின்றுவிட்டன.

''இப்படி ஒரு தீய செயலை யாரும் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. இன்னும் நாலு நாட்கள்தான் இருக்கின்றன, திருமணத்துக்கு. அதற்குள் இப்படியா காரியம்

விடை :

1. எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகம்.
2. முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் வீட்டில்.
3. விஞ்ஞான மேதை சி. வி. ராமன் அவர்களின் விஞ்ஞானக் கழக வாசலில்.
4. திரு. கிருபானந்தவாரியார் அவர்கள் உபயோகப்படுத்தும், அஞ்சல் அட்டையில்.






—திரட்டியவர்: பி. வி. கிரி

செய்யும் ஒரு பெண்?'' பக்கத்து வீட்டுக்காரி லாஜோ கைகளைத் தேய்த்துச் சூடேற்றிக் கொண்டே மாலினுக்கு அருகில் வந்து அமர்ந்தாள்.

''என்னடி ஆச்சு, என் பெண்ணுக்கு? அவள் சாதுப் பசுடி !'' மாலின் பொங்கி வரும் கோபத்தில் அவளைக் கடித்து விடுவாள் போலிருந்தது.

''உன்னுடைய பசுப் போன்ற சாதுப் பெண்தான் நேற்று இரவு முழுவதும் முகத்தில் கரி தீற்றிக் கொள்ளும்படியான ஒரு காரியத்தைச் சிறிதும் அச்சமின்றிச் செய்து கொண்டிருந்தாள் !''

மாலின் இச்சொற்களைக் கேட்டதும் உயிரே உலர்ந்துவிட்டவன் போலானான். வெட்டினாலும் இரத்தம் வராது — அப்படி மரத்து விட்டது அவனுக்கு ! அவன் உடல் நீலம் பாய்ந்து வெளிறி விட்டது. அங்கங்கள் அனைத்தும் முறுக்கிப் பிழிந்து விட்டாற் போலாகி விட்டன.

''இருட்டி ஒரு சாமத்துக்கெல்லாம் உன் பெண் யாரோ ஒரு காளியுடன் வெளியே சுற்றப் புறப்பட்டுவிட்டாள். இரவு முழுவதும் உன் வீட்டு வாசற்கதவு திறந்தது திறந்தபடி கிடந்தது. நான் எனது இந்தக் கண்களாலேயே பார்த்தேன். வாசலுக்கு வெளியே இவள் யாருடைய கைகளிலோ துவண்டு கிடந்தாள். நான் வாசலில் மயிர் எறிய வந்தேன். இதைக் கண்டதும் கதவை ஒருக்களித்துச் சாத்தி விட்டுப் பார்த்தேன். இருவரும் மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைத்து, கைகளோடு கைகள் இணைத்து வயற்காட்டை நோக்கிச் சென்றுவிட்டார்கள். இரவு முழுவதும் எனக்கு அப்புறம் தூக்கமே வரவில்லை ! பெண்கள் என்றால் ஊரில் உள்ளவர்கள் அனைவருக்குமே ஒரு பங்கு உண்டு, பொறுப்பு உண்டு. இதுமாதிரி இதற்கு முன்னால் யாருமே அப்பா—அம்மாவின் முகத்தில் கரியைப் பூசியதில்லை. இப்படி யாருமே குடும்பத்துப் பெரியவர்களின் மானத்தைக் காற்றில் பறக்கவிட்டதும் இல்லை; மண்ணோடு மண்ணாக்கியதும் இல்லை. நாம் இனி முகத்தை வெளியே காட்டுவதற்குத் தகுந்தவர்களே இல்லை'' லாஜோவுக்குக் கண்ணீர் ஆறுகப் பெருகி அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது.

மாலின் கல்லாகச் சமைந்து விட்டாள். அவளுக்கு எதுவுமே செவிகளில் விழவில்லை.

லாஜோ இப்படிப் பல முறை ஒப்பாரி வைத்துவிட்டு, இப்படி வாசற்புறமாகப் போய் இருப்பாள், கிராமத்துத் தலையாரி ஜுமா அப்படிக் கொல்லைப்புறமாக உள்ளே நுழைந்தான்.

''அண்ணி! ஓ மாலின் அண்ணி!'' எத்தனை தடவை அவன் அவளுக்கு அருகில் வந்து நின்று அவளை அழைத்திருப்பான்!

''என்ன ஜுமா?'' கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் ஒலித்தது குரல். தலையாரி முற்றத்தில் நிற்பதைக் கண்ட மாலின் தன்னைச் சமாளித்துக் கொண்டு கேட்டாள்.

'' அண்ணி ! வாயால் சொல்லக்கூடிய விஷயம் இல்லை. நேற்று இரவு இந்தக் கிராமத்தில் பெரிய அக்கிரமம் நடந்திருக்கிறது ! இந்த ஊரில் காவல் புரிந்து புரிந்தே என் தலை மயிர் வெளுத்திருக்கிறது. இப்படிப் பட்ட ஓர் அநியாயத்தை நான் இது வரை கண்டதில்லை. உன் மகள் மின்னி யாருடனோ ஆலமரத்தினடியிலே முகத்தில் கரிபூசிக் கொள்ளும் காரியத்தைச் செய்து கொண்டிருந்தாள். நிலவு இரவு. ஆனால் வானத்தில் மேகம் மூட்டம் போட்டிருந்தது. இரண்டு முறை நான் பத்தடி தூரத்தில் இவர்களுக்கு அருகாகக்கூடச் சென்றேன். ஒருவரோடு ஒருவர் அணைத்துக் கொண்டு.... அவர்களுக்கு நான் பக்கத்தில் வந்ததே தெரியாது. அப்படி மெய்ம்மறந்து கிடந்தனர். பிறகு வயல்களில் இறங்கி நடந்தனர். நான் இரவு முழுவதும் உன் வீட்டு வாசலில் வந்து பழியாகக் காவல் கிடந்தேன். வாயிற் கதவு திறந்து கிடந்தது. இவளுடைய திருமணத்துக்கு நான்கே நாட்கள்தான் பாக்கி. திருமண வீடு என்றால் நகைகளும் நட்டுகளும் நிரம்பிக் கிடக்காதா?

அதனால் பொழுது புலர்வதற்குச் சிறிது நேரம் வரை நான் இங்கிருந்து அசையவில்லை. அப்புறம் எப்படி எப்பொழுது இவன் உன் வீட்டுக்குள் நுழைந்தானோ, எனக்குத் தெரியாது. கீழ்ச் சாதிப் பயல் மகன்! நான் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு இவளை எப்படிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்திருக்கிறேன், தெரியுமா? என் பெண்ணாக மட்டும் இவள் இருந்திருந்தால் கழுத்தைத் திருகியிருப்பேன். நான் பின்புறத்துச் சுவர் ஏறிக் குதித்து வந்திருக்கிறேன், பிறருக்குத் தெரியக்கூடாது என்பதற்காக. பொழுது விடிந்ததும் விடியாததுமாக எங்கேடா புறப்பட்டு விட்டாய் என்று யாராவது கேட்டால் நான் என்ன பதில் சொல்வது? அதனால் தான்......'' என்றான்.

மாலின் வாய்க்கு நாவில்லை, பேச! விழித்த விழி விழித்தபடி இருக்க அவள் தலையாரி ஜுமாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஷயத்தைக் கூறி முடித்ததும் ஜுமா வந்த வழியாகவே திரும்பிப் போய்விட்டான்.

ஜுமா போனதும், எதிர்த்தாற்போலத் தெருவில் ரத்னு ஜமீந்தார் சிங்கமென உறுமிக் கொண்டு, ஆள் உயரத் தடியோடு அவள் வீட்டு முற்றத்தில் அவள் எதிரே ஆஜரானான். கோபம் அவன் விழிகளை இரத்தக் களறியாக்கியிருந்தது.

'' எங்கே உன் மகள்?'' வாசலில் நுழையும் பொழுதே கர்ஜித்தான்: ''எங்கே, அந்தக் குடிகேடி? என் வயல்தான் அகப்பட்டதோ, ஈனச் செயல் புரிய?'' ரத்னு துள்ளித் துள்ளிக் குதித்தான். மனத்தில் தோன்றிய வசவுகளையெல்லாம் வாய்வழியே உமிழ்ந்து, அவன் தெருவையே கூட்டிவிட்டான். அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் வாசலில் வந்து எட்டிப் பார்க்கலாயினர்.

''நான் என் கண்களாலேயே பார்த்தேன். விடியற்காலையில் நான் கிணற்றங்கரைக்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது இந்தக் கண்களாலேயே கண்டேன். முதலில் இவன் வயலிலிருந்து வெளியே வந்தான்; ஜிகினா தைத்த தாவணியால் தன் முகம் மறைத்திருந்தாள் அப்பொழுது. எங்கோ வெளியே — இனியே போய் விட்டு வருகிறாளாக்கும் என்று நான் எண்ணினேன். ஒரு நிமிஷம் கழித்துப் பார்த்தால், இவள் தோழன் ஒருவன் இன்னொருபுறமாக வரப் பேறிக் கொண்டிருந்தான்!''

''ஏன் பொய் சொல்கிறீங்க, சித்தப்பா?'' இடியெனக் கர்ஜித்துக் கொண்டு மின்னி கூட்டத்தை விலக்கியவாறு முன்னே வந்தாள். அவள் கோயிலிலிருந்து எப்பொழுது திரும்பினாளோ, தெரியாது! அவள் கூட்டத்துக்குப் பின்னால் நின்று கொண்டு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

''நானா பொய் சொல்கிறேன், கீழ்ச் சாதிப் பயல் மகளே! நானா பொய் சொல்கிறேன், குடிகேடி? இந்தச் சிவப்பு வளையல் யாருடையது? என் வயலில் உடைந்து கிடந்ததே!'' என்று கேட்ட ரத்னு தன் போர்வைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த சிவப்பு வளையல் துண்டை எடுத்து மின்னியின் கைகளில் வைத்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னி தன் கைவளையல்களை எண்ணினாள். பதினொன்று தான் இருந்தன. அவள் அயர்ந்து போய்ப் பேய் அறைந்தாற்போலாகி விட்டாள். அவள் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

அப்புறம்.....? தெருப் பெண்கள் பார்வையிலேயே ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர். முதல் நாள் மின்னி வளையல்கள் அடுக்கிக் கொண்டதை அவர்கள் நேரிலேயே பார்த்திருக்கிறார்கள். பத்துக்கு இரண்டு அதிகம் என்று கணக்குப் போட்டு வைத்திருந்தார்கள்! அவள் சிவப்பு நிறத்தைத் தேடிப் பொறுக்கிப் போட்டுக் கொண்டதும் அவர்களுக்குத் தெரியும்.

மக்கள் கூட்டம் முற்றம் முழுவதிலும் நிரம்பி வழிந்தது. மாலினுக்குச் சம்பந்தியாக வரப் போகிறவர் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு நுழைந்தார். அவருக்குப் பின்னால் மின்னிக்கு மாமியாராகப் போகிறவளும் இருந்தாள். அவர்கள் அந்தத் தட்டுகள், துணிமணிகள், பணம் காசுகள்; சுற்று மோதிரங்கள் — எல்லாவற்றையும் மாலினுக்கெதிரே கொண்டு வந்து விட்டெறிந்தார்கள்! ஒன்றும் புரியாமல் ஊர் ஜனங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பெண்கள் அடிக்கடி 'சிவ, சிவா!' என்று காதுகளில் கைவைத்தனர். இளம் பெண்களோ வாயில் விரலை வைத்துக் கடித்துக் கொண்டனர்.

இதே நேரத்தில் 'தடாம்' என்று யாரோ பக்கத்துக் கிணற்றில் விழும் ஓசை கேட்டது. எல்லோருக்கும் மேல்மூச்சு மேலேயும் கீழ் மூச்சு கீழேயும் தங்கி விட்டன. மக்கள் முன்னும் பின்னும் பார்த்தார்கள். மாலினின் பசுப் போன்ற சாதுப் பெண் மின்னி — நல்லொழுக்கம் நிறைந்த மின்னி — கண்களில் தென்படவில்லை. மின்னி உரக்கப் பேசி அவர்கள் அறியார்கள். உண்மையான நன்முத்து அவள். காலையிலும் மாலையிலும் கோயிலில் ஆண்டவனெதிரே கைகூப்பி வணங்கி நிற்பாளே, அந்த மின்னியை எங்குமே காணோம்! அவ்வளவுதான்! ஒரு மூச்சில் அத்தனை பேரும் கிணற்றடிக்கு ஓடினார்கள்.

மாலின், தான் உட்கார்ந்திருந்த மனையில் ஆணி வைத்து அறைந்தாற்போல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவள் வீட்டு முற்றம் சூன்யமாகக் கிடந்தது. பேய் அறைந்தாற்போல! அக்கம் பக்கத்து மக்களும், ஊர் ஜனங்களும் கிணற்றுப் பக்கம் ஓடியிருந்தார்கள்!

தாயைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பாமல், பழியைச் சுமந்து கொண்டு வாழவும் முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்டு நிம்மதி பெற்று விட்டாள் மின்னி.

நான் செய்த பாவத்தையும், பழியையும் மகள்மேல் சுமத்த நேர்ந்ததையும், அவள் மரணத்துக்குத் தான் காரணமானதையும் எண்ணி எண்ணி, வினாடிப் போதும் இடைவெளியின்றி வேதனையால் மனம் புழுங்க, உயிரோடிருக்கும் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் மாலின். — ரா. வீ.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

இவன்தான் ராஜு


மிகச் சிறந்த மாணவன் • கிரிக்கெட்டில் சூரன் • சுறுசுறுப்பே உருவானவன்



எது 'அதுவோ' அதேதான் அவனுக்கு வேணும்

ராஜு விரைவில் பெரிய வனாக விரும்புகிறான். அவனுடைய சீரான வளர்ச்சிக்கு நாள்தோறும் அவன் தாயார் ''ஹார்லிக்ஸ்'' அளிக்கிறார். தூய்மையான ஆடைநிறைந்த பால், செழுமையான கோதுமை, மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள் அடங்கியது ''ஹார்லிக்ஸ்''.

80 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்வது ''ஹார்லிக்ஸ்'' ஒன்றைத்தான். நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் தெம்போடு விளங்க நாள்தோறும் ''ஹார்லிக்ஸ்'' அருந்துங்கள்.



'ஹார்லிக்ஸ்'– ஆம் அதேதான்!

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon